# சைவ வினா விடை,

## இரண்டாம் புத்தகம்

M. NADARAJAH
Asst. Director of Physical Education
Zonal Education
Valikamam, Channakam

N. Gargini
year 9
Hindu ladies girls
college

யாழ்ப்பாணத்து - நல்லூர்

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்**

செய்தது.

சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம்.
1995

அன்பளிப்பு

சிவமயம்

# சைவ வினா விடை

இரண்டாம் புத்தகம்

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்

செய்தது

## தோத்திரத் திரட்டுடன்

வெளியீடு

சைவ பரிபாலன சபை

யாழ்ப்பாணம்

1995

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பதியியல் | 1 - 5 |
| 2. | பசுவியல் | 5 - 11 |
| 3. | பாசவியல் | 11 - 13 |
| 4. | வேதாகமவியல் | 14 - 21 |
| 5. | சைவபேதவியல் | 21 - 28 |
| 6. | விபூதியியல் | 28 - 33 |
| 7. | உருத்திராஷவியல் | 33 - 35 |
| 8. | பஞ்சாஷரவியல் | 36 - 42 |
| 9. | சிவலிங்கவியல் | 42 - 51 |
| 10. | நித்தியகருமவியல் | 51 - 65 |
| 11. | சிவாலயகைங்கரியவியல் | 65 - 76 |
| 12. | சிவாலயதரிசனவியல் | 77 - 82 |
| 13. | குருசங்கம சேவையியல் | 83 - 92 |
| 14. | மாகேசுர பூசையியல் | 93 - 97 |
| 15. | விரதவியல் | 98 - 107 |
| 16. | அன்பியல் | 107 - 110 |
| | தோத்திரத் திரட்டு | 111 - 137 |
| | திருநீற்றுப்பதிகம் | 138 - 139 |
| | கோளறு பதிகம் | 140 - 143 |
| | திருவெம்பாவை | 143 - 149 |
| | பெரிய புராணச் செய்யுள் | 149 - 152 |



அச்சுப் பதிப்பு:

சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, யாழ்ப்பாண

உ

கணபதி துணை

# சைவ வினா விடை

## இரண்டாம் புத்தகம்

### 1. பதியியல்

1. உலகத்துக்குக் கருத்தா யாவர்?

சிவபெருமான்.

2. சிவபெருமான் எப்படிப்பட்டவர்?

நித்தியரும், சருவவியாபகரும், அநாதிமலமுத்தரும் சருவஞ்சரும், சருவகர்த்தாவும், நித்தியானந்தரும், சுவதந்திரருமாய் உள்ளவர்.

3. நித்தியர் என்பது முதலிய சொற்களுக்குப் பொருள் என்னை?

நித்தியர் = என்றும் உள்ளவர். சருவவியாபகர் = எங்கும் நிறைந்தவர். அநாதிமலமுத்தர் = இயல்பாகவே பாசங்களின் நீங்கினவர். சருவஞ்சர் = எல்லாம் அறிபவர். சருவகர்த்தா = எல்லாஞ் செய்பவர். நித்தியானந்தர் = என்றும் மகிழ்ச்சியுடையவர். சுவதந்திரர் = தம்வயமுடையவர்.

4. சிவபெருமான் செய்யுந் தொழில்கள் எவை?

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்துமாம்.

5. இவ்வைந்தொழிலுஞ் சிவபெருமான் செய்வது தம்பொருட்டோ பிறர்பொருட்டோ?

தம்பொருட்டன்று; ஆன்மாக்களாகிய பிறர் பொருட்டே. [ஆன்மா, பசு, புற்கலன் என்பவை ஒரு பொருட் சொற்கள்.]

6. படைத்தலாவது யாது?

ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களை முதற்காரணத்தினின்றுந் தோற்றுவித்தல்.

7. காத்தலாவது யாது?

தோற்றுவிக்கப்பட்ட தனு கரண புவன போகங்களை நிறுத்துதல்.

8. அழித்தலாவது யாது?

தனு கரண புவன போகங்களை முதற் காரணத்தில் ஒடுக்குதல்.

9. மறைத்தலாவது யாது?

ஆன்மாக்களை இருவினைப் பயன்களாகிய போக்கியப் பொருள்களில் அமிழ்த்துதல்.

10. அருளலாவது யாது?

ஆன்மாக்களுக்குப் பாசத்தை நீக்கிச் சிவத்துவத்தை விளக்குதல்.

11. தனு கரண புவன போகம் என்றது என்னை?

தனு = உடம்பு. கரணம் = மன முதலிய கருவி; புவனம் = உடம்புக்கு ஆதாரமாகிய உலகம். போகம் = அநுபவிக்கப்படும் பொருள்.

**12. ஒரு காரியத்துக்குக் காரணம் எத்தனை?**

முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் என மூன்றாம். குடமாகிய காரியத்துக்கு முதற்காரணம் மண், துணைக்காரணம் திரிகை, நிமித்தக்காரணம் குயவன்.

**13. தனு கரண புவன போகம் எனப்படும் பிரபஞ்சமாகிய காரியத்துக்கு முதற்காரணம் துணைக்காரணம் நிமித்தகாரணம் எவை?**

முதற்காரணம் சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி என மூன்று; துணைக்காரணம் சிவசக்தி; நிமித்த காரணம் சிவபெருமான்.

**14. சிவசத்தியாவது யாது?**

அக்கினியோடு சூடுபோலச் சிவத்தோடு பிரிவின்றி உள்ளதாகிய வல்லமை.

**15. சிவபெருமானுக்கு உரிய வடிவம் எவை?**

அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூன்றுமாம்.

**16. சிவபெருமான் இம் மூவகைத் திருமேனியுடையபொழுது எவ்வெப் பெயர் பெறுவர்?**

அருவத்திருமேனியுடைய பொழுது சிவன் எனவும் அருவுருவத் திருமேனியுடைய பொழுது சதாசிவன் எனவும், உருவத் திருமேனியுடைய பொழுது மகேசுரன் எனவும் பெயர் பெறுவர்.

**17. சிவபெருமானுடைய உருவம் ஆன்மாக்களாகிய நம்போலிகளுடைய உருவம்போன்றதா?**

ஆன்மாக்களுடைய உருவம் இருவினைக்கு ஈடாகத் தோல் எலும்பு முதலிய தாதுக்களால் உண்டாகிய உருவம்; சிவபெருமானுடைய உருவம், ஆன்மாக்கள் செய்யுந் தியானம் பூசை முதலியவைகளின் பொருட்டுச் சிவசக்தியாகிய திருவருட் குணங்களுள் இன்னது இன்னது இன்ன இன்ன அவயவம் என்று பாவிக்கப்படும உருவம்.

18. சிவபெருமான் ஐந்தொழிலுந் தாமே செய்வாரா?

சுத்தமாயையிற் கிருத்தியம் ஐந்துந் தாமே செய்வார்: அசுத்தமாயையிற் கிருத்தியம் ஐந்தும் அனந்தேசுரரை அதிட்டித்து நின்று செய்வார்; பிரகிருதியின் கீழ் உள்ள கிருத்தியம் ஐந்தும் அவ்வனந்தேசுரர் வாயிலாக ஸ்ரீகண்டருத்திரரை அதிட்டித்து நின்று செய்வார்; ஸ்ரீகண்டருத்திரர் பிரமாவை அதிட்டித்து நின்று படைத்தலும், விஷ்ணுவை அதிட்டித்து நின்று காத்தலும், காலருத்திரரை அதிட்டித்து நின்று அழித்தலுஞ் செய்வார். [அதிட்டித்தல் = நிலைக்களமாகக் கொண்டு செலுத்துதல்.]

19. ஸ்ரீ கண்டருத்திரர் இன்னும் எப்படிப்பட்டவர்?

சைவாகமங்களை அறிவிக்கும் ஆசாரியர்; பிரம விட்டுணு முதலிய தேவர்களுக்கும இருஷிகளுக்கும் அறுபத்துமூவர் முதலாயினோர்களுக்கும் நிக்கிரக அநுக்கிரகங்களைச் செய்யுங் கருத்தா; சைவத்திற் புகுந்து சமயதீக்ஷை பெற்றவர்கள் வழிபடும் மூர்த்தி.

20. பிரமா, விட்டுணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் என்னும் ஐவருடைய சத்திகளுக்குப் பெயர் என்னை?

பிரமாவினுடைய சத்தி சரஸ்வதி; விட்டுணுவினுடைய சத்தி இலக்குமி; உருத்திரனுடைய சத்தி

M. NADARAJAH
Asst. Director of Physical Education
Zonal Education
Valikamam, Channakam.

உமை; மகேசுரனுடைய சத்தி மகேச்சுவரி; சதாசிவனுடைய சத்தி மனோன்மணி.

21. ஆன்மாக்களாலே பூசித்து வழிபடப்படுஞ் சதாசிவ வடிவம் யாது?

பீடமும் இலிங்கமுமாகிய கன்மசாதாக்கிய வடிவமாம். பீடஞ் சிவசத்தி, இலிங்கஞ் சிவம்.

22. இலிங்கம் என்பதற்குப் பொருள் என்னை?

படைத்தல் காத்தல் முதலியவைகளினால் உலகத்தைச் சித்திரிப்பது. [லிங்க = சித்திரித்தல்]

23 மகேசுர வடிவம் எத்தனை?

சந்திரசேகரர், உமாமகேசர், இடபாருடர், சபாபதி, கல்யாணசுந்தரர், பிக்ஷாடனர், காமாரி, காலாரி, திரிபுராரி, சலந்தராரி, மாதங்காரி, வீரபத்திரர், ஹரியர்த்தர், அர்த்தநாரீசுரர், கிராதர், கங்காளர், சண்டேசாநுக்கிரகர், நீலகண்டர், சக்கரப்பிரதர், கசமுகாநுக்கிரகர், சோமாஸ்கந்தர், ஏகபாதர், சுகாசினர், தக்ஷிணாமூர்த்தி, லிங்கோற்பவர் என்னும் இருபத்தைந்துமாம்.

திருச்சிற்றம்பலம்

## 2- பசுவியல்

24. ஆன்மாக்களாவார் யாவர்?

நித்தியமாய், வியாபகமாய்ச், சேதனமாய்ப், பாசத்தடையுடையோராய்ச், சார்ந்ததன் வண்ணமாய்ச், சரீரந்தோறும் வெவ்வேறாய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அநுபவிப்போராய்ச், சிற்றறிவுஞ்

சிறுதொழிலும் உடையோராய்த், தமக்கு ஒரு தலைவனை உடையவராய் இருப்பவர். [சேதனம் = அறிவுடைப்பொருள்]

25. ஆன்மாக்கள் எடுக்கும் சரீரம் எத்தனை வகைப்படும்?

தூலசரீரம், சூக்குமசரீரம் என இரண்டுவகைப்படும்.

26. தூல சரீரமாவது யாது?

சாதி குலம் பிறப்பு முதலியவைகளால் அபிமானஞ் செய்தற்கு இடமாய்ப், பிருதுவி அப்பு தேயு வாயு ஆகாசம் என்னும் ஐந்து பூதமுங் கூடிப் பரிணமித்த உருவுடம்பு. [பரிணமித்தல் = உருத்திரிதல்]

27. சூக்கும சரீரமாவது யாது?

சத்த ஸ்பரிச ரூப ரச கந்தம் என்னும் காரண தன்மாத்திரை யைந்தும் மனம் புத்தி அகங்காரம் என்னும் அந்தக்கரண மூன்றுமாகிய எட்டினாலும் ஆக்கப்பட்டு ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாய், அவ்வவ் வான்மாக்கள் போகம் அநுபவித்தற்குக் கருவியாய், ஆயுள் முடிவன் முன்னுடம்பு விட்டு மற்றொருடமபு எடுத்தற்கு ஏதுவாய் இருக்கும் அருவுடம்பு.

28. ஆன்மாக்கள் எப்படிப் பிறந்திறந்து உழலும்?

நல்வினை தீவினை என்னும் இருவினைக்கு ஈடாக, நால்வகைத் தோற்றத்தையும், எழுவகைப் பிறப்பையும் எண்பத்துநான்கு நூறாயிர யோனி பேதத்தையும் உடையவைகளாய்ப், பிறந்திறந்து உழலும்.

29. நால்வகைத் தோற்றங்களாவன யாவை?

அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம் என்பவைகளாம். அண்டசம் = முட்டையிற் றோன்றுவன. சுவேதசம் = வேர்வையிற் றோன்றுவன, உற்பிச்

சம் = வித்து வேர் கிழங்கு முதலியவைகளை மேற் பிளந்து தோன்றுவன. சராயுசம் = கருப்பையிற் றோன்றுவன.

30. எழுவகைப் பிறப்புக்களாவன யாவை?

தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பவைகளாம். இவ்வெழுவகையினுள்ளும் முன்னின்ற ஆறும் இயங்கியற் பொருள்கள்; இறுதியில் நின்ற தாவரங்கள் நிலையியற் பொருள்கள். இயங்கியற் பொருளின் பெயர் சங்கமம், சரம்; நிலையியற் பொருளின் பெயர் தாவரம், அசரம்.

31. கருப்பையிலே பிறப்பன யாவை?

தேவர்களும் மனிதர்களும், நாற்கால் விலங்குளுமாம்.

32. முட்டையிலே பிறப்பன யாவை?

பறவைகளும், ஊர்வனவும், நீர்வாழ்வனவுமாம்.

33. வேர்வையிலே பிறப்பன யாவை?

கிருமி, கீடம், பேன் முதலிய சில ஊர்வனவும், விட்டில் முதலிய சில பறவைகளுமாம்.

34. வித்தினும் வேர் கொம்பு கொடி கிழங்குகளினும் பிறப்பன யாவை?

தாவரங்கள்.

35. எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதங்கள் எவை?

| | | |
|---|---|---|
| 1. தேவர் | — 11,00,000 | யோனி பேதம் |
| 2. மனிதர் | ... 9,00,000 | ,, |
| 3. நாற்கால் விலங்கு | ... 10,00,000 | ,, |
| 4. பறவை | ... 10,00,000 | ,, |
| 5. ஊர்வன | ... 15,00,000 | ,, |
| 6. நீர்வாழ்வன | ... 10,00,000 | ,, |
| 7. தாவரம் | — 19,00,000 | ,, |
| ஆக | 84,00,000 | யோனி பேதம் |

36. ஆன்மாக்கள் வினைகளைச் செய்தற்கும் வினைப் பயன்களை அநுபவித்தற்கும் இடம் எவை?

இருவினைகளைச் செய்தற்கும் இருவினைப் பயன்களை அநுபவித்தற்கும் இடம் பூமி; நல்வினைப் பயனை அநுபவித்தற்கு இடஞ் சுவர்க்க முதலிய மேலுலகங்கள்; தீவினைப் பயனை அநுபவித்தற்கு இடம் இருபத்தெட்டுக்கோடி நரகங்கள்.

37. பூமியிலே பிறந்த ஆன்மாக்கள் சரீரத்தை விட்டவுடனே யாது செய்யும்?

நல்வினை செய்த ஆன்மாக்கள், தூல சரீரத்தை விட்டவுடனே, சூக்கும சரீரத்தோடு பூதசார சரீரமாகிய தேவ சரீரத்தை எடுத்துக்கொண்டு, சுவர்க்கத்திலே போய், அந்நல்வினைப் பயனாகிய இன்பத்தை அநுபவிக்கும். தீவினை செய்த ஆன்மாக்கள், தூலசரீரத்தை விட்டவுடனே, சூக்கும சரீரத்தோடு பூத சரீரமாகிய யாதனா சரீரத்தை எடுத்துக்கொண்டு, நரகத்திலே போய், அத்தீவினைப் பயனாகிய துன்பத்தை அநுபவிக்கும். இப்படியன்றி, ஒரு தூல சரீரத்தை விட்டவுடனே, பூமியிலே தானே ஒரு யோனி

வாய்ப்பட்டு, மற்றொரு தூல சரீரத்தை எடுப்பதும் உண்டு.

38. சுவர்க்கத்திலே இன்பம் அநுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?

தொலையாது எஞ்சிநின்ற கன்மசேடத்தினாலே திரும்பப் பூமியிலே வந்து மனிதர்களாய்ப் பிறக்கும்.

39. நரகத்திலே துன்பம் அநுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?

தொலையாது எஞ்சிநின்ற கன்மசேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து, முன்பு தாவரங்களாயும், பின்பு நீர்வாழ்வனவாயும், பின்பு ஊர்வனவாயும், பின்பு பறவைகளாயும், பின்பு விலங்குகளாயும் பிறந்து, பின்பு முன் செய்த நல்வினை வந்து பொருந்த மனிதர்களாய்ப் பிறக்கும்.

40. எழுவகைப் பிறப்பினுள்ளும் எந்தப் பிறப்பு அருமையுடையது?

பசுபதியாகிய சிவபெருமானை அறிந்து வழிபட்டு முத்தியின்பம் பெற்றுய்தற்குக் கருவியாதலால் மனிதப் பிறப்பே மிக அருமையுடையது.

41. மனிதப் பிறப்பை எடுத்த ஆன்மாக்களுக்கு எப்பொழுது அம்முத்தி சித்திக்கும்?

அவர்கள் தங்கள் தங்கள் பக்குவத்துக்கு ஏற்பப், படிமுறையினாலே. பிறவிதோறும் பௌத்தம் முதலிய புறச்சமயங்களில் ஏறி ஏறி அவ்வச் சமயத்துக்கு உரிய நூல்களில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்வர்கள்; பின்பு அப்புண்ணிய மேலீட்டினாலே வைதிக நெறியை அடைந்து, வேதத்தில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்வர்கள்; பின்பு அப் புண்

ணிய மேலீட்டினாலே சைவசமயத்தை அடைவர்கள்; சைவசமயத்தை அடைந்து சிவாகமத்தில் விதிக்கப் பட்ட சரியை கிரியை யோகங்களை விதிப்படி மெய் யன்போடு அநுட்டித்தவருக்குச் சிவபெருமான் ஞான சாரியரை அதிட்டித்து வந்து சிவஞானம் வாயிலாக உண்மை முத்தியைக் கொடுத்தருளுவர்.

42. புறச்சமயங்களின் வழியே ஒழுகினவர்களுக்கு யாவர் பலங் கொடுப்பார்?

புறச்சமயிகளுக்கு, அவ்வவரால் உத்தேசித்து வழிப டப்படுந் தெய்வத்தைச் சிவபெருமானே தமது சத் தியினாலே அதிட்டித்து நின்று, அவ்வவ் வழிபாடு கண்டு பலங் கொடுப்பார்.

43. சரியையாவது யாது?

சிவாலயத்துக்குஞ் சிவனடியார்களுக்குந் தொண்டு செய்தல்.

44. கிரியையாவது யாது?

சிவலிங்கப்பெருமானை அகத்தும் புறத்தும் பூசித்தல்

45. யோகமாவது யாது?

விடயங்களின் வழியே போகாவண்ணம் மனத்தை நிறுத்திச், சிவத்தைத் தியானித்துப் பின்பு தியானிப் போனாகிய தானுந் தியானமுந் தோன்றாது தியா னப்பொருளாகிய சிவம் ஒன்றே விளங்கப் பெறுதல்.

46. ஞானமாவது யாது?

பதி பசு பாசம் என்னும் முப்பொருள்களின் இலக் கணங்களை அறிவிக்கும் ஞான நூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடல்.

47. சரியை கிரியை யோகம் ஞானம் என்னும் நான்கினாலும் அடையும் பலங்கள் யாவை?

சரியையினால் அடையும் பலஞ் சிவசாலோக்கியமும், கிரியையினால் அடையும் பலஞ் சிவசாமீப்பியமும், யோகத்தினால் அடையும் பலஞ் சிவசாரூப்பியமுமாம். இம்மூன்றும் பதமுத்தி. ஞானத்தினால் அடையும் பலஞ் சிவசாயுச்சிமாகிய பரமுத்தி.

திருச்சிற்றம்பலம்

## 3. பாசவியல்

48. பாசங்களாவன யாவை?

ஆன்மாக்களைப் பந்தித்து நிற்பனவைகளாம். [பந்தித்தல் = கட்டுதல். பாசம், மலம் என்பனவை ஒரு பொருட் சொற்கள்.]

49. பாசம் எத்தனை வகைப்படும்?

ஆணவம், கன்மம், மாயை என மூவகைப்படும். இம் மூன்றோடு, மாயேயம், திரோதாயி என இரண்டு கூட்டிப் பாசம் ஐந்து என்று கொள்வதும் உண்டு.

50. ஆணவமாவது யாது?

செம்பிற் களிம்புபோல ஆன்மாக்களின் அநாதியே உடன் கலந்து நிற்பதாய், ஒன்றேயாய் ஆன்மாக்கள் தோறும் வெவ்வேறாகி அவர்களுடைய அறிவையுந் தொழிலையும் மறைத்து நின்று தத்தங் காலவெல்லை யிலே நீங்கும் அநேக சக்திகளை யுடையதாய்ச் சடமாய் இருப்பது.

51. கன்மமாவன யாவை?

ஆன்மாக்கள் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலே செய்த புண்ணிய பாவங்கள். இவை எடுத்த

பிறப்பிலே செய்யப்பட்ட பொழுது, ஆகாமியம் எனப் பெயர் பெறும். பிறவிதோறும் இப்படி ஈட்டப்பட்டுப் பக்குவப்படும் வரையும் புத்திதத்துவம் பற்றுக்கோடாக மாயையிலே கிடக்கும் பொழுது சஞ்சிதம் எனப் பெயர் பெறும்; இச்சஞ்சித கன்மங்களுள்ளே பக்குவப்பட்டவை, மேல் எடுக்கும் உடம்பையும் அது கொண்டு அநுபவிக்கப்படும் இன்ப துன்பங்களையுந் தந்து பயன்படும் பொழுது, பிராரத்தம் எனப் பெயர் பெறும்.

52. மாயை எத்தனை வகைப்படும்?

சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதிமாயை என மூன்று வகைப்படும். இவைகளுள்ளே, சுத்தமாயை அசுத்தமாயை இரண்டும் நித்தியம். பிரகிருதிமாயை, அசுத்தமாயையினின்றுந் தோன்றியதாதலால், அநித்தியம்.

53. சுத்த மாயையாவது யாது?

நித்தியமாய், வியாபகமாய், அருவமாய்ச், சடமாய்ச், சொல் வடிவமுஞ் சுத்தமாகிய பொருள்வடிவுந் தோன்றுதற்கு முதற்காரணமாய், மயக்கஞ் செய்யாததாய் இருப்பது.

54. அசுத்தமாயையாவது யாது?

நித்தியமாய், வியாபகமாய், அருவமாய்ச், சடமாய்ப், பிரளய காலத்திலே ஆன்மாக்களுடைய கன்மங்களுக்கு உறைவிடமாய், ஆன்மாக்களுக்குச் சுத்தாசுத்தமும் அசுத்தமுமாகிய தனு கரண புவன போகங்கள் தோன்றுதற்கு முதற்காரணமாய், மயக்கஞ் செய்வதாய் இருப்பது.

55. மாயேயமாவன யாவை?

மாயையால் ஆகிய தத்துவங்களும், அவைகளால் ஆகிய தனு கரண புவன போகங்களுமாம்.

56. திரோதாயியாவது யாது?

ஆணவங் கன்மம் மாயை என்னும் மும்மலங்களையுந் தொழிற்படுத்திப் பாகம் வருவிக்குஞ் சிவசத்தி; இது, மலத்தைச் செலுத்துதலினாலே, மலம் என உபசரிக்கப்பட்டது.

57. மாயாகாரியமாகிய தநு கரண புவன போகங்களைச் சிவபெருமான் ஆன்மாக்களுக்குக் கொடுப்பது எதன் பொருட்டு?

ஆன்மாக்களைப் பந்தித்த ஆணவமலமுங் கன்மமலமுமாகிய நோய்களைத் தீர்த்துச் சிவானந்தப் பெரும் பேற்றைக் கொடுக்கும் பொருட்டு.

58 தநு கரண முதலியவைகளும் மலமன்றோ? மல மென்பது அழுக்கன்றோ? ஆணவமாகிய அழுக்கை மாயா மலமாகிய அழுக்கினாலே எப்படிப் போக்கலாம்?

வண்ணான், கோடிப் புடவையிலே சாணியையும் உவர் மண்ணையும் பிசறி, மிகக் கறுத்தது என்னும்படி செய்து முன்னையதாகிய அழுக்கோடு பின்னையதாகிய அழுக்கையும் போக்கி, அப்புடைவையை மிக வெண்மையுடையதாகச் செய்வன்; அது போலவே சிவபெருமான் ஆன்மாவினிடத்தே மாயா மலத்தைக் கூட்டி, அநாதிபந்தமாகிய ஆணவமலத்தோடு ஆதிபந்தமாகிய மாயா மலத்தையுஞ் போக்கி, அவ்வான்மாவைச் சிவமாந்தன்மைப் பெருவாழ்வுடையதாகச் செய்வார்.

திருச்சிற்றம்பலம்

## 4. வேதாகம வியல்

59. சிவபெருமான் ஆன்மாக்கள் பொருட்டு அருளிச் செய்த முதனூல்கள் எவை?

வேதம், சிவாகமம் என்னும் இரண்டுமாம். வேதத்தின் பெயர் சுருதி, நிகமம். ஆகமத்தின் பெயர் தந்திரம், மந்திரம், சித்தாந்தம்.

60. வேதம் எத்தனை?

இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என நான்காம்.

61. சிவாகமம் எத்தனை?

காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விசயம், நிச்சுவாசம், சுவாயம் புவம், ஆக்கினேயம், வீரம், ரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், லளிதம், சித்தம், சந்தானம், சர்வோக்தம், பாரமேசுரம், கிரணம், வாதுளம் என இருபத்தெட்டாம்.

62. வேத நான்கும் எங்கே தோன்றின?

சதாசிவமூர்த்தியுடைய தற்புருட முகத்தினின்றும் இருக்குவேதமும், அகோரமுகத்தினின்றும் யசுர்வேதமும், வாமதேவமுகத்தினின்றுஞ் சாமவேதமும், சத்தியோசாத முகத்தினின்றும் அதர்வவேதமுந் தோன்றின.

63. சிவாகமமிருபத்தெட்டும் எங்கே தோன்றின?

சதாசிவமூர்த்தியுடைய உச்சிமுகமாகிய ஈசானத்தினின்றுந் தோன்றின.

64. வேத நான்கும் எத்தனை சாகையுடையன?

இருக்குவேதம் இருபத்தொரு சாகையும், யசுர்வே

தம் நூறுசாகையும், சாமவேதம் ஆயிரஞ் சாகையும் அதர்வவேதம் ஒன்பது சாகையும் உடையன.

65. **வேத நான்கும் தனித்தனி எத்தனை காண்ட முடையன ?**

பிரமகாண்டமும் பிரமகாண்டத்துக்கு நிமித்தமாகிய கர்மகாண்டமும் என இரண்டு காண்டமுடையன, பிரமகாண்டத்தின் பெயர் பிரபலசுருதி, வேதாந்தம், வேதசிரசு, உபநிடதம்: கருமகாண்டத்தின் பெயர் அற்பசுருதி.

66. **வேதத்துக்கு அங்கமாகிய நூல்கள் எவை ?**

சிக்ஷை, கற்பம், வியாகரணம், நிருத்தம், சந்தோ விசிதி, சோதிடம் என்னும் ஆறுமாம்.

67. **சிக்ஷையாவது யாது ?**

வேதங்களை உதாத்தம் அநுதாத்தம் முதலிய சுர வேறுபாட்டினால் உச்சரிக்கு முறைமையை அறிவிப்பது.

68. **கற்பமாவது யாது ?**

வேதங்களில் விதிக்கப்பட்ட கருமங்களை அநுட்டிக் கும் முறைமையை அறிவிப்பது.

69. **வியாகரணமாவது யாது ?**

வேதங்களில் எழுத்துச் சொற் பொருளிலக்கணங் களை அறிவிப்பது.

70. **நிருத்தமாவது யாது ?**

வேதங்களின் சொற்களுடைய பொருளை அறிவிப் பது.

71. **சந்தோவிசிதியாவது யாது ?**

வேதமந்திரங்களிற் காயத்திரி முதலிய சந்தங்களின்

பெயரையும் அவ்வவைகளுக்கு எழுத்து இவ்வளவென்பதையும் அறிவிப்பது.

72. சோதிடமாவது யாது?

வேதத்தில் விதிக்கப்பட்ட கருமங்களைச் செய்தற்கு உரிய காலவிசேஷங்களை அறிவிப்பது.

73. வேதத்துக்கு உபாங்கமாகிய நூல்கள் எவை?

புராணம், நியாயம், மீமாஞ்சை, மிருதி என்னும் நான்குமாம்.

74. புராணமாவது யாது?

பரமசிவன் உலகத்தைப் படைத்தல் அழித்தல் முதலியவைகளைக் கூறும் வேதவாக்கியப் பொருள்களை வலியுறுத்தி விரித்து அறிவிப்பது. உலகத்தினது தோற்றமும், ஒடுக்கமும், பாரம்பரியங்களும், மனுவந்தரங்களும், பாரம்பரியக் கதைகளுமாகிய இவ்வைந்தையுங் கூறுதலால், புராணம் பஞ்சலக்கணம் எனவும் பெயர் பெறும். இதிகாசமும் புராணத்தில் அடங்கும்.

75. நியாயமாவது யாது?

வேதப்பொருளை நிச்சயித்தற்கு அனுகூலமாகிய பிரமாணம் முதலியவைகளை அறிவிப்பது.

76. மீமாஞ்சையாவது யாது?

வேதப்பொருளினுடைய தாற்பரியத்தை அறிதற்கு அநுகூலமாகிய நியாயங்களை ஆராய்ச்சி செய்து அறிவிப்பது. அது பூருவமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை என இரண்டு வகைப்படும். பூருவமீமாஞ்சையின் பெயர் கருமமீமாஞ்சை. உத்திரமீமாஞ்சையின் பெயர் பிரமமீமாஞ்சை, வேதாந்த சூத்திரம்.

77. மிருதியாவது யாது?

அவ்வவ் வருணங்களுக்கும் ஆச்சிரமங்களுக்கும் உரிய தருமங்களை அறிவிப்பது.

78. உப வேதங்கள் எவை?

ஆயுர்வேதம், தனுர்வேதம், காந்தருவவேதம் அருத்தவேதம், என்னும் நான்குமாம்.

79. ஆயுர்வேதமாவது யாது?

எல்லாவற்றையும் அநுட்டித்தற்குச் சாதனமாகிய சரீரத்தை நோயின்றி நிலைபெறச் செய்தற்கு வேண்டப்படுமவைகளை அறிவிப்பது.

80. தனுர்வேதமாவது யாது?

பகைவர்களாலே நலியாது உலகத்தைக் காத்தற்கு வேண்டப்படும் படைக்கலப் பயிற்சியை அறிவிப்பது.

81. காந்தருவ வேதமாவது யாது?

கடவுளுக்கு மகிழ்ச்சியை விளைவிக்கும் இசை முதலியவைகளை அறிவிப்பது.

82. அருத்த வேதமாவது யாது?

இம்மைக்கும் மறுமைக்கும் ஏதுவாகிய பொருள்களைச் சம்பாதிக்கும் உபாயத்தை அறிவிப்பது.

83. சிவாகமம் இருபத்தெட்டுந் தனித்தனி எத்தனை பாதங்களுடையன?

ஞானபாதம், யோகபாதம், கிரியாபாதம், சரியாபாதம், என நான்கு பாதங்களுடையன.

84. சிவாகமங்களுக்கு வழி நூல்கள் எவை?

நாரசிங்கம் முதல் விசிவான்மகம் ஈறாகிய உபாகமங்கள் இருநூற்றேழுமாம். நாரசிங்கத்துக்கு மிருகேந்திரம் என்றும் பெயர்.

85. சிவாகமங்களுக்குச் சார்பு நூல்கள் எவை?

தத்துவப்பிரகாசிகை, தத்துவசங்கிரகம், தத்துவத்திரயநிர்ணயம், போககாரிகை, மோக்ஷகாரிகை, நாதகாரிகை, பரமோக்ஷ நிராச காரிகை, இரத்தினத்திரயம் என்னும் அட்டப்பிரகரண முதலியவைகளாம்.

86. வேதத்தை ஓதுதற்கு அதிகாரிகள் யாவர்?

உபநயனம் பெற்றவராகிய பிராமணர், க்ஷத்திரியர், வைசியர், என்னும் முதன் மூன்று வருணத்தார்.

87. சூத்திரரும் நான்கு வருணத்துப் பெண்களும் எதற்கு அதிகாரிகள்?

இதிகாசபுராண முதலியவைகளை ஓதுதற்கும், வேதத்தின் பொருளைக் கேட்டற்கும் அதிகாரிகள்.

88. சிவாகமத்தை ஓதுதற்கு அதிகாரிகள் யாவர்?

சிவாகமத்திற் கிரியாகாண்டம் ஓதுதற்கு விசேஷதீக்ஷை பெற்ற நான்கு வருணத்தாரும், ஞானகாண்டம் ஓதுதற்கு நிருவாணதீக்ஷை பெற்ற நான்கு வருணத்தாரும் அதிகாரிகள்.

89. பிராமணர் முதலிய முதன் மூன்று வருணத்தாருக்கும் எக்கிரியைகள் செய்யத் தக்கன?

உபநயன மாத்திரம் பெற்றவருக்கு வைதிகக்கிரியைகள் மாத்திரஞ் செய்யத்தக்கன; உபநயத்தோடு சிவதீக்ஷையும் பெற்றவருக்கு வைதிகக்கிரியைகளும் ஆகமக்கிரியைகளும் கலந்து செய்யத் தக்கன. ஆகமக்கிரியைகள் செய்யா தொழியின், அவர் பெற்ற சிவதீக்ஷையினால் ஒரு சிறிதும் பயனில்லை.

90. சூத்திரர் முதலாயினாருக்கு எக் கிரியைகள் செய்யத் தக்கன?

சிவதீக்ஷை பெற்ற சூத்திரருக்கும் அநுலோமருக்கும் ஆகமக்கிரியைகள் செய்யத் தக்கன. சிவதீக்ஷைபெறாத சூத்திரர் முதலானவருக்குப் பிரணவமின்றி நமோந்தமாகிய தேவதோத்திரங்களைக் கொண்டு கிரியைகள் செய்யத் தக்கன.

91. **வேதத்தின் ஞானகாண்டப் பொருளைச் சிவாகமத்துக்கு மாறுபடாவண்ணம் உள்ளபடி அறிவிக்குந் தமிழ் வேதங்கள் எவை?**

தேவாரம், திருவாசகம் என்னும் இரண்டுமாம்.

92. **தேவாரம் அருளிச் செய்தவர் யாவர்?**

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் மூவர்.

93. **திருவாசகம் அருளிச் செய்தவர் யாவர்?**

மாணிக்கவாசக சுவாமிகள்.

94. **திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய இந் நால்வரும் எவ்வாறு பெயர் பெறுவர்?**

சைவசமய குரவர் எனப் பெயர் பெறுவர்.

95. **சிவாகமத்தின் ஞானகாண்டப் பொருளைச் சுருக்கி இனிது விளக்குந் தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்கள் எவை?**

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்பநிராகரணம் என்னும் பதினான்குமாம்.

96. திருவுந்தியார்? அருளிச் செய்தவர் யாவர்?

உய்யவந்ததேவ நாயனார்.

97. திருக்களிற்றுப்படியார் அருளிச் செய்தவர் யாவர்?

திருக்கடவூர் உய்யவந்ததேவ நாயனார்; இவர் திருவுந்தியார் அருளிச்செய்த உய்யவந்ததேவர் நாயனாருடைய சீடராகிய திருவியலூர் ஆளுடையதேவ நாயனாருடைய சீடர்.

98. சிவஞானபோதம் அருளிச் செய்தவர்யாவர்?

திருவெண்ணை நல்லூர் மெய்கண்டதேவர். இவருக்குச் சுவேதவனப் பெருமான் என்பது பிள்ளைத் திருநாமம்.

99. சிவஞானசித்தியார், இருபாவிருபது என்னும் இரண்டும் அருளிச் செய்தவர் யாவர்?

சகலாகமபண்டிதர் என்னுங் காரணப்பெயர் பெற்ற திருத்துறையூர் அருணந்திசிவாசாரியார்; இவர் மெய்கண்டதேவருடைய சீடர் நாற்பத்தொன்பதின் மருள்ளே தலைவர்.

100. உண்மை விளக்கம் அருளிச் செய்தவர்யாவர்?

திருவதிகை மனவாசகங் கடந்தார்; இவர் மெய்கண்ட தேவருடைய சீடர்களுள் ஒருவர்.

101. எஞ்சி நின்ற சிவப்பிரகாசம் முதலிய எட்டும் அருளிச் செய்தவர் யாவர்?

கொற்றவன்குடி உமாபதிசிவாசாரியார்; இவர் தில்லைவாழந்தணர்களுள் ஒருவர்; இவர் அருணந்தி சிவாசாரியருடைய சீடராகிய திருப்பெண்ணாடகம் மறைஞான சம்பந்த சிவாசாரியருடைய சீடர்.

102. மெய்கண்டதேவர், அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்த சிவாசாரியர், உமாபதி சிவாசாரியர் என்னு நால்வரும் எவ்வாறு பெயர் பெறுவர்?

திருக்கைலாச பரம்பரைச் சந்தான குரவர் எனப் பெயர் பெறுவர்.

103. மெய்கண்டதேவருக்கு ஆசாரியர் யாவர்?

திருக்கைலாச மலையினின்றுந் தேவவிமானத்தின் மேற் கொண்டு எழுந்தருளிவந்த பரஞ்சோதி மகாமுனிவர்.

104. பரஞ்சோதி மகாமுனிவருக்கு ஆசாரியர் யாவர்?

சத்தியஞான தரிசனிகள்;

105. சத்தியஞான தரிசனிகளுக்கு ஆசாரியர் யாவர்?

சனற்குமார மகாமுனிவர்.

106. சனற்குமார மகாமுனிவருக்கு ஆசாரியர் யாவர்?

திருநந்திதேவர்;

107. திருநந்திதேவருக்கு ஆசாரியர் யாவர்?

ஸ்ரீகண்டபரமசிவன்;

திருச்சிற்றம்பலம்

## 5. சைவபேதவியல்

108. சிவபெருமானைச் சிவாகம விதிப்படி வழி

படுதற்கு யோக்கியதையைப் பிறப்பிப்பது யாது?

சிவதீக்ஷை.

109. சிவதீக்ஷை பெற்றபின் ஆவசியகமாக அநுட்டிக்கப்படுங் கருமங்கள் எவை?

இயமநியமங்களும், சந்தியாவந்தனம், சிவலிங்க பூசை, தேவார திருவாசக பாராயணம், சிவாலயகைங்கரியம், சிவாலய தரிசனம், குருவாக்கிய பரிபாலனம் இயன்றமட்டும் மகேசுரபூசை முதலியவைகளுமாம்.
[கைங்கரியம் = தொண்டு]

110. இமயம் என்பன எவை?

கொல்லாமை, வாய்மை, கள்ளாமை, பிறர் மனைவியரையும் பொதுமகளிரையும் விரும்பாமையாகிய ஆண்டகைமை, இரக்கம், வஞ்சனையில்லாமை, பொறையுடைமை, மனங்கலங்காமை, அற்பாகாரம், சுசியுடைமை என்னும் பத்துமாம்.

111. நியமம் என்பன எவை?

தவம், மனமுவந்திருத்தல், கடவுள், உண்டென்னும் விசுவாசம், பாவத்துக்குப் பயந்து தேடிய பொருளைச் சற்பாத்திரமா யுள்ளவருக்குக் கொடுத்தல், தன்னின் மூத்தோரை வழிபடுதல், உயிர்க்கு உறுதிபயக்கும் உண்மை நூல்களைக் கேட்டல், குலஞ் செல்வம் அதிகாரம் முதலியவைகளினாலே செருவம் இன்றி அடங்கியொழுகுதல், தக்கனவும் தகாதனவும் பகுத்தறிதல், செபம், விரதம் என்னும் பத்துமாம்,

112. அநுட்டிக்கலாகாத கருமங்கள் எவை?

சிவநிந்தை, குருநிந்தை, சிவனடியார் நிந்தை, சிவசாத்திரநிந்தை, தேவத்திரவியங்களை உபயோகஞ் செய்தல், உயிர்க்கொலை முதலியவைகளாம்.

**113. அநுட்டானத்தில் வழுவிய பாவங்கள் எப்படி நீங்கும்?**

அறியப்பட்ட பாவங்கள் பிராயச்சித்தங்களினாலே நீங்கும்; அறியப்படாத பாவங்கள் அந்தியேட்டிக் கிரியையினாலே நீங்கும்.

**114. தீக்ஷை பெற்றுந் தத்தமக்கு விதிக்கப்பட்ட சைவாசாரங்களை அநுட்டியாது விடுத்தவர் யாது பெறுவர்?**

பைசாசபுவனத்திற் பிசாசுகளாய் அங்குள்ள போகங்களை அநுபவிப்பர்.

**115. சிவ தீக்ஷை பெற்றுச் சிவபெருமானை வழிபடுவோர்கள் யாது பெயர் பெறுவார்கள்?**

சைவர் என்னும் பெயர் பெறுவார்கள்.

**116. சைவர்கள் சாதி பேதத்தினால் எத்தனை வகைப்படுவர்கள்?**

ஆதிசைவர், மகாசைவர், அநுசைவர், அவாந்தர சைவர், பிரவரசைவர், அந்தியசைவர் என அறு வகைப்படுவர்கள்.

**117. ஆதிசைவராவார் யாவர்?**

அநாதி சைவராகிய சதாசிவமூர்த்தியுடைய ஐந்து திருமுகங்களினுந் தீக்ஷிக்கப்பட்ட இருடிகளுடைய கோத்திரங்களிற் பிறந்தவராகிய சிவப்பிராமணர்.

**118. மகா சைவராவார் யாவர்?**

பிரமாவினுடைய முகங்களிற் றோன்றிய இருடிகளுடைய கோத்திரங்களிற் பிறந்தவராகிய வைதிகப் பிராமணருள்ளே சிவதீக்ஷை பெற்றவர்.

119. அநுசைவராவார் யாவர்?

சிவதீக்ஷை பெற்ற க்ஷத்திரியரும் வைசியரும்.

120. அவாந்தர சைவராவார் யாவர்?

சிவதீக்ஷை பெற்ற சூத்திரர்.

121. பிரவர சைவராவார் யாவர்?

சிவதீக்ஷை பெற்ற அநுலோமர்.

122. அந்திய சைவராவார் யாவர்?

சிவதீக்ஷை பெற்ற பிரதிலோமர் முதலிய மற்றச் சாதியார்.

123. சைவர்கள் தீக்ஷாபேதத்தினால் எத்தனை வகைப்படுவார்கள்?

சமய தீக்ஷிதர், விசேஷதீக்ஷிதர், நிருவாணதீக்ஷிதர் ஆசாரியர் என நால்வகைப்படுவார்கள்.

124. சமய தீக்ஷிதராவார் யாவர்?

சமயதீக்ஷை பெற்றுக்கொண்டு சந்தியாவந்தன மாத்திரமேனும், சந்தியாவந்தனம் சிவாலயப்பணி என்னும் இரண்டுமேனும் அநுட்டிப்பவர்.

125. சந்தியாவந்தன மாத்திரம் அநுட்டிக்குஞ் சமயிகள் யாது பெயர் பெறுவர்?

சந்தியோபாஸ்திபரர் என்னும் பெயர் பெறுவர். [உபாஸ்தி = வழிபாடு]

126. சந்தியாவந்தனஞ் சிவாலயப்பணி என்னும் இரண்டும் அநுட்டிக்குஞ் சமயிகள் யாது பெயர் பெறுவர்?

சிவகர்மரதர் என்னும் பெயர் பெறுவர். [ரதர் = விருப்பமுடையவர்.]

127. விசேஷ தீக்ஷிதராவார் யாவர் ?

சமயதீக்ஷை விசேஷதீக்ஷை என்னும் இரண்டும்பெற்றுக்கொண்டு, சந்தியாவந்தனஞ், சிவலிங்கபூசை என்னும் இரண்டும் அநுட்டிப்பவர்.

128. நிருவாண தீக்ஷிதராவார் யாவர் ?

சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை என்னும் மூன்றும் பெற்றுக்கொண்டு, சந்தியாவந்தனஞ் சிவலிங்கபூசை என்னும் இரண்டோடுஞானபூசையும் அநுட்டிப்பவர்.

129. ஞானபூசை யென்பது யென்னை ?

ஞானநூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங்களை விதிப்படியே ஓதல், ஓதுவித்தல், அவைகளின் பொருளைக் கேட்டல், கேட்பித்தல், கேட்டதைச் சிந்தித்தல் என்னு ஐந்துமாம்.

130. ஆசாரியராவார் யாவர் ?

சமயதீக்ஷை விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை, ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றுக்கொண்டு, நித்திய கருமங்களோடு தீக்ஷை பிரதிட்டை முதலிய கிரியைகளுஞ் செய்பவர்.

131. ஆசாரியராதற்கு யோக்கியர் யாவர் ?

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருள்ளும் மனக்குற்றங்களும் உடற்குற்றங்களும் இல்லாதவராய் நிகண்டு கற்று இலக்கிய வாராய்ச்சி செய்து இலக்கணமுந் தருக்கமும் நீதிநூல்களுஞ் சிவபுராணங்களும் படித்தறிந்தவராய், தேவார திருவாசகங்களைப் பண்ணோடு ஓதினவராய், சைவாகமங்களை ஓதி, அவைகளால் உணர்த்தப்படும் நான்கு பாதங்களையும் அறிந்தவராய், சீடர்களுக்கு நல்லொழுக்கத்தையுஞ் சைவசமயத்தையும் போதித்தலின்கண் அதி சமர்த்தராய் உள்ளவர்.

**132. ஆசாரியராதற்கு யோக்கிய ரல்லாதவர் யாவர்?**

நான்கு வருணத்துக் குட்படாதவன், கணவன் இருக்கக் கள்ளக்கணவனுக்குப் பிறந்தவனாகிய குண்டகன், கணவன் இறந்த பின் கள்ளக்கணவனுக்கு விதவையிடத்துப் பிறந்தவனாகிய கோளகன், வியபிசாரஞ் செய்த மனைவியை விலக்காதவன், குருடன், ஒற்றைநகக் கண்ணன், செவிடன், மூடவன், சொத்திக்கையன், உறுப்புக் குறைந்தவன், உறுப்பு மிகுந்தவன், தீராவியாதியாளன், பதினாறு வயசுக்கு உட்பட்டவன், எழுபது வயசுக்கு மேற்பட்டவன், கொலை களவு முதலிய தீயொழுக்க முடையவன், சைவாகம வுணர்ச்சியில்லாதவன் முதலானவர்.

**133. இக்குற்ற முடைய ஆசாரியரைக்கொண்டு தீக்ஷை, பிரதிட்டை முதலியன செய்வித்தவர் யாது பெறுவர்?**

அவைகளால் ஆகும் பயனை இழந்து, நரகத்தில் வீழ்ந்து வருந்துவர். ஆதலினாலே, குருலக்கணங்கள் அமையப்பெற்ற ஆசாரியரைக் கொண்டே தீக்ஷை, பிரதிட்டை முதலியன செய்வித்துக் கொள்ளல் வேண்டும்.

**134. இன்ன இன்ன வருணத்தார் இன்ன இன்ன வருணத்தாருக்கு ஆசாரிய ராகலாம் என்னும் நியமம் உண்டோ?**

ஆம்; பிராமணர் பிராமணர் முதலிய நான்கு வருணத்தாருக்கும், க்ஷத்திரியர் முதலிய மூன்று வருணத்தாருக்கும், வைசியர் வைசியர் முதலிய இரண்டு வருணத்தாருக்கும் சூத்திரர் சூத்திரருக்குஞ் சங்கரசாதியாருக்கும் ஆசாரியராகலாம்; இந்நியமங் கிரியாகாண்

டத்தின் மாத்திரமேயாம்; ஞானகாண்டத்திலோ வெனின், நான்கு வருணத்துள்ளும் உயர்ந்த வருணத்தாருக்குத் தாழ்ந்த வருணத்தாரும் ஆசாரியரா கலாம்.

135. **சிவஞானத்தை அடைய விரும்பிய சீடன் தான் அடைந்த ஆசாரியரிடத்தே சிவஞானம் இல்லையாயின், யாது செய்தல் வேண்டும்?**

வண்டானது தான் அடைந்த பூவினிடத்தே தேன் இல்லையாயின், அதனை விட்டுத் தேன் உள்ள பூவைத் தேடி அடைவது போலச், சீடன் தான் அடைந்த ஆசாரியரிடத்தே சிவஞானம் இல்லையாயின், அவரை விட்டுச் சிவஞானம் உள்ள ஆசாரியரைத் தேடியடையலாம்; அடையினும், மூன்று சந்தியினும், கிரியை உபதேசித்த முந்திய ஆசாரியரைத் தியானஞ் செய்து கொண்ட, ஞானம் உபதேசித்த பிந்திய ஆசாரியரைத் தியானஞ் செய்தல் வேண்டும்.

136. **இன்ன இன்ன வருணத்தார் இன்ன இன்ன தீக்ஷை பெறுதற்கு யோக்கியர் என்னும் நியமம் உண்டோ?**

ஆம்; நான்கு வருணத்தாரும் அநுலோமர் அறுவரும் ஆகிய பதினச் சாதியாரும் ஔத்திரி தீக்ஷை பெறுதற்கு யோக்கியர். மற்றைச் சாதியார் ஔத்திரி தீக்ஷைக்கு யோக்கியரல்லர்: ஔத்திரி தீக்ஷைக்கு அங்கமாகிய நயனதீக்ஷை, பரிசதீக்ஷை, வாசகதீக்ஷை, மானசதீக்ஷை, சாத்திரதீக்ஷை, யோகதீக்ஷை என்னும் ஆறனுள்ளுந் தத்தஞ் சாதிக்கும் பரிபக்குவத்துக்கும் ஏற்ற தீக்ஷை பெறுதற்கு யோக்கியர்: ஆசாரியர் தமது பாதோதகத்தைக் கொடுத்தலும் ஒரு தீக்ஷையாம்; சீடர் அதனைச் சிரத்தையோடும் ஏற்று சிரசின் மீது புரோக்ஷித்து ஆசமனஞ் செய்யக் கடவர்.

137. ஔத்திரி தீக்ஷையாவது யாது?

ஓமத்தோடு கூடச்செய்யப்படும் திக்ஷை.

[ஹோத்திரம் = ஓமம்]

138. ஔத்திரி தீக்ஷை எத்தனை வகைப்படும்?

ஞானாவதி, கிரியாவதி என இரண்டு வகைப்படும்.

139. ஞானவதி யாவது யாது?

குண்டம் மண்டலம் அக்கினி நெய் சுருக்குச் சுருவ முதலியவைகளெல்லாம் மனத்தாற் கற்பித்துக் கொண்டு, விதிப்படி அகத்தே ஆகுதி முதலிய கிரியை செய்து, சீடனது பாசத்தைக் கெடுக்குந் தீக்ஷையாம். இது சத்தி திக்ஷை எனவும் பெயர் பெறும்.

140. கிரியாவதி யாவது யாது?

குண்ட மண்டலங்களைப் புறத்தேயிட்டு விதிப்படி புறம்பே ஆகுதி முதலிய கிரியை செய்து, சீடனது பாசத்தைக் கெடுக்குந் திக்ஷையாம். இது மாந்திரிதிக்ஷை எனவும் பெயர்பெறும்.

141. ஞானவதி, கிரியாவதி என்னும் இரண்டுந் தனித்தனி எத்தனை வகைப்படும்?

சமயதிக்ஷை, விசேஷதிக்ஷை, நிருவாணதிக்ஷை என மூன்று வகைப்படும்.

திருச்சிற்றம்பலம்

## 6. விபூதியியல்

142. சைவர்களால் ஆவசியகமாகச் சரீரத்திலே தரிக்கற்பாலனவாகிய சிவசின்னங்கள் யாவை?

விபூதி, உருத்திராக்ஷம் என்னும் இரண்டுமாம்.

143. விபூதியாவது யாது?

பசுவின் சாணத்தை அக்கினியினாலே தகித்தலால்

உண்டாகிய திருநீறு. விபூதியின் பெயர் பசிதம், பசுமம், க்ஷாரம், இரக்ஷை.

144. எந்த நிற விபூதி தரிக்கத் தகும்?

வெண்ணிற விபூதியே தரிக்கத்தகும்; கருநிற விபூதியும், செந்நிற விபூதியும், புகைநிற விபூதியும், பொன்னிற விபூதியுந் தரிக்கலாகாது.

145. விபூதியை எப்படி எடுத்து வைத்துக்கொள்ளல் வேண்டும்?

புதுவஸ்திரத்தினாலே வடித்தெடுத்துப் புதுப்பாண்டத்தினுள்ளே இட்டு, மல்லிகை, முல்லை, பாதிரி, சிறுசண்பகம் முதலிய சுகந்த புஷ்பங்களை எடுத்து அதனுள்ளே போட்டுப், புதுவஸ்திரத்தினாலே அதன் வாயைக் கட்டி வைத்துக்கொள்ளல் வேண்டும்.

146. விபூதியை எதில் எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும்?

பட்டுப்பையிலேனும், சம்புடத்திலேனும், வில்வக் குடுக்கையிலேனும், சுரைக் குடுக்கையிலேனும், எடுத்து வைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும். குடுக்கைகளினன்றிப் பிறவற்றில் உள்ள விபூதியைக் கவிழ்க்கலாகாது.

147. விபூதியை எந்தத் திக்கு முகமாக இருந்துகொண்டு தரித்தல் வேண்டும்?

வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்துகொண்டு தரித்தல் வேண்டும்.

148. விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும்?

நிலத்திலே சிந்தா வண்ணம் அண்ணாந்து "சிவ சிவ," என்று சொல்லி, வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும்

தரித்தல் வேண்டும். இப்படியன்றி, நடுவிரல் ஆழி விரல்களினால் இடப்பக்கந் தொடுத்திழுத்துப் பெரு விரலினால் வலப்பக்கந் தொடுத்திழுத்துத் தரித்தலு மாம், வாயங்காந்து கொண்டும், தலை நடுங்கிக் கொண்டும், கவிழ்ந்து கொண்டுந் தரிக்கலாகாது. ஒரு விரலாலேனும் ஒரு கையாலேனுந் தரிக்கலாகாது.

149, விபூதி நிலத்திலே சிந்தினால், யாது செய் தல் வேண்டும்?

சிந்திய விபூதியை எடுத்துவிட்டு அந்தத் தலத்தைச் சுத்தி செய்தல் வேண்டும்.

150. எவ்வெவர் முன் எவ்வெப்பொழுது விபூதி தரிக்கலாகாது?

சண்டாளர் முன்னும், பாவிகள் முன்னும், அசுத்த நிலத்தும், வழி நடக்கும் போதும், கிடக்கும் போதுந் தரிக்கலாகாது.

151. எவ்வெக் காலங்களிலே விபூதி ஆவசியக மாகத் தரித்துக்கொள்ளல் வேண்டும்?

சந்தியாகால மூன்றினும், சூரியோதயத்தினும் சூரி யாஸ்தமயனத்தினும், ஸ்நானஞ் செய்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், போசனத்துக்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும், மலசல மோசனஞ் செய்து சௌசம் பண்ணி ஆசமித்த பின் னும், தீக்ஷையில்லாதவர் தீண்டிய போதும், பூனை கொக்கு எலி முதலியன தீண்டிய போதும், விபூதி ஆவ சியமாகத் தரித்தல் வேண்டும்.

152, விபூதி தரியாதவருடைய முகம் எதற்குச் சமமாகும்?

சுடுகாட்டுக்குச் சமமாகும்; ஆதலினால் விபூதி தரித் துக்கொண்டே புறத்திற் புறப்படல் வேண்டும்.

153. ஆசாரியராயினுஞ் சிவனடியாராயினும் விபூதி தந்தால், எப்படி வாங்கித் தரித்தல் வேண்டும்?

மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயினும் நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு, இரண்டு கைகளையும் நீட்டி வாங்கித் தரித்துக் கொண்டு, முன்போல மீட்டும் நமஸ்கரித்தல் வேண்டும்.

154. எப்படிப்பட்ட விபூதி தரிக்கலாகாது?

ஒருகையால் வாங்கிய விபூதியும், விலைக்குக் கொண்ட விபூதியும், சிவதீக்ஷையில்லாதார் தந்த விபூதியுந் தரிக்கலாகாது.

155. சுவாமி முன்னும் சிவாக்கினி முன்னும் குருமுன்னும் சிவனடியார் முன்னும் எப்படி நின்று விபூதி தரித்தல் வேண்டும்?

முகத்தைத் திருப்பிநின்று தரித்தல் வேண்டும்.

156. சுவாமிக்குச் சாத்தப்பட்ட விபூதிப்பிரசாதம் யாவராயினுங் கொண்டுவரின், யாது செய்தல் வேண்டும்?

கொண்டுவந்தவர் தீக்ஷை முதலியவற்றினாலே தம்மின் உயர்ந்தவராயின், அவரை நமஸ்கரித்து வாங்கித் தரித்தல் வேண்டும்; அப்படிப்பட்டவரல்லராயின், அவ்விபூதிப் பிரசாதத்தை ஒரு பாத்திரத்தில் வைப்பித்து, அதனைப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்து நமஸ்கரித்து எடுத்துத் தரித்தல் வேண்டும்.

157. விபூதிதாரணம் எத்தனை வகைப்படும்?

உத்தூளனம், திரிபுண்டரம் என இரண்டு வகைப்படும்.

158. திரிபுண்டரமாவது யாது?

முக்குறித் தொகுதி.

159. திரிபுண்டரம் எப்படித் தரித்தல்வேண்டும்?

வளையாமலும், இடையறாமலும், ஒன்றை ஒன்று நீண்டாமலும், மிக அகலாமலும், இடைவெளி ஒவ்வோரங்குல வளவினதாகத் தரித்தல் வேண்டும்.

160. திரிபுண்டரந் தரிக்கத் தக்க தானங்கள் யாவை?

சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு' முதுகு கழுத்து என்னும பதினாறுமாம்.

இவைகளுள், விலாப்புறம் இரண்டையும் நீக்கிக் காதுகள் இரண்டையுங் கொள்வதும் உண்டு. முழங்கைகளையும் மணிக்கட்டுகளையும் நீக்கிப் பன்னிரண்டு தானங் கொள்வதும் உண்டு.

161. திரிபுண்டரந் தரிக்குமிடத்து இன்ன இன்ன தானங்களில் இவ்வளவு இவ்வளவு நீளந் தரித்தல்வேண்டும்என்றும் நியமம்உண்டோ?

ஆம்; நெற்றியில் இரண்டு கடைப்புருவ வெல்லை நீளமும், மார்பிலும் புயங்களிலும் அவ்வா றங்குல நீளமும், மற்றைத் தானங்களில் ஒவ்வோ ரங்குல நீளமும் பொருந்தத் தரித்தல்வேண்டும். இவ் வெல்லையிற் கூடினும் குறையினுங் குற்றமாம்.

162. எல்லாரும் எப்பொழுதும் விபூதியை சலத்திற் குழைந்துத் தரிக்கலாமா?

தீக்ஷையுடையவர் சந்தியாகால மூன்றினுஞ் சலத்திற் குழைத்துத் தரிக்கலாம்; மற்றைக் காலங்களிற் சலத்

திற் குழையாமலே தரித்தல் வேண்டும்: தீக்ஷையில் லாதவர் மத்தியானத்துக்குப்பின் சலத்திற் குழையா மலே தரித்தல் வேண்டும்.

163. விபூதிதாரணம் எதற்கு அறிகுறி?

ஞானாக்கினியினாலே தகிக்கப்பட்ட பசுமல நீக்கத்தில் விளங்குஞ் சிவத்துவப்பேற்றிற்கு அறிகுறி.

திருச்சிற்றம்பலம்.

## 7. உருத்திராக்ஷவியல்

164. உருத்திராக்ஷமாவது யாது?

தேவர்கள் திரிபுரத்தசுரர்களாலே தங்களுக்கு நிகழ்ந்த துன்பத்தை விண்ணப்பஞ்செய்து கொண்டபொழுது, திருக்கைலாசபதியுடைய மூன்று திருக்கண்களினின்றும் பொழிந்த நீரிற் றோன்றிய மணியாம்.

165. உருத்திராக்ஷந் தரித்தற்கு யோக்கியர் யாவர்?

மதுபானமும் மாமிச போசனமும் இல்லாதவராய், ஆசாரமுடையவராய் உள்ளவர்.

166. உருத்திராக்ஷந் தரித்துக்கொண்டு மதுபானம் மாமிச போசனம் முதலியவை செய்தவர் யாது பெறுவர்?

தப்பாது நரகத்தில் வீழ்ந்து, துன்பத்தை அநுபவிப்பர்.

167. எவ்வெக் காலங்களில் உருத்திராக்ஷம் ஆவசியகமாகத் தரித்துக்கொள்ளல் வேண்டும்?

சந்தியாவந்தனம், சிவமந்திரசெபம், சிவபூசை, சிவத்தியானம், சிவாலயதரிசனம், சிவபுராணம் படித்தல், சிவபுராணங் கேட்டல், சிராத்தம் முதலியவை செய்யுங் காலங்களில் ஆவசியகமாகத் தரித்துக்கொள்ளல் வேண்டும்; தரித்துக்கொள்ளாது இவை செய்தவருக்குப் பலம் அற்பம்.

168. ஸ்நான காலத்தில் உருத்திராக்ஷ தாரணங் கூடாதா?

கூடும்; ஸ்நானஞ் செய்யும்பொழுது உருத்திராக்ஷ மணியிற் பட்டு வடியுஞ் சலம் கங்காசலத்துக்குச் சமமாகும்.

169. உருத்திராக்ஷத்தில் எத்தனை முகமணி முதல் எத்தனை முகமணிவரையும் உண்டு?

ஒருமுக மணி முதற் பதினாறுமுக மணிவரையும் உண்டு.

170. உருத்திராக்ஷ மணியை எப்படிக் கோத்துத் தரித்தல் வேண்டும்?

பொன்னாயினும், வெள்ளியாயினும், தாமிரமாயினும், முத்தாயினும், பவளமாயினும், பளிங்காயினும் இடையிடையே இட்டு, முகத்தோடு முகமும், அடியோடு அடியும், பொருந்தக் கோத்துத் தரித்தல் வேண்டும்.

171. உருத்திராக்ஷந் தரிக்கத் தக்க தானங்கள் யாவை?

குடுமி, தலை, காதுகள், கழுத்து, மார்பு, புயங்கள் கைகள், பூணூல் என்பவைகளாம்.

**172. இன்ன இன்ன தானங்களில் இத்தனை இத்தனை மணி தரித்தல் வேண்டும் என்னும் நியமம் உண்டோ?**

ஆம்; குடுமியிலும் பூணூலிலும் ஒவ்வொரு மணியும், தலையிலே இருபத்திரண்டு மணியும், காதுகளிலே ஒவ்வொரு மணி அல்லது அவ்வாறு மணியும், கழுத்திலே முப்பத்திரண்டு மணியும், புயங்களிலே தனித்தனி பதினாறு மணியும், கைகளிலே தனித்தனி பன்னிரண்டு மணியும், மார்பிலே நூற்றெட்டு மணியும் தரித்தல் வேண்டும்; குடுமியும் பூணூலும் ஒழிந்த மற்றைத் தானங்களிலே அவ்வத் தானங் கொண்ட அளவு மணி தரித்தலும ஆகும்.

**173. இந்தத் தானங்களெல்லாவற்றினும் எப்போதும் உருத்திராக்ஷந் தரித்துக்கொள்ளலாமா?**

குடுமியிலும், காதுகளிலும், பூணூலிலும் எப்போதுந் தரித்துக்கொள்ளலாம்; மற்றைத் தானங்களிலேயாவெனின்; சயனத்திலும், மலசல மோசனத்திலும், நோயினும், சனனாசௌச மரணாசௌசங்களினுந் தரித்துக்கொள்ள லாகாது.

**174. உருத்திராக்ஷதாரணம் எதற்கு அறிகுறி?**

சிவபெருமானுடைய திருக்கண்ணிற றோன்றுந் திருவருட்பேற்றிற்கு அறிகுறி.

திருச்சிற்றம்பலம்

## 8. பஞ்சாக்ஷரவியல்

175. சைவர்களாலே நியமமாகச் செபிக்கற்பாலதாகிய சிவமூலமந்திரம் யாது?

ஸ்ரீ பஞ்சாக்ஷரம்.

176. ஸ்ரீ பஞ்சாக்ஷர செபத்துக்கு யோக்கியர் யாவர்?

மதுபானமும் மாமிச போசனமும் இல்லாதவராய், ஆசாரமுடையவராய், சிவ தீக்ஷை பெற்றவராய், உள்ளவர்.

177. ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை எப்படி பெற்றுக்கொள்ளல் வேண்டும்?

தத்தம் வருணத்துக்கும் ஆச்சிரமத்துக்குந் தீக்ஷைக்கும் ஏற்பக் குருமுகமாகவே பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

178. மந்திரோபதேசம் பெற்றவர் குருவுக்கு யாது செய்து கொண்டு செபித்தல் வேண்டும்?

குருவை வழிபட்டு, அவருக்கு வருஷந்தோறும் இயன்றதக்ஷிணை கொடுத்துக்கொண்டே செபித்தல் வேண்டும்.

179. ஸ்ரீ பஞ்சாக்ஷரத்திலே நியமமாக ஒரு காலத்துக்கு எத்தனை உருச் செபித்தல் வேண்டும்?

நூற்றெட்டுருவாயினும், ஐம்பதுருவாயினும், இருபத்தைந் துருவாயினும், பத்துருவாயினும் நியமமாகச் செபித்தல் வேண்டும்.

180. செபத்துக்கு எதைக்கொண்டு உரு எண்ணல் வேண்டும்?

செபமாலையைக் கொண்டாயினும், வலக்கை விரலிறையைக் கொண்டாயினும், உரு எண்ணல் வேண்டும்.

181. செபமாலையை என்ன மணி கொண்டு செய்வது உத்தமம்?

உருத்திராக்ஷமணி கொண்டு செய்வது உத்தமம்.

182. செபமாலைக்கு எத்தனை மணி கொள்ளத்தகும்?

இல்வாழ்வான் இருபத்தேழு மணியும், துறவி இருபத்தைந்து மணியுங் கொள்ளத் தகும். இல்வாழ்வான் நூற்றெட்டு மணி ஐம்பத்துநான்கு மணிகளாலுஞ் செபமாலை செய்து கொள்ளலாம.

183. செபமாலைக்கு எல்லா முகமணியும் ஆகுமா?

இரண்டுமுக மணியும் மூன்றுமுக மணியும, பன்னிரண்டுமுக மணியும், பதின்மூன்றுமுக மணியுஞ் செபமாலைக்கு ஆகாவாம்; அன்றியும், எல்லா மணியும் ஒரே விதமாகிய முகங்களை யுடையனவாகவே கொள்ளல் வேண்டுப; பலவிதமாகிய முகமணிகளையுங் கலந்து கோத்த செபமாலை குற்ற முடைத்து.

184. செபமணிகளை எதினாலே கோத்தல் வேண்டும்?

வெண்பட்டிலேனும் பருத்தியிலேனும் இருபத்தேழிழையினாலாக்கிய கயிற்றினாலே கோத்தல் வேண்டும்;

185. செபமாலையை எப்படிச் செய்தல் வேண்டும்?

முகத்தோடு முகமும் அடியோடு அடியும் பொருந்தக் கோத்து, ஒன்றை ஒன்று தீண்டா வண்ணம் இடையிடையே நாகபாசம் பிரமக்கிரந்தி சாவித்திரி என்பவைகளுள் இயன்றதொரு முடிச்சையிட்டு, வடநுனி இரண்டையும் ஒன்றாகக் கூட்டி, அதிலே நாயகமணியை ஏறிட்டுக் கோத்து, முடிந்து கொள்ளல் வேண்டும். நாயகமணிக்கு மேரு என்றும் பெயர்.

186. செபமாவது யாது?

தியானிக்கப்படும் பொருளை எதிர்முகமாக்கும் பொருட்டு அதனை உணர்த்தும் மந்திரத்தை உச்சரித்தலாம்.

187. மந்திரம் என்பதற்குப் பொருள் யாது?

நினைப்பவனைக் காப்பது என்பது பொருள். ஆகவே, மந்திரம் என்னும் பெயர், நினைப்பவனைக் காக்கும் இயல்புடைய வாச்சியமாகிய சிவத்துக்குஞ் சிவசக்திக்குமே செல்லும்; ஆயினும், வாச்சியத்துக்கும் வாசகத்துக்கும் பேதமில்லாமை பற்றி, உபசாரத்தால் வாசகத்துக்குஞ் செல்லும்; எனவே, மந்திரம் வாச்சிய மந்திரம் வாசகமந்திரம் என இருதிறப்படும் என்றபடியாயிற்று. [மந் = நினைப்பவன்; திர = காப்பது]

188. மந்திரசெபம் எத்தனை வகைப்படும்?

மானசம், உபாஞ்சு, வாசகம் என மூவகைப்படும்.

189. மானசமாவது யாது?

நா நுனி உதட்டைத் தீண்டாமல், ஒருமை பொருந்தி மனசினாலே செபித்தலாம்.

190. உபாஞ்சுவாவது யாது?

தன் செவிக்கு மாத்திரங் கேட்கும்படி, நா நுனி உதட்டைத் தீண்ட மெள்ளச் செபித்தலாம். இதற்கு மந்தம் என்றும் பெயர்.

**191. வாசகமாவது யாது?**

அருகிலிருக்கும் பிறர் செவிக்குங் கேட்கும்படி செபித்தலாம்; இதற்குப் பாஷ்யம் என்றும் பெயர்.

**192. இம்மூவகைச் செபமும் பலத்தினால் ஏற்றக் குறைவு உடையனவா?**

ஆம்; வாசகம் நூறு மடங்கு பலமும், உபாஞ்சு பதினாயிர மடங்கு பலமும், மானசங் கோடி மடங்கு பலமுந் தரும்.

**193. எந்தத் திக்கு முகமாக எப்படி இருந்து செபித்தல் வேண்டும்?**

வடக்குமுக மாகவேனும், கிழக்குமுக மாகவேனும், மரப்பலகை, வஸ்திரம், இரத்தின கம்பளம், மான்றோல், புலித்தோல், தருப்பை என்னும் ஆசனங்களுள் இயன்ற தொன்றிலே, முழந்தாள் இரண்டையும் மடக்கி, காலோடு காலை அடக்கி, இடத் தொடையினுள்ளே வலப் புறங்காலை வைத்து, இரண்டு கண்களும் மூக்கு நுனியைப் பொருந்த, நிமிர்ந்திருந்து கொண்டு, செபித்தல் வேண்டும்.

**194. எப்படி இருந்து செபிக்கலாகாது?**

சட்டையிட்டுக் கொண்டும், சிரசில் வேட்டி கட்டிக் கொண்டும், போர்த்துக்கொண்டும், குடுமியை விரித்துக்கொண்டும், கௌபீனந் தரியாதும், வேட்டி தரியாதும், விரலிலே பவித்திரந் தரியாதும், பேசிக் கொண்டும், இருளில் இருந்துகொண்டும், நாய் கழுதை பன்றி முதலியவற்றையும் புலையர் முதலாயினோரையும் பார்த்துக்கொண்டுஞ் செபிக்கலாகாது; செபஞ் செய்யும்போது, கோபம், களிப்பு, கொட்டாவி, தும்மல், நித்திரை, சோம்பல், வாதம் முதலியவை ஆகாவாம்.

195. செபமாலை கொண்டு எப்படிச் செபித்தல் வேண்டும்?

பிறர் கண்ணுக்குப் புலப்படா வண்ணம் பரிவட்டத்தினால் மூடப்பட்ட செபமாலையை வாசகமாகச் செபிக்கிற் சுட்டுவிரலிலும், மந்தமாகச் செபிக்கின் நடுவிரலிலும் மாசனமாகச் செபிக்கின் ஆழிவிரலிலும் வைத்து, சிவபெருமானுடைய திருவடிகளை மனசிலே தியானித்துக் கொண்டு, பெருவிரலினாலே நாயக மணிக்கு அடுத்த முகமே னோக்கிய மணியை முதலாகத்தொட்டு ஒவ்வொரு மணியாகப் போகத்தின் பொருட்டுக் கீழ்நோக்கித் தள்ளியும், முத்தியின் பொருட்டு மேனோக்கித் தள்ளியுஞ் செபித்து, பின்பு நாயகமணி கைப்பட்டதாயின், அதனைக் கடவாது திரும்ப மறித்து வாங்கி அதனைத் திரும்பக் கையில் ஏறிட்டுச் செபித்தல் வேண்டும். செபிக்கும்போது, செபமாலையும் மணிகள் ஒன்றோடொன்று ஓசைப் படிற் பாவ முண்டாம்.

196. இன்ன இன்ன பொழுது செபித்தவர் போக மோக்ஷங்களுள் இன்னது இன்னது பெறுவர் என்னும் நியமம் உண்டா?

ஆம்: பிராணவாயுவானது இடப்பக்க நாடியாகிய இடையிலே நடக்கும் போது செபித்தவர் போகத்தையும், வலப்பக்க நாடியாகிய பிங்கலையிலே நடக்கும்போது செபித்தவர் மோக்ஷத்தையும், நடுநிற்கு நாடியாகிய சுழுமுனையிலே நடக்கும்போது செபித்தவர் போகம் மோக்ஷம் என்னும் இரண்டையும் பெறுவர்.

197. ஸ்ரீ பஞ்சாக்ஷரசெபம் எவ்வெக் காலங்களிலே விசேஷமாகச் செய்யத்தக்கது?

அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, விதிபாதயோகம், பன்னிரண்டு மாசப்பிறப்பு, இரகணம், சிவராத்திரி, அர்த்தோதயம், மகோதயம் முதலாகிய புண்ணிய காலங்களிலே புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்து தியானஞ் செப முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும்.

சித்திரை, ஐப்பசி என்னும் இவ்விரண்டு மாசப்பிறப்பும் விஷு எனப்படும்: இவைகளிலே, மாசம் பிறத்தற்கு முன் னெட்டு நாழிகையும் பின் னெட்டு நாழிகையும் புண்ணிய காலம். ஆடி மாசப்பிறப்புத் தக்ஷிணாயனம் எனப்படும்; இதிலே மாசம் பிறக்கு முன் பதினாறு நாழிகை புண்ணியகாலம்; தை மாசப் பிறப்பு உத்தராயணம் எனப்படும்; இதிலே, மாசம் பிறந்த பின் பதினாறு நாழிகை புண்ணிய காலம். கார்த்திகை, மாசி, வைகாசி, ஆவணி என்னும் இந் நான்கு மாசப்பிறப்பும் விட்டுணுபதி எனப்படும்; இவைகளிலே, மாசம் பிறக்கு முன் பதினாறு நாழிகை புண்ணிய காலம். ஆனி, புரட்டாசி, மார்கழி, பங்குனி என்னும் இந்நான்கு மாசப் பிறப்பும் சடசீதிமுகம் எனப்படும்; இவைகளிலே, மாசம் பிறந்த பின் பதினாறு நாழிகை புண்ணிய காலம். சூரிய கிரகணத்திலே பரிசகாலம் புண்ணிய காலம்; சந்திர கிரகணத்திலே விமோசன காலம் புண்ணிய காலம்.

அர்த்தோதயமாவது தை மாசத்திலே ஞாயிற்றுக் கிழமையும் அமாவாசையுந் திருவோண நக்ஷத்திரமும் விதிபாதயோகமுங் கூடிய காலம். மகோதயமாவது தை மாசத்திலே திங்கட்கிழமையும் அமாவாசையுந் திருவோண நக்ஷத்திரமும் விதிபாதயோகமுங் கூடிய காலம்.

198. ஸ்ரீ பஞ்சாக்ஷர செபத்தாற் பயன் என்னை?

ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தின் பொருளை அறிந்து, சிவபெருமான் ஆண்டவன் தான் அடிமையென்னு முறைமையை மனத்தகத்தே வழுவாமல் இருத்தி, அதனை விதிப்படி மெய்யன்போடு செபித்துக் கொண்டு வரின், விறகினிடத்தே அக்கினி பிரகாசித்தாற் போல, ஆன்மாவினிடத்தே சிவபெருமான் பிரகாசித்து, மும்மலங்களும் நீங்கும்படி ஞானானந்தத்தைப் பிரசாதித்தருளுவர்.

திருச்சிற்றம்பலம்

## 9. சிவலிங்கவியல்

199. சிவபெருமானை ஆன்மாக்கள் வழிபடும் இடங்கள் எவை?

சிவபெருமான், புறத்தே சிவலிங்க முதலிய திருமேனிகளும் குருவுஞ் சங்கமுமாம ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக்கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். ஆதலால், ஆன்மாக்கள் அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம். சிவத்துக்குப் பெயராகிய இலிங்கம் என்னும் பதம், உபசாரத்தால், அச்சிவம் விளங்கப்பெறும் ஆதாரமாகிய சைல முதலியவற்றிற்கும் வழங்கும். [ சைலம் = சிலையா லாகியது ]

200. சிவபெருமான் இவ்விடங்களின் நிற்பர் என்றது, அவர் எங்கும் வியாபகர் என்றதனோடு மாறுபடுமன்றோ?

மாறுபடாது; சிவபெருமான், எங்கும் வியாபகமாய் நிற்பினும், இவ்விடங்களின் மாத்திரமே தயிரில் நெய் போல விளங்கி நிற்பர்; மற்றை இடங்களிலெல்லாம் பாலில் நெய் போல வெளிப்படாது நிற்பர்.

201. சிவலிங்கம் எத்தனை வகைப்படும்?

பரார்த்தலிங்கம், இட்டலிங்கம் என இருவகைப் படும்.

202. பரார்த்த லிங்கமாவது யாது?

சிவபெருமான் சங்கார காலம்வரையுஞ் சாந்நித்தி யராய் இருந்து ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கப் பெ றும் இலிங்கமாம். இது, தாவரலிங்கம் எனவும், பெயர் பெறும். சாந்நித்யம் = அண்மை, அடுத்தல், வெளிப் படுதல் தாவரம் எனினும், திரம் எனினும், நிலை யியற் பொருள் எனினும் பொருந்தும்.

203. பரார்த்தலிங்கம் எத்தனை வகைப்படும்?

சுயம்புலிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிட லிங்கம், மானுடலிங்கம் என ஐவகைப்படும். இவை களுள்ளே, சுயம்புலிங்கமாவது தானே தோன்றியது: காணலிங்கமாவது விநாயகர் சுப்பிரமணியர் முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது. தைவிகலிங்கமாவது விட்டுணு முதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது: ஆரிடலிங்கமாவது இருடிகளாற் றாபிக்கப்பட்டது, அசுரர் இராக்கதர் முதலாயினாராற் றாபிக்கப்பட்ட தும அது. மானுடலிங்கமாவது மனிதராற் றாபிக்கப் பட்டது.

204. இவ் வகை யிலிங்கங்களும் ஏற்றக்குறைவு உடையனவா?

ஆம்; மானுடலிங்கத்தின் உயர்ந்தது ஆரிடலிங்கம்; அதனின் உயர்ந்தது தைவிகலிங்கம்; அதனின் உயர்ந் தது காணலிங்கம்; அதனின் உயர்ந்தது சுயம்புலிங்கம்.

205. பரார்த்தலிங்கப் பிரதிட்டை, பாரர்த்தபூசை, உற்சவம் முதலியவை செய்தற்கு அதிகாரி கள் யாவர்?

ஆதிசைவர்களுள்ளே, சமயதீக்ஷை, விசேஷதீக்ஷை, நிருவாணதீக்ஷை ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றவர்களாய்ச் சைவாகமங்களிலே மகாபாண்டித்திய முடையவர்களாய் உள்ளவர்கள்.

206. திருக்கோயிலுள் இருக்குஞ் சிவலிங்க முதலிய திருமேனிகள் எல்லாராலுமே வழிபடற்பாலனவா?

ஆம்; சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாராலும் வழிபடற் பாலனவேயாம்; ஆயினும், அவ்வழிபாடு அவரவர் கருத்து வகையால் வேறுபடும்; படவே, அவருக்குச் சிவபெருமான் அருள் செய்யும் முறைமையும் வேறுபடும்.

207. சிவலிங்க முதலிய திருமேனிகளைச் சரியையாளர்கள் எக்கருத்துப்பற்றி வழிபடுவார்கள்? அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?

சரியையாளர்கள் பகுத்தறிதலில்லாது சிவலிங்க முதலிய திருமேனியே சிவமெனக்கண்டு வழிபடுவர்கள்; அவர்களுக்குச் சிவபெருமான் அங்கே வெளிப்படாது நின்று அருள் செய்வர்.

208. கிரியையாளர்கள் எக்கருத்துப் பற்றி வழிபடுவார்கள்? அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?

கிரியையாளர்கள் அருவப்பொருளாகிய சிவபிரான் ஈசான முதலிய மந்திரங்களினாலே சிவலிங்க முதலிய திருவுருக் கொண்டார் என்று தெளிந்து, மந்திர நியாசத்தினால் வழிபடுவர்கள்; அவர்களுக்குச் சிவபெருமான், கடைந்த பொழுது தோன்றும் அக்கினி போல

அவ்வம் மந்திரங்களினாலும் அவ்வவர் விரும்பிய வடிவமாய், அவ்வத் திருமேனிகளில் அவ்வப் பொழுது தோன்றி நின்று, அருள செய்வர்.

209. **யோகிகள் எக்கருத்துப் பற்றி வழிபடுவர்கள்? அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?**

யோகிகள், யோகிகளுடைய இருதயமெங்கும் இருக்குஞ் சிவபெருமான் இந்தத் திருமேனியிலும் இருந்து பூசைகொண்டருளுவர் என்று தெளிந்து, சாத்திய மந்திரங்களினால் வழிபடுவர்கள்; அவர்களுக்குச் சிவபெருமான், கறந்த பொழுது தோன்றும் பால் போல, அவ்வம் மந்திரங்களினால் அவ்வவர் விரும்பிய வடிவமாய், அவ்வத் திருமேனிகளில் அவ்வப்பொழுது தோன்றி நின்று அருள் செய்வர்.

210. **ஞானிகள் எக்கருத்துப் பற்றி வழிபடுவர்கள்? அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?**

ஞானிகள் மேலே சொல்லப்பட்ட முத்திறத்தாரும் போல ஒரிடமாகக் குறியாது அன்பு மாத்திரத்தால் அங்கே வழிபடுவர்கள்; அவர்களுக்குச் சிவபெருமான், கன்றை நினைந்த தலையீற்றுப் பசுவின் முலைப்பால் போலக், கருணை மிகுதியினால் அவ்வன்பே தாமாகி, எவ்பொழுதும் வெளிப்பட்டு நின்று அங்கே அருள் செய்வர்.

211. **சிவபெருமானுடைய திருவுருவஞ் சிவசத்தி வடிவம் என்று முன் சொல்லப்பட்டதன்றோ; இங்கே அவர் திருவுருவம் மந்திர வடிவம் என்றது என்னை?**

சிவபெருமானுக்கு வாச்சியமந்திரமாகிய சிவசத்தியே உண்மை வடிவம்; அச்சிவசத்தி, கரியினிடத்தே அக்கினி போல, வாசகமந்திரத்தினிடத்தே நின்று சாதகருக்குப் பயன் கொடுக்கும். ஆதலினாலே, சிவபெருமானுக்குச், சிவசத்தியினால், வாசகமந்திரத்தோடு சம்பந்தம் உண்டு; அச்சம்பந்தம்பற்றி வாசகமந்திரஞ் சிவபெருமானுக்கு உபசார வடிவமாம்.

212. மந்திரநியாசம் என்றது என்ன?

வாச்சியமந்திரங்களாகிய சிவசக்தி பேதங்களை உள்ளத்திலே சிந்தித்து, அவைகளை அறிவிக்கும் வாசகமந்திரங்களை உபசரித்துச், சிவபெருமானுக்கு உபசார வடிவத்தை அம்மந்திரங்களினாலே சிர முதலாக அமைத்தலாம். [நியசித்தல் = வைத்தல், பதித்தல்]

213. இட்டலிங்கமாவது யாது?

ஆசாரியர் விசேஷதிக்ஷை பண்ணி, சீடனைப் பார்த்து "நீ உள்ளளவுங் கைவிடாது இவரை நாடோறும் பூசி" என்று அநுமதி செய்து, "அடியேன் இச்சரீரம் உள்ளவரையுஞ் சிவபூசை செய்தன்றி ஒன்றும் உட்கொள்ளேன்" என்று பிரதிஞ்ஞை செய்வித்துக் கொண்டு கொடுக்க, அவன் வாங்கிப் பூசிக்கும் இலிங்கமாம். இது, ஆன்மார்த்தலிங்கம் எனவும், சலலிங்கம் எனவும் பெயர் பெறும்.

214. இட்டலிங்கம் எத்தனை வகைப்படும்?

வாணலிங்கம், படிகலிங்கம், இரத்தினலிங்கம், லோகஜலிங்கம், சைலலிங்கம், க்ஷணிகலிங்கம் எனப் பல வகைப்படும்.

215. இட்டலிங்க பூசைக்கு அதிகாரிகள் யாவர்?

பிராமணர் முதலிய நான்கு வருணத்தாரும் அநுலோமர் அறுவருமாகிய பத்துச் சாதியாருள்ளும், அங்

சகினரல்லாதவர்கள் இட்டலிங்க பூசைக்கு அதிகாரிகள்; இவர்களுள்ளும், பிணியில்லாதவராய், இடம்பொருளேவல்கள் உடையராய்ச், சிவபூசா விதி பிராயச்சித்த விதி மார்கழி மாசத்துக் கிருதாபிஷேக முதலாகப் பன்னிரண்டு மாசமுஞ் செய்யப்படும் மாசபூசா விதி சாம்வற்சரிகப் பிராயச் சித்தமாகச் சாத்தப்படும் பவித்திர விதி முதலியவைகளை நன்றாக அறிந்தவராய், அறிந்தபடியே அநுட்டிக்க வல்லவராய் உள்ளவர் மாத்திரமே, வாண முதலிய சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்துக் கொண்டு பூசை பண்ணலாம். மற்றவரெல்லாரும் க்ஷணிகலிங்க பூசையே பண்ணக் கடவர். அவர் குளிக்கப் புகுந்து சேறு பூசிக் கொள்வது போலச் சிவலிங்கப் பிரதட்டை செய்வித்துக் கொள்ளப் புகுந்து பாவந் தேடிக் கொள்வது புத்தியன்று.

216. எவ்வகைப்பட்ட சிவலிங்கம் பிரதிட்டை செய்வித்துக் கொள்ளல் வேண்டும்?

சிவாகம விதிவிலக்குகளை ஆராய்ந்து, சிவலிங்கங்களைப் பரீக்ஷை செய்து, யாதொரு குற்றமும் இல்லாததாய் நல்லிலக்கணங்கள் அமையப்பெற்றதாய் உள்ள சிவலிங்கத்தையே பிரதிட்டை செய்வித்துக் கொள்ளல் வேண்டும்.

217. க்ஷணிகலிங்கமாவது யாது?

பூசித்தவுடன் விடப்படும் இலிங்கமாம்.

218. க்ஷணிகலிங்கம் எத்தனை வகைப்படும்?

மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராக்ஷம், சந்தனம், கூர்ச்சம், புஷ்பமாலை, சருக்கரை, மா எனப் பன்னிரண்டு வகைப்படும்.

219. மேலே சொல்லப்பட்ட பத்துச் சாதியாருள் அங்கவீனரும் மற்றைச் சாதியாருஞ் சிவ பூசை பண்ணலாகாதா?

தங்கள் தங்கள் அதிகாரத்திற் கேற்ப ஆசாரியர் பண்ணிய தீக்ஷையைப் பெற்றுத் தூலலிங்கமாகிய தூபி யையேனுந் திருக்கோபுரத்தையேனும் பத்திர புஷ்பங் களால் அருச்சித்துத் தோத்திரஞ் செய்து நமஸ்கரிப் பதே அவர்களுக்குச் சிவபூசை; சூரியவிம்பத்தின் நடுவே சதாசிவமூர்த்தி அநவரதமும் எழுந்தருளி யிருப்பர் என்று நினைத்து அவருக்கு எதிராகப் புட்பங்களைத் தூவித் தோத்திரஞ் செய்து நமஸ்கரிப்பதும் அவர்க ளுக்குச் சிவபூசை.

220. சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொண்ட வர் பூசை பண்ணாது புசிக்கின் என்னை?

பூசை பண்ணாது புசிப்பது பெருங் கொடும் பாவம்; அப்படிப் புசிக்கும் அன்னம் புழுவுக்கும், பிணத்துக்கும், மலத்துக்குஞ் சமம்; அப்படிப் புசித்தவனைத் தீண்டல் காண்டல்களும் பாவம்; ஆதலால். ஒரோவிடத்துப் பூசை பண்ணாது புசித்தவன், ஆசாரியாரை அடைந்து அதற்குப் பிராயச்சித்தஞ் செய்து கொள்ளல் வேண்டும்.

221. ஞானநிட்டை யுடையவர் சிவபூசை முத லிய நியமங்களைச் செய்யாது நீக்கிவிட லாமா?

நித்திரை செய்வோர் கையிற் பொருள் அவர் அறியா மற்றானே நீங்குதல் போல, ஞானநிட்டை யுடையவருக்குச் சிவபூசை முதலிய நியமங்கள் தாமே நீங்கிற் குற்றமில்லை; அப்படி யன்றி அவர் தாமே அவைகளை நீக்குவாராயின், நரகத்துவீழ்தல் தப்பாது.

222 சிவபூசை எழுந்தருளப் பண்ணிக்கொண்டவர் சனன மரணா செளசங்களில் யாது செய்தல் வேண்டும்?

திடபத்தி யுடையவர் ஸ்நானஞ் செய்து ஈரவஸ்திரத்தைத் தரித்துக்கொண்டு, தாமே சிவபூசை பண்ணலாம்; ஸ்நானஞ் செய்தலை முதற்பூசை முடிவுவரையுந் தாமரையிலையில் நீர் போல அவரை ஆசௌசஞ் சாராது. திடபத்தி யில்லாதவர், ஆசௌசம் நீங்கும் வரையும், தம்முடைய ஆசாரியரைக் கொண்டாயினும் தம்மோடு ஒத்தாரைக் கொண்டாயினும் தம்முடைய பூசையைச் செய்வித்துத், தாம் அந்தரியாகஞ் செய்து கொண்டு, அப்பூசை முடிவிலே புறமண்டபத்தினின்று புட்பாஞ்சலித்திரயஞ் செய்து நமஸ்காரம் பண்ணல் வேண்டும்.

223. வியாதியினாலே தங்கை கால்கள் தம்வசமாகா திருப்பின் யாது செய்தல் வேண்டும்?

தம்முடைய ஆசாரியரைக் கொண்டாயினும், தம்மோடொத்தாரைக் கொண்டாயினும், தம்பூசையைச் செய்வித்துத் தாம் அந்தரியாகஞ் செய்தல் வேண்டும்.

224. சிவபூசை யெழுந்தருளப் பண்ணிக்கொண்ட பெண்கள் பூப்பு வந்தபோது யாது செய்தல் வேண்டும்?

மூன்று நாளும் பிறர் தண்ணீர் தர ஸ்நானஞ் செய்துகொண்டு, அந்தரியாகஞ் செய்தல் வேண்டும்; நான்கா நாள் ஸ்நானஞ்செய்து, பஞ்சகவ்வியமேனும் பாலேனும் உட்கொண்டு, மீட்டும் ஸ்நானஞ் செய்து, சிவபூசை செய்தல் வேண்டும். அம்மூன்று நாளும் அந்தரியாகஞ் செய்யாதொழியின், அக்குற்றம் போம்படி அகோரத்தை ஆயிரம் உருச் செபித்தல் வேண்டும்.

225. பெண்கள் தாம் பிரசவித்த சூதகம், தமக்குரியார் இறந்த ஆசௌசம், வியாதி இவைகள் வரின் யாது செய்தல் வேண்டும்?

வருணத்தாலுந் தீக்ஷையாலுந் தம்மோடொத்தவரைக் கொண்டு பூசை செய்வித்தல் வேண்டும்.

226. ஆசௌசம் வியாதி முதலியவை வந்தபோது பிறரைக்கொண்டு பூசை செய்வித்தவர் யாவரும், ஆசௌச முதலியவை நீங்கிய பின், யாது செய்தல் வேண்டும்?

பிராயச்சித்தத்தின் பொருட்டு அகோரத்தை முந்நூறுருச் செபித்துத் தாம் பூசை செய்தல் வேண்டும்

227. சிவலிங்கங் காணாவிடத்து யாது செய்தல் வேண்டும்?

அந்தரியாக பூசை செய்து, பால் பழ முதலியவற்றை உண்டு, நாற்பது நாள் இருத்தல் வேண்டும். அவ்வி லிங்கம் வராதொழியின், வேறோரிலிங்கத்தை ஆசாரியார் பிரதிட்டை செய்து தரக் கைக்கொண்டு, பூசை செய்தல் வேண்டும். அதன்பின் வந்ததாயின் அவ்வி லிங்கத்தையும் விடாது பூசை செய்தல் வேண்டும்;

228. சிவலிங்கப் பெருமானுக்கு விசேஷ பூசை செய்யத்தக்க காலங்கள் எவை?

பஞ்சாக்ஷரவியலிலே சொல்லப்பட்டவை முதலிய புண்ணிய காலங்களுஞ் சென்மத்திரயங்களுமாம். இன்னும், மார்கழி மாச முழுதினும் நாடோறும் நித்திய பூசையேயன்றி அதற்குமுன் உஷக்கால பூசையும் பண்ணல் வேண்டும், சிவராத்திரி தினத்திலே பகலில் நித்திய பூசையேயன்றி இராத்திரியில் நான்கு யாம

பூசையும் பண்ணல் வேண்டும்: (சென்மத்திரயங்களா வன பிறந்த நக்ஷத்திரமும், அதற்கும் பத்தா நக்ஷத் திரமும். அதற்குப் பத்தா நக்ஷத்திரமுமாம்.)

229. சென்மத்திரய பூசையால் வரும் விசேஷ பலம் என்னை?

சென்மத்திரயந்தோறும் சிவலிங்கப்பெருமானுக்குப் பத மந்திரங்கொண்டு பாலினாலும் சர்க்கரையினா லும் விசேஷமாக அபிஷேகஞ் செய்து. சுகந்தத்திர வியங்கள் கலந்த சந்தனக் குழம்பு சாத்திப், பாயாச முதலியன நிவேதனஞ் செய்துகொண்டு வரின், உத் பாதங்களும், பயங்கரமாகிய கிரகபீடைகளும், சகல வியாதிகளும் நீங்கும்.

திருச்சிற்றமபலம்

## 10. நித்தியகருமவியல்

230. நாடோறும் நியமமாக எந்த நேரத்திலே நித்திரை விட்டெழுதல் வேண்டும்?

சூரியன் உதிக்க ஐந்து நாழிகைக்கு முன் நித்திரை விட்டெழுவது உத்தமம். மூன்றேமுக்கா நாழிகைக்கு முன் எழுவது மத்திமம்; உதயத்தில் எழுவது அதமம்.

### சிவத்தியானாதி

231. நித்திரை விட்டெழுந்தவுடன் யாது செய் தல் வேண்டும்?

சலம் வாயிற்கொண்டு இடப்புறத்திலே கொப்ப ளித்து, முகத்தையுங் கை கால்களையுங் கழுவி, ஆச

மனம் பண்ணி, வடக்கு முகமாகவேனும் கிழக்கு முக மாகவேனும் இருந்து, விபூதி தரித்துக்கொண்டு, குரு உபதேசித்த பிரகாரஞ் சிவபெருமானைத் தியானித் துச் சிவ மூலமந்திரத்தை இயன்றமட்டுஞ் செபித்து, அருட்பாக்களினாலே உச்சவிலைசயோடு தோத்திரஞ் செய்தல் வேண்டும்.

232. சிவத்தியான முதலியவை செய்தபின் செய் யத்தக்கவை யாவை?

அவசியகருமம், சௌசம், தந்ததாவனம், ஸ்நானம், சந்தியாவந்தனம், சிவபூசை, சிவாலய தரிசனம், சிவ சாத்திர பாராயணம், தேவார திருவாசக பாராய ணம் மத்தியான சந்தியாவந்தனம், உபாசனம், சிவ சாத்திர படனம், சாயங்கால சந்தயாவந்தனம், சிவா லய தரிசனம், சிவபுராண சிரவணம், சயனம் என் பவைகளாம்.

## அவசியகருமம்

233. மலசலமோசனஞ் செய்யத்தக்கஇடம் யாது?

திருக்கோயி லெல்லைக்கு நானூறுமுழ தூரத்தின தாய், ஈசானதிக் கொழிந்த திக்கினிடத்தாய் உள்ள தனியிடமாம்.

234. மலசலமோசனம் செய்யத்தகாத இடங்கள் எவை?

வழி, குழி, நீர்நிலை, நீர்க்கரை, கோமயம் உள்ள இடம், சாம்பர் உள்ள இடம், சுடுகாடு, பூந்தோட் டம், மரநிழல், உழுத நிலம், அறுகம்பூமி, பசுமந்தை நிற்கும் இடம், இடி வீழிடம், காற்றுச் சுழலிடம், புற்று, அருவி பாயும் இடம், மலை என்பவைகளாம்.

235. மலசலமோசனம் எப்படிச் செய்தல் வேண்டும்?

மௌனம் பொருந்திப், பூநூலை வலக்காதிலே சேர்த்துத், தலையையும் காதுகளையும் வஸ்திரத்தினாலே சுற்றிப், பகலிலும் இரண்டு சந்தியா காலங்களிலும் வடக்கு முகமாகவும், இரவிலே தெற்கு முகமாகவும், நாசிநுனியைப் பார்த்துக் கொண்டிருந்து, மலசலமோசித்தல் வேண்டும். சந்தியாகாலம் இரண்டாவன இராக்காலத்தின் இறுதி முகூர்த்தமும் பகற்காலத்தின் இறுதி முகூர்த்தமுமாம். [முகூர்த்தம் இரண்டு நாழிகை.]

## சௌசம்

236. மலசலமோசனஞ் செய்யின் எப்படிச் சௌசஞ் செய்தல் வேண்டும்?

எழுந்து, புண்ணிய தீர்த்த மல்லாத சலக்கரையை அடைந்து, சலத்துக்கு ஒரு சாணுக்கு இப்பால் இருந்துகொண்டு, மூன்று விரலால் அள்ளிய மண்ணுஞ் சலமுங் கொண்டு, இடக்கையினாலே குறியை ஒருதரமும் குதத்தை ஐந்துதரத்துக்கு மேலும், இடக்கையை இடையிடையே ஒவ்வொருதரமும், பின்னும் இடக்கையைப் பத்துத்தரமும், இரண்டு கையையுஞ் சேர்த்து ஏழுதரமுஞ் சுத்தி செய்து, சகனத்தைத் துடைத்து, கால்களை முழங்கால் வரையுங் கைகளை முழங்கை வரையும் ஒவ்வொரு தரமுங் கழுவிச் சுத்தி செய்து, சௌசஞ் செய்த இடத்தைச் சலத்தினால் அலம்பிவிட்டு, அவ்விடத்தினின்று நீங்கி வேறொரு துறையிலே போய், வாயையும் கண்களையும் நாசியையுங் காதுகளையுங் கைகால்களிலுள்ள நகங்களையுஞ்

சுத்தி செய்து, எட்டுத்தரஞ் சலம் வாயிற் கொண்டு இடப்புறத்திலே கொப்பளித்துத், தலைக்கட்டு இல்லாமற் பூணூலை முன்போலத் தரித்துக், குடுமியை முடித்து, மந்திரங்கள் உச்சரியாது ஒருதரமும் மந்திரங்கள் உச்சரித்து ஒருதரமுமாக இரண்டுதரம் ஆசமனம் பண்ணல் வேண்டும்.

237. சலமோசனஞ் செய்யின் எப்படிச் சௌசஞ் செய்தல் வேண்டும்?

மண்ணுஞ் சலமுங்கொண்டு, குறியை ஒருதரமும், இடக்கையை ஐந்துதரமும், இரண்டு கையையின் சேர்த்து மூன்றுதரமும்; இரண்டு கால்களையும் ஒவ்வொரு தரமுஞ் சுத்தி செய்து நான்கு தரங் கொப்பளித்து, ஆசமனம் பண்ணல் வேண்டும்.

238. சௌசத்துக்குச் சமீபத்தில் சலம் இல்லையாயின் யாது செய்தல் வேண்டும்?

பாத்திரத்திலே சலம் கொண்டு ஓரிடத்தில் வைத்துக் கொண்டு, மலசலமோசித்துச் சௌசஞ் செய்து விட்டுப் பாத்திரத்தைச் சுத்தி செய்து, சலம்கொண்டு, வாய் கொப்பளித்துக், கால்கழுவி, ஆசமனம் பண்ணல் வேண்டும். சலபாத்திரத்தைக் கையில் வைத்துக் கொண்டு சலமல விசர்க்கஞ் செய்யலாகாது. [விசர்க்கம் = கழித்தல்]

239. ஆசமனம் எப்படிச் செய்தல் வேண்டும்?

கிழக்கையேனும் வடக்கையேனும் நோக்கிக், குக்குடாசனமாக இருந்து, இரண்டு முழங்கால்களுக்கும் இடையே கைகளை வைத்துக்கொண்டு, வலக்கையை விரித்துப் பெருவிரலையுஞ் சிறுவிரலையும் பிரித்து விட்டுப் பெருவிரலடியிற் சார்ந்த உழுந்தமிழ்ந்து

சலத்தை ஆசமித்தல் வேண்டும். [ஆசமனம் = உறிஞ்சுதல்]

240. குக்குடாசனமாவது யாது?

இரண்டு பாதங்களையும் கீழே வைத்துக் குந்திக் கொண்டிருத்தல்.

241. தடாக முதலியவற்றில் எப்படி ஆசமனஞ் செய்தல் வேண்டும்?

முழங்கா லளவினதாகிய சலத்திலே நின்று, இடக் கையினாலே சலத்தைத் தொட்டுக்கொண்டு, வலக்கையினாலே ஆசமனம் பண்ணல் வேண்டும். முழங்கா லளவினதாகிய சலத்திற் குறைந்தால், கரையை அலம்பி, அதிலிருந்துகொண்டு ஆசமனம் பண்ணல் வேண்டும்.

## தந்ததாவனம்

242. தந்த சுத்திக்குக் கருவியாவன யாவை?

விதிக்கப்பட்ட மரங்களின் கொம்பும் இலையுந் தாளுமாம்.

243. இல்வாழ்வானுக்கு விதிக்கப்பட்ட மரங்கள் எவை?

மருது, இத்தி, மா, தேக்கு, நாவல், மகிழ், ஆத்தி, கடம்பு, விளா நாயுருவி, அசோகு, குருக்கத்தி, பூல், வேல்' சம்பகம் என்பவைகளாம்.

244. துறவிக்கு விதிக்கப்பட்ட மரங்கள் எவை?

பெருவாகை, நொச்சி, பெருங்குமிழ், புன்கு, கருங்காலி ஆயில், மருது என்பவைகளாம்.

245. தந்தகாட்டம் எப்படிப்பட்டதாய் இருத்தல் வேண்டும்?

நேரியதாய்த், தோலோடு பசப்புள்ளதாய்க், கணு வுந் துளையும் இடைமுறிதலும் இல்லாததாய்ச் சிறு விரற் பருமை யுடையதாய் இருத்தல் வேண்டும். இல்வாழ்வானுக்குப் பன்னிரண்டங்குல நீளமும், துறவிக்கு எட்டங்குல நீளமும், பெண்களுக்கு நாலங்குல நீளமுங் கொள்ளப்படும்.

246. தந்த சுத்திக்கு கருவியாகாதன யாவை?

பட்டமரம், பாளை, வைக்கோல், கைவிரல், செங்கல் ,கரி சாம்பல், மணல் என்பவைகளாம்.

247. தந்தசுத்தி எப்படிச் செய்தல் வேண்டும்?

விதிக்கப்பட்ட தந்தகாட்டத்தையேனும் இலையையேனுஞ் சலத்தினாலே கழுவி, மௌனம் பொருந்திக், கிழக்கு நோக்கியேனும் வடக்கு நோக்கியேனுங் குக்குடாசனமாக இருந்துகொண்டு, பல்லின் புறத்தையும் உள்ளையுஞ் செவ்வையாகச் சுத்தி செய்து, ஒரு கழிலை இரண்டாகப் பிளந்து, ஒவ்வொரு பிளப்பையும்மூன்று தரம் உண்ணா வளவாக ஒட்டி நாக்கை வழித்து, இடப்புறத்தில், எறிந்துவிட்டுச், சலம் வாயிற் கொண்டு பன்னிரண்டு தரம் இடப்புறத்திலே கொப்பளித்து, முகத்தையுங் கைகால்களையுங் கழுவி, ஆசமனம் பண்ணல் வேண்டும். நின்றுகொண்டாயினும், நடந்துகொண்டாயினும், போர்த்துக் கொண்டாயினும் தந்த சுத்தி பண்ணலாகாது.

## ஸ்நானம்

248 ஸ்நானஞ் செய்யத்தக்க நீர் நிலைகள் யாவை?

நதி, நதிசங்கம், ஓடை, குளம, கேணி, மடு முதலியவைகளாம்; நதிசங்கமாவது இரண்டி யாறுகள் சந்

தித்த இடமாம்; யாறுங் கடலுங் கூடிய இடம் எனி னும் அமையும்.

249. ஸ்நானஞ் செய்யுமுன் யாது செய்தல் வேண் டும்?

கௌபீனத்தைத் கசக்கிப் பிழிந்து தரித்து. இரண்டு கைகளையுங் கழுவி, வஸ்த்திரங்களைத் தோய்த்து அலம்பித் தரித்து, உடம்பைச் சலத்தினாலே கழுவிச் செவ்வையாகத் தேய்த்துக்கொள்ளல் வேண்டும்:

250. ஸ்நானம் எப்படிச்செய்தல் வேண்டும்?

ஆசமனம் பண்ணிச் சகளீகரணஞ் செய்து, கொப் பூழளவினதாகிய சலத்தில் இறங்கி, நதியிலேயாயின், அதற்கு எதிர்முகமாக நின்றும், குள முதலியவைக ளிலாயிற் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாக வேனும் நின்றும், இரண்டு காதுகளையும் இரண்டு பெருவிரல்களினாலும், இரண்டு கண்களையும் இரண்டு சுட்டுவிரல்களினாலும, இரண்டு நாசிகளை யும் இரண்டு நடுவிரல்களினாலும், மூடிக்கொண்டு சிவபெருமானைச் சிந்தித்து ஸ்நானஞ் செய்தல் வேண் டும். இப்படி மூடுவது சண்முகிமுத்திரை எனப் பெயர் பெறும்.

251. இப்படி ஸ்நானஞ் செய்தவுடனே யாது செய்தல் வேண்டும்?

ஆசமனம் செய்துகொண்டு, கரையிலேறி வஸ்திரங் களைப் பிழிந்து தோய்த்துலர்ந்த வஸ்திரத்தினாலே தலையிலுள்ள ஈரத்தைத் துவட்டி. உடனே நெற்றியில் விபூதி தரித்து, உடம்பிலுள்ள ஈரத்தைத் துவட்டிக் குடுமியை முடித்து, ஈரக் கௌபீனத்தைக் களைந்து:

உலர்ந்த கௌபீனத்தைத் தரித்து, இரண்டு கைகளை யுங் கழுவிச், சுத்தமாய்க் கிழியாதனவாய் வெள்ளிய னவாய் உலர்ந்தனவாய் உள்ள இரண்டு வஸ்திரந் தரித்துக்கொண்டு, ஈர வஸ்திரங்களையுங் கௌபீ னத்தையும் உலரும்படி கொடியிலே போடல் வேண்டும். ஒரு கொடியிலே தானே தோய்த்த வஸ் திரமுந் தோயாத வஸ்திரமும் போடுதலும், ஒருவர் வஸ்திரம் போட்ட கொடியிலே மற்றொருவர் வஸ் திரம் போடுதலும் ஆகாவாம்; நக்கினனாயேனும், கௌபீன மாத்திர முடையனாயேனும், ஒரு வஸ்தி ரந் தரித்துக் கொண்டேனும், யாதொரு கருமமுஞ் செய்யலாகாது.

252. குளிர்ந்த சலத்திலே ஸ்நானஞ் செய்ய மாட் டாத பிணியாளர் யாது செய்தல் வேண்டும்?

ஸ்நானஞ் செய்தவர் சுத்தி செய்யப்பட்ட தானத் திலே சுத்தி செய்யப்பட்ட பாத்திரத்தில் வைத்த வெந்நீரை, அவர் ஒரு பாத்திரத்தில் விடவிட, எடுத்து ஸ்நானஞ் செய்து தோய்த்துலர்ந்த வஸ்திரத்தினால் ஈரத்தைத் துவட்டி, உலர்ந்த வஸ்திரந் தரித்துப் பதி னொரு மந்திரத்தை ஒருதரஞ் செபித்துக் கொண்டு, சந்தியாவந்தனம் முதலியன செய்யலாம்;

253. வியாதியினாலே ஸ்நானஞ் செய்யமாட்டா தவர் யாது செய்தல் வேண்டும்?

கழுத்தின்கீழ், அரையின்கீழ், கால் என்னும் இவை களுள் ஒன்றை, இயன்றபடி சலத்தினாலே கழுவிக் கொண்டு, கழுவாமல் எஞ்சிய உடம்பை ஈர வஸ்தி ரத்தினால் ஈரம் படும்படி துடைத்து, அவ்வீரத்தைத் துவட்டித், தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துப் பதி னொரு மந்திரத்தை ஒருதரஞ் செபித்துக்கொண்டு,

சந்தியாவந்தன முதலியன செய்யலாம். இந்த ஸ்நானங் காபில ஸ்நானம் எனப் பெயர் பெறும்.

## 254. இராத்திரி ஸ்நானஞ் செய்யலாமா?

யாகம், சந்திரகிரகணம், சிவராத்திரி, மாசப்பிறப்பு, மகப்பேறு என்பவைகளின் மாத்திரம் இராத்திரி ஸ்நானஞ் செய்யலாம்.

## 255. நியமகாலத்திலன்றி, இன்னும் எவ்வெப் பொழுது ஸ்நானஞ் செய்வது ஆவசியகம்?

சண்டாளருடைய நிழல் படினும், இழிந்த சாதியாராரும், புறச்சமயிகளும், வியாதியாளரும், சனனமரணா சௌசமுடையவரும், நாய் கழுதை பன்றி கழுகு கோழி முதலியனவைகளும் தீண்டினும், எலும்பு சீலை முதலியவற்றை மிதிக்கினும், க்ஷௌரஞ் செய்து கொள்ளினும், சுற்றத்தார் இறக்கக் கேட்கினும், துச்சொப்பனங் காணினும், பிணப்புகை படினும், சுடுகாட்டிற் போகினும், சர்த்தி செய்யினும், உடுத்த வஸ்திரத்துடனே ஸ்நானஞ் செய்வது ஆவசியகம். [சர்த்தி = வாந்தி]

## 256. தீண்டலினாலே எவ்வெப் பொழுது குற்றமில்லை?

சிவதரிசனத்திலும், திருவிழாவிலும், யாகத்திலும், விவாகத்திலும், தீர்த்தயாத்திரையிலும், வீடு அக்கினி பற்றி எரியுங் காலத்திலும், தேச காலத்திலும் சனநெருக்கத் தீண்டலினாலே குற்றமில்லை.

## 257. ஸ்நானஞ் சரீரசுத்திக்கு மாத்திரந்தான் காரணமா?

சரீரசுத்திக்கு மாத்திரமன்றிச் சரீராரோக்கியத்துக்

கும், சித்தசோபனத்துக்கும், ஒருப்பாட்டுக்கும், இந்திரியவடக்கத்துக்கும், யோக்கியத்துவத்துக்குங் காரணமாம். விடியற்கால ஸ்நானத்தினாலே பசி உண்டாகும்; நோய் அணுகாது.

## சந்தியாவந்தனம்

**258. சந்தியாவந்தனம் எத்தனை?**

பிராதக்காலசந்தி, மத்தியானசந்தி, சாயங்காலசந்தி, அர்த்தயாமசந்தி என நான்காம்.

**259. இன்னார் இன்னாருக்கு இன்ன இன்ன சந்தியாவந்தனங்கள் உரியன என்னும் நியமம் உண்டோ?**

சமயதீக்ஷிதருக்குப் பிராதக்கால சந்தி யொன்றே உரியது; விசேஷதீக்ஷிதருக்குப் பிராதக்காலசந்தி சாயங்காலசந்தி என்னும் இரண்டு சந்திகள் உரியன; நிருவாணதீக்ஷிதருக்குப் பிராதக்காலசந்தி மத்தியானசந்தி சாயங்காலசந்தி என்னும் மூன்று சந்திகள் உரியன. ஆசாரியாருக்கு நான்கு சந்திகளும் உரியன. சமயதீக்ஷிதர் விசேஷதீக்ஷிதர்கள் மூன்று சந்திகளுஞ் செய்யலாம் என்று சில வாகமங்களில் விதிக்கப்பட்டிருக்கிறது.

**260. பிராதகாலசந்தி எந்நேரத்திலே செய்தல் வேண்டும்?**

நக்ஷத்திரங்கள் தோன்றும்போது செய்தல் உத்தமம்; நக்ஷத்திரங்கள் மறைந்தபோது செய்தல் மத்திமம்; சூரியன் பாதி உதிக்கும் போது செய்தல் அதமம்.

**261. மத்தியானசந்தி எந்நேரத்திலே செய்தல் வேண்டும்?**

பதினைந்தா நாழிகையாகிய மத்தியானத்திலே செய்தல் உத்தமம்; மத்தியானத்துக்கு முன் ஒருநாழிகையிலே செய்தல் மத்திமம்; மத்தியானத்துக்குப் பின் ஒருநாழிகையிலே செய்தல் அதமம்.

262. சாயங்காலசந்தி எந்நேரத்திலே செய்தல் வேண்டும்?

சூரியன் பாதி அத்தமிக்கும்போது செய்தல் உத்தமம்; அத்தமயனமானபின் ஆகாசத்திலே நக்ஷத்திரங்கள் தோன்றுமுன் செய்தல் மத்திமம்; நக்ஷத்திரங்கள் தோன்றும்போது செய்தல் அதமம்.

263. சந்தியாவந்தன முதலிய கிரியைகளுக்கு ஆகாத நீர்கள் எவை?

நுரை குமிழி உள்ள நீர், புழு உள்ள நீர், வடித்தெடாத நீர், இழிகுலத்தார் தீண்டிய நீர், கலங்கனீர், பாசிநீர், உவர்நீர், வெந்நீர், பழநீர், சொறிநீர் என்பவைகளாம்.

## போசனம்

264. போசன பந்திக்கு யோக்கியர் யாவர்?

சமசாதியாராயும், சிவதீக்ஷை பெற்றவராயும், நியமாசாரமுடையவராயும் உள்ளவர்.

265. போசனஞ் செய்தற்குரிய தானம் யாது?

வெளிச்சம் உடையதாய்ப், பந்திக்கு உரியரல்லாதவர்புகப் பெறாததாய்க், கோமயத்தினாலே மெழுகப்பட்ட தாய் உள்ள சாலை.

266. போசனத்துக்கு உரிய பாத்திரங்கள்யாவை?

வாழையிலை, மாவிலை, புன்னையிலை, தாமரையிலை, இருப்பையிலை, பலாவிலை, சண்பகவிலை

வெட்பாலையிலை, பாதிரியிலை, பலாசிலை, சுரை யிலை, கமுகமடல் என்பவைகளாம். வாழையிலையைத் தண்டுரியாது அதனுடைய அடி வலப் பக்கத்திலே பொருந்தும்படி போடல் வேண்டும்; கல்லைதைக்குமிடத்துக், கலப்பின்றி ஒரு மரத்தினிலைகொண்டே ஒரு கல்லை முழுதுந் தைத்தல் வேண்டும்.

267. போசன பாத்திரங்களை எப்படி இடம்பண்ணிப் போடல் வேண்டும்?

போசன பாத்திரங்களைச் சலத்தினாலே செவ்வையாகக் கழுவி, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு முழவளவை சதுரச் சிரமாகப் புள்ளியின்றி மெழுகி, அதின்மேலே போடல் வேண்டும்.

268. இலை போட்டபின் யாது செய்தல் வேண்டும்?

அதிலே நெய்யினாலே புரோக்ஷித்து, லவணம், கறி, அன்னம், பருப்பு, நெய் இவைகளைப் படைத்தல் வேண்டும்.

269. போசனம் எப்படிப் பண்ணல் வேண்டும்?

இரண்டு கால்களையும் முடக்கி இடமுழந்தாளின் மேலே இடக்கையை ஊன்றிகொண்டிருந்து, விதிப்படி அன்ன முதலியவற்றைச் சுத்தி செய்து, சிவபெருமானுக்கும் அக்கினிக்குங் குருவுக்கும் நிவேதனம் பண்ணி, அன்னத்திலே பிசையத் தக்க பாகத்தை வலக்கையினாலே வலப்பக்கத்திலே வேறாகப் பிரித்துப் பருப்பு நெய்யோடு பிசைந்து, சிந்தாமற் புசித்தல் வேண்டும்; அதன்பின் சிறிது பாகத்தை முன்போலப் பிரித்துப், புளிக்கறியோடாயினும் ரசத்தோடாயினும் பிசைந்து புசித்தல் வேண்டும். அதன்பின் மோரோடு பிசைத்து புசித்தல் வேண்டும்; கறிகளை இடையிடையே தொட்டுக் கொள்ளல் வேண்டும்.

இலையிலுங் கையிலும் பற்றறத் துடைத்துப் புசித்த பின், வெந்நீரேனுந் தண்ணீரேனும் பானம் பண்ணல் வேண்டும்; உமிழத்தக்கதை, இலையின் முற்பக்கத்தை மிதத்தி, அதன்கீழ் உமிழ்தல் வேண்டும்.

270. போசனம் பண்ணும்பொழுது செய்யத் தகாத குற்றங்கள் எவை?

உண்பதற்கிடையிலே உப்பையும் நெய்யையும் படைத்துக்கொள்ளல், போசனத்துக்கு உபயோகமற்ற காதவார்த்தை பேசுதல், சிரித்தல். நாய் பன்றி கோழி காகம் பருந்து கழுகு என்பவைகளையும், புலையர் சனர் அதிக்ஷிதர் விரதபங்கமடைந்தவர் பூப்புடையவள் என்பவர்களையும் பார்த்தல் முதலியனவாம்.

271. புசிக்கும்போது அன்னத்திலே மயிர் ஈ எறும்பு கொசு முதலியன காணப்படின், யாது செய்தல் வேண்டும்?

அவைகளைச் சிறிதன்னத்தோடு புறத்தே நீக்கிவிட்டுக், கை கழுவிக்கொண்டு, சலத்தினாலும் விபூதியினாலுஞ் சுத்திபண்ணிப் புசித்தல் வேண்டும்.

272. போசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும்?

எழுந்து, வீட்டுக்குப் புறத்தே போய்க், கை கழுவிவிட்டுச் சலம் வாயிற்கொண்டு பதினாறுதரம் இடப்புறத்திலே கொப்பளித்து, வாயையுங் கைகளையுங் கால்களையும் கழுவி, ஆசமனம் பண்ணி, விபூதி தரித்தல் வேண்டும. அன்னமல்லா தயண்டங்கள் புசிக்கின், எட்டுத்தரங் கொப்பளித்து, ஆசமனம் பண்ணல் வேண்டும்.

273. உச்சிட்டத்தை எப்படி அகற்றல் வேண்டும்?

இலையை எடுத்து எறிந்து விட்டுக், கை கழுவிக் கொண்டு, உச்சிட்டத் தானத்தைக் கோமயஞ் சேர்ந்த சலந்தெளித்து, இடையிலே கையை யெடாமலும் முன்பு தீண்டிய விடத்தைப் பின்பு தீண்டாமலும் புள்ளியில்லாமலும் மெழுகிப், புறத்தே போய்க் கை கழுவிவிட்டுப், பின்னும் அந்தத் தானத்திலே சலந் தெளித்து விடல் வேண்டும்.

274. போசனஞ் செய்தபின் வாக்குச் சுத்தியின் பொருட்டு யாது செய்தல் வேண்டும்?

இல்வாழ்வார் தாம்பூலம் ஒருதர மாத்திரம் புசிக் கலாம்; துறவிகள் இராம்பு, ஏலம், கடுக்காய், சுக்கு, வான்மஞ்சள் என்பவைகளுள் இயன்ற தொன்றைப் புசித்தல் வேண்டும்.

275. இராத்திரியில் எத்தனை நாழிகையினுள்ளே புசித்தல் வேண்டும்?

எட்டு நாழிகையினுள்ளே புசித்தல் உத்தமம். பதி னொரு நாழிகை யளவேல் மத்திமம்; பதினான்கு நாழிகை யளவேல் அதமம்; அதன்மேற் புசிக்கலா காது.

276. போசன காலத்தில் விளக்கவியின் யாது செய்தல் வேண்டும்?

போசனம் பண்ணாது, அவ்வன்னத்தை வலக்கையி னாலே மூடி, விளக்கேற்றி வருமளவும் ஸ்ரீ பஞ்சா க்ஷரத்தை மானசமாகச் செபித்துக்கொண்டிருந்து விளக்கேற்றியபின், பாவையில் அன்னத்தை இடுவித் துக்கொள்ளாது, அவ்வன்னத்தையேபுசித்துக் கொண்டு எழும்பல் வேண்டும்.

## சயனம்

277. எப்படிச் சயனித்தல் வேண்டும்?

கிழக்கேயாயினும் மேற்கேயாயினும் தெற்கேயாயினுந் தலை வைத்துச், சிவபெருமானைச் சிந்தித்துக் கொண்டு, வலக்கை மேலாகச் சயனித்தல் வேண்டும். வடக்கே தலை வைக்கலாகாது. வைகறையிலே நித்திரை விட்டெழுந்துவிடல் வேண்டும். சந்தியாகாலத்தில் நித்திரை செய்தவன் அசுத்தன்; அவன் ஒரு கருமத்துக்கும் யோக்கியனாகான்; அவன் தான் செய்த புண்ணியத்தை இழப்பன்; அவன் வீடு சுடுகாட்டுக்குச் சமம்.

278. இரவிலே காலம்பெறச் சயனித்து வைகறையில் விழித்தெழுந்து விடுதலினாற் பயன் என்னை?

சூரியன் உதிக்க ஐந்து நாழிகை உண்டென்னுங் காலம் பிராமமுகூர்த்தம் எனப் பெயர் பெறும்; சிவத்தியானத்துக்கு மனந்தெளிவது அக்காலத்தேயாம்; அன்றியும், அக்காலத்தில் விழிக்கின் நோய்கள் அணுகாவாம். இராநித்திரைப் பங்கமும், வைகறை நித்திரையும் பகல் நித்திரையும், பற்பல வியாதிகளுக்குக் காரணம்.

மந்திரக் கிரியைகளோடு எழுதப்பட்ட ஸ்நான விதி, சந்தியாவந்தன விதி, பூசாவிதி, போசனவிதி என்னு நான்குங் குருமுகமாகப் பெற்றுக்கொள்க.

திருச்சிற்றம்பலம்.

## 11. சிவாலயகைங்கரியவியல்

279 சிவாலயத்தின் பொருட்டுச் செயற்பாலனவாகிய திருத்தொண்டுகள் யாவை?

திருவலகிடுதல், திருமெழுக்குச் சாத்துதல், திருநந்தனவனம் வைத்தல், பத்திரபுஷ்பமெடுத்தல், திருமாலை கட்டுதல், சுகந்ததூபமிடுதல், திருவிளக்கேற்

றுதல், தோத்திரம் பாடல், ஆனந்தக் கூத்தாடல், பூசைத் திரவியங்கள் கொடுத்தல் என்பவைகளாம்;

## திருவலகிடுதல்

**280. திருவலகு எப்படி இடுதல் வேண்டும்?**

சூரியன் உதிக்குமுன் ஸ்நானஞ் செய்து, சந்தியா வந்தன முடித்துக்கொண்டு, திருக்கோயிலினுள்ளே புகுந்து, மெல்லிய துடைப்பத்தினாலே கிருமிகள் சாவாமல் மேற்பட அலகிட்டுக், குப்பையை வாரித் தூரத்தே கொண்டுபோய்க் குழியிலே கொட்டிவிடல் வேண்டும்;

## திருமெழுக்குச் சாத்துதல்

**281. திருமெழுக்கு எப்படிச் சாத்தல் வேண்டும்?**

கன்றீனாததும், நோயை யுடையதும் அல்லாத பசுவினது சாணியைப், பூமியில் விழுமுன், இலையில் ஏந்தியாயினும், ஏந்தல் கூடாதபோது, சுத்த நிலத்தில் விழுந்த சாணியை மேல் கீழ் தள்ளி நடுப்பட எடுத்தாயினும், வாவி நதி முதலியவற்றில் வடித்தெடுத்து வந்த சலத்துடனே கூட்டிச், செங்கற்படுத்த நிலத்தையுஞ் சுண்ணாம்பு படுத்த நிலத்தையும் மெழுகல் வேண்டும். சருங்கற் படுத்த நிலத்தைச் சலத்தினாலே கழுவிவிடல் வேண்டும்; கருங்கல்லிலே சாணியிடலாகாது.

## திருநந்தனவனம் வைத்தல்

**282. திருநந்தனவனம் வைக்கற்பாலதாகிய தானம் யாது?**

சண்டாளபூமிக்குஞ் சுடுகாட்டிற்கும் மலசல மோசன பூமிக்குஞ் சமீபத்தி லல்லாததாய், நான்கு பக்கத்துஞ் சுவரினாலேனும் வேலியினாலேனுஞ் சூழப்பட்டதாய்க

கீழே ஆழமாக வெட்டி எலும்பு முதலிய குற்றங்கள் அறப் பரிசோதிக்கப்பட்டதாய், பசு நிரை கட்டப் பெற்றுக் கோசல கோமயத்தினாலே சுத்தி யடைந் ததாய் உள்ள நிலமேயாம்.

283. **இப்படிப்பட்ட நிலத்திலே வைக்கற்பாலன வாகிய மரஞ் செடி கொடிகள் எவை?**

மரங்கள் வில்வம், பாதிரி, கோங்கு, பன்னீர், கொன்றை, புலிநகக்கொன்றை, பொன்னாவிரை, மந்தாரை, சண்பகம், குரா, குருந்து, மகிழ், புன்னை, சுரபுன்னை, வெட்சி, கடம்பு, ஆத்தி, செருந்தி, பவளமல்லிகை, வன்னி, பலாசு, மாவிலிங்கை, நுணா, விளா, முக்கிளுவை, நெல்லி, நாவல், இலந்தை, பலா, எழுமிச்சை, நாரத்தை, தமரத்தை, குளஞ்சி, மாதுளை வாழை, செவ்விளநீர், சூரியகேளியிளநீர், சந்திரகேளி, யிளநீர் என்பவைகளாம். மரங்களில் உண்டாகும் பூ கோட்டுப்பூ எனப்படும்.

செடிகள் அலரி, நந்தியாவர்த்தம், குடமல்லிகை, வெள்ளெருக்கு, செம்பரத்தை, கொக்கிறகு, மந்தாரை துளசி, நொச்சி, செங்கீரை, பட்டி, நாயுருவி, கருவூமத்தை, பொன்னூமத்தை, சத்தரி, தகரை, செவ்வந்தி, தும்பை, வெட்டிவேர், இலாமச்சை, திருப்பை, மருக்கொழுந்து, சிவகரந்தை, விஷ்ணுகாந்தி, மாசிப் பச்சை, திருநீற்றுப்பச்சை, பொற்றலைக் கையாந்தகரை, என்னு, பூளை, அறுகு என்பவைகளாம்; செடிகளில் உண்டாகும் பூ நிலப்பூ எனப்படும்.

கொடிகள் மல்லிகை, முல்லை, இருவாட்சி, பிச்சி, வெண்காக்கொன்றை, கருங்காக் கொன்றை, கருமுகை, தாளி, வெற்றிலை என்பவைகளாம். கொடிகளில் உண்டாகும் பூக் கொடிப்பூ எனப்படும்.

284. நீர்ப்பூக்கள் எவை?

செந்தாமரை, வெண்டாமரை, செங்கழுநீர், நீலோற்பலம், செவ்வாம்பல், வெள்ளாம்பல் என்பவைகளாம்.

285. திருநந்தனவனத்தை எப்படிப் பாதுகாத்தல் வேண்டும்?

புலையர், புறச்சமயிகள், தூரஸ்திரீகள் முதலாயினோர் உள்ளே புகாமலும், யாவராயினும் எச்சில் மூக்குநீர் மலசல முதலியவைகளால் அசுசிப் படுத்தாமலும், அங்குள்ள பத்திர புஷ்பங்களைக் கடவுட் பூசை முதலியவற்றிற் கன்றிப் பிறவற்றிற்கு உபயோகப் படுத்தாமலும், மோவாமலும், அங்குள்ள மரஞ் செடி கொடிகளிலே சலந் தெறிக்கும்படி வஸ்திரந் தோயாமலும், அவைகளிலே வஸ்திரத்தைப் போடாமலும், பாதுகாத்தல் வேண்டும்.

## பத்திர புஷ்ப மெடுத்தல்

286. கடவுட் பூசைக்குப் பத்திர புஷ்பங்கள் எடுக்க யோக்கியர் யாவர்?

நான்கு வருணத் துட்பட்டவராய்ச், சிவதீக்ஷை பெற்றவராய், நியமாசார முடையவராய் உள்ளவர்.

287. பத்திர புஷ்பம் எடுக்க யோக்கியர் ஆகாதவர் யாவர்?

தாழ்ந்த சாதியார், அதீக்ஷிதர், ஆசௌச முடையவர், நித்திய கருமம் விடுத்தவர், ஸ்நானஞ் செய்யாதவர், தூர்த்தர் முதலானவர்.

288. கடவுட் பூசைக்கு ஆகாத பூக்கள் எவை?

எடுத்துவைத் தலர்ந்த பூவும், தானே விழுந்து கிடந்த பூவும், பழம் பூவும், உதிர்ந்த பூவும், அரும்பும், இரவில் எடுத்த பூவும், கை சீலை எருக்கிலை

அமணக்கிலை என்பவற்றிற் கொண்டு வந்த பூவும், காற்றினடிபட்ட பூவும், புழுக்கடி எச்சம் சிலந்தி நூல் மயிர் என்பவற்றோடு கூடிய பூவும், மோந்த பூவுமாம்;

திருக்கோயிலுள்ளும் அதன் சமீபத்திலும் உண்டாகிய பத்திர புஷ்பங்கள் ஆன்மார்த்த பூசைக்கு ஆகாவாம்.

**289. இன்ன இன்ன தேவருக்கு இன்ன இன்ன பத்திர புஷ்பம் ஆகா என்னும் நியமம் உண்டோ?**

ஆம்; விநாயகருக்குத் துளசியும், சிவபெருமானுக்குத் தாழம்பூவும், உமாதேவியாருக்கு அறுகும் நெல்லியும், வைரவருக்கு நந்தியாவர்த்தமும், சூரியனுக்கு வில்வமும், விஷ்ணுவுக்கு அக்ஷதையும், பிராமணருக்குத் தும்பையும் ஆகாவாம்.

**290. வில்வம் எடுக்க லாகாத காலங்கள் எவை?**

திங்கட்கிழமை, சதுர்த்தி, அட்டமி, நவமி, ஏகாதசி, சதுர்த்தசி, அமாவாசி, பௌர்ணிமை, மாசப்பிறப்பு என்பவைகளாம். இவையல்லாத மற்றைக் காலங்களிலே வில்வம் எடுத்து வைத்துக்கொள்ளல் வேண்டும்.

**291. துளசி யெடுக்க லாகாத காலங்கள் எவை?**

ஞாயிற்றுக்கிழமை, திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, திருவோண நக்ஷத்திரம் சத்தமி, அட்டமி, துவாதசி, சதுர்த்தசி, அமாவாசி பௌர்ணிமை, விதிபாதயோகம், மாசப்பிறப்பு, பிராதக்காலம், சாயங்காலம், இராத்திரி என்பவைகளாம். இவை யில்லாத மற்றைக் காலங்களிலே துளசி எடுத்து வைத்துக்கொள்ளல் வேண்டும். இரண்டிலை கீழே உள்ள துளசிக்கதிர் எப்போதும் எடுக்கலாம்;

292. இன்ன இன்ன பத்திர புட்பம் இவ்வளவு இவ்வளவு காலத்துக்கு வைத்துச் சாத்தலாம் என்னும் நியமம் உண்டோ?

ஆம்; வில்வம் ஆறு மாசத்திற்கும், வெண்டுளசி ஒரு வருஷத்திற்கும், தாமரைப்பூ ஏழு நாளிற்கும், அலரிப்பூ மூன்று நாளிற்கும் வைத்துச் சாத்தலாம்.

293. பத்திர புஷ்பம் எப்படி எடுத்தல் வேண்டும்?

சூரியோதயத்துக்கு முன்னே ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துச், சந்தியாவந்தன முடித்து, இரண்டு கைகளையுங் கழுவித், திருப்பூங் கூடையை எடுத்து, ஒரு தண்டு நுனியிலே மாட்டி உயரப் பிடித்துக்கொண்டாயினும், அரைக்கு மேலே கையிலே பிடித்துக்கொண்டாயினும், திருநந்தன வனத்திற் போய்ச் சிவபெருமானை மறவாத சிந்தையோடு பத்திர புஷ்ப மெடுத்து, அவைகளைப் பத்திரத்தினாலே மூடிக்கொண்டு, திரும்பி வந்து, கால்களைக் கழுவிக் கொண்டு, உள்ளே புகுந்து, திருப்பூங் கூடையைத் தூக்கிவிடல் வேண்டும்.

294. பத்திர புஷ்பம் எடுக்கும்போது செய்யத் தகாத குற்றங்கள் எவை?

பேசுதல், சிரித்தல், சிவபெருமானுடைய திருவடிகளிளேயன்றிப் பிறவற்றிலே சிந்தை வைத்தல், கொம்புகள் இலைகளை முறித்தல், கைகளை அரையின் கீழே தொங்கவிடுதல், கைகளினாலல்லாமல் உடம்பையேனும் வஸ்திரத்தையேனும் தீண்டுதல் என்பவைகளாம்.

## திருமாலை கட்டுதல்

295. திருமாலை எப்படிக் கட்டல் வேண்டும்?

திருமாலைக் குறட்டைச் சலத்தினால் அலம்பி இடம் பண்ணித், திருப்பூங்கூடையிலுள்ள பத்திர புஷ்பங் களை எடுத்து அதில் வைத்துக்கொண்டு, மௌனியாய் இருந்து, சாவதானமாக ஆராய்ந்து, பழுதுள்ளவை களை அகற்றிவிட்டு, இண்டை, தொடை, கண்ணி, பந்து, தண்டு முதலிய பல வகைப்பட்ட திருமாலை களைக் கட்டல் வேண்டும்.

## சுகந்த தூப மிடுதல்

296. சுகந்த தூபம் எப்படி இடுதல் வேண்டும்?

வாசனைத் திரவியங்கள் கலந்து இடிக்கப்பட்ட சாம் பிராணி கொண்டு சுகந்த தூபமிடல் வேண்டும்.

## திருவிளக் கேற்றல்

297. திருவிளக்குக்கு என்ன நெய் கொள்ளத் தக்கது?

திருவிளக்குக்குக் கபிலைநெய் உத்தமத்தின் உத்தமம்; மற்றைப் பசுநெய் உத்தமத்தின் மத்திமம்; ஆட்டுநெய் எருமைநெய் உத்தமத்தின் அத மம்; வெள்ளெள்ளினெய் மத்திமத்தின் உத்தமம், மற்றையெள்ளினெய் மத்திமத்தின் மத்திமம்; மரக் கொட்டைகள்னெய் அதமத்தின் அதமம். [கபிலை = கபிலை நிறமுடைய பசு; கபில நிறம்= கருமை சேர்ந்த பொன்னிறம ]

298. திருவிளக்குத் திரி என்ன நூல் கொண்டு எப்படிப் பண்ணல் வேண்டும்?

தாமரை நூல், வெள்ளெருக்கு நூல், பருத்தி நூல் என்பவைகளுள் இருபத்தோ ரிழையாலேனும் பதினா றிழையாலேனும், பதினான் கிழையாலேனும் ஏழி ழையாலேனுங் கர்ப்பூரப்பொடி கூட்டித் திரி பண்ணல் வேண்டும்.

299. மாவிளக்கு எப்படி இடுதல் வேண்டும்?

பகலிலே போசனஞ் செய்யாது, சனிப் பிரதோஷத்திலுஞ் சிவராத்திரியிலுஞ் செஞ்சம்பாவரிசி மாவினாலே அகல் பண்ணிக் கபிலநெய் மூன்று நாழியேனும் ஒன்றரை நாழியேனும் முக்காலாழியேனும் வார்த்துக்கைப் பெருவிரற் பருமையுடைய வெண்டாமரை நூற்றிரி யிட்டுத் திருவிளக்கேற்றல் வேண்டும்.

## தோத்திரம் பாடல்

300. எந்தத் தோத்திரங்களை எப்படிப் பாடல் வேண்டும்?

தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்னும் அருட்பாக்களை மனங் கசிந்துருகக், கண்ணீர்வார, உரோமஞ் சிலிர்ப்பப், பண்ணோடு பாடல் வேண்டும்.

## ஆனந்தக்கூத் தாடல்

301. ஆனந்தக்கூத்து எப்படி ஆடல் வேண்டும்?

உலகத்தார் நகைக்கினும் அதனைப் பாராது நெஞ்சநெக்குருகக், கண்ணீர் பொழிய, மெய்ம்மயிர் சிலிர்ப்பக், கைகளைக் கொட்டித், தோத்திரங்களைப் பாடிக், கால்களைச் சதி பெற வைத்து, ஆனந்தக் கூத்தாடல் வேண்டும்.

## பூசைத் திரவியங்கள்

302. திருமஞ்சனத்திலே போடற்பாலனவாகிய திரவியங்கள் எவை?

பாதிரிப்பூ, தாமரைப்பூ முதலிய சுகந்த புஷ்பங்களும் செங்கழுநீர்க் கோஷ்டம், ஏலம், இலாமச்சம் வேர், வெட்டிவேர், இலவங்கப்பட்டை, சந்தனம், கர்ப்பூரம் என்னும் பரிமளத் திரவியங்களுமாம்.

303. பாத்தியத் திரவியங்கள் எவை?

வெண்கடுகு, இலாமச்சம்வேர், சந்தனம், அறுகு என்னு நான்குமாம்.

304. ஆசமநீயத் திரவியங்கள் எவை?

சாதிக்காய், கிராம்பு, ஏலம், பூலாங்கிழங்கு, சண்பகப்பூ மொட்டு, பச்சைக்கர்ப்பூரம் என்னும் ஆறுமாம்.

305. அருக்கியத் திரவியங்கள் எவை?

சலம், பால், தருப்பைநுனி, அக்ஷத்தை, எள், யவம், சம்பாநெல், வெண்கடுகு என்னும் எட்டுமாம்.

306. அபிஷேகத் திரவியங்கள் எவை?

எண்ணெய்க்காப்பு, மாக்காப்பு, நெல்லிக்காப்பு, மஞ்சட்காப்பு, பஞ்சகவ்வியம், ரசபஞ்சாமிர்தம், பலபஞ்சாமிர்தம், பால் தயிர், நெய், தேன், சர்க்கரை, கருப்பஞ்சாறு, எலுமிச்சம் பழச்சாறு, நாரத்தம்பழச்சாறு, தமரத்தம்பழச்சாறு, குளஞ்சிப் பழச்சாறு, மாதுளம்பழச்சாறு, இளநீர், சந்தனக் குழம்பு என்பவைகளாம். தாமிரபாத்திரத்தில் விட்ட பாலும், வெண்கலப் பாத்திரத்தில் விட்ட இளநீருங் கள்ளுக்குச் சமம். இளநீர் முகிழைத் திறந்து, தனித் தனி அபிஷேகம் பண்ணல் வேண்டும். நெய் யபிஷேகஞ் செய்தவுடன் இளவெந்நீ ரபிஷேகஞ் செய்தல் வேண்டும். இளநீரபிஷேகத்துக்குப் பின் எண்பத்தொரு பதமந்திரம் உச்சரித்துச சகச்சிரதாரை கொண்டு சுத்தோதகத்தால் அபிஷேகஞ் செய்தல் வேண்டும். சந்தனக் குழம்புக்குப் பின் விதிப்படி தாபிக்கப்பட்ட நவகலசத்தினாலும் வசேஷார்க்கியத்தினாலும் அபிஷேகஞ் செய்தல் வேண்டும்.

**307. அபிசேகத்தின் பொருட்டு எண்ணெய் எப்படி ஆட்டல் வேண்டும்?**

எள்ளை வண்டு முதலிய பழுதறப் பதினாறுதரம் பார்த்து ஆராய்ந்து, உவர் முதலிய தீயசலங்களை விடாது நல்ல சலத்தைப் புதிய பாண்டத்தில் விட்டு, எள்ளைக் கருந்தோல் போமளவுங் காலினால் மிதியாது கையினாற் பிசைந்து கழுவி, காகம் கோழி நாய் பன்றி முதலியன வாயிடல் மிதித்தல் செய்யா வண்ணம் உலர்த்தி, கல்லினாலேனும் புளியமரத்தினாலேனுஞ் செய்த, நாய் முதலியன வாயிடாத, கைச்செக்கினால் ஆட்டல் வேண்டும். சந்தனாதிதைல முதலிய சுகந்தத் தைலஞ் செய்து அபிஷேகம் பண்ணுவித்தல் உத்தமோத்தமம். தம்வியாதி நீக்கத்தின் பொருட்டுச் சந்தனாதிதைல முதலிய செய்வித்தவர் அதற்கட் சிறிது பாகஞ் சிவலிங்கப் பெருமானுக்கு அபிஷேகம் பண்ணுவிக்கக் கடவர்.

**308. பஞ்சகவ்விய மென்பது என்னை?**

விதிப்படி கூட்டி அமைக்கப்பட்ட பால், தயிர், நெய், கோசலம், கோமயம் என்பவைகளினது தொகுதியாம். இது பிரமகூர்ச்சம் எனவும் பெயர் பெறும். பால் ஐந்து பலமும், தயிர் மூன்று பலமும், நெய் இரண்டு பலமும், கோசலம் ஒரு பலமும், கோமயம் கைப்பெருவிரலிற் பாதியுங் கொள்க.

**309. இரசபஞ்சாமிர்த மென்பது என்னை?**

விதிப்படி கூட்டி அமைக்கப்பட்ட பால், தயிர், நெய், தேன், சர்க்கரை என்பவைகளினது தொகுதியாம்.

**310. பலபஞ்சாமிர்தம் என்பது என்னை?**

முற்கூறிய இரசபஞ்சாமிர்தத்தோடு கூட்டி அமைக்கப்பட்ட வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் என்பவைகளினது தொகுதியாம்.

311. கவ்வியத்துக்கு உரிய பசுக்கள் எவை?

வியாதிப் பசு, கிழப் பசு, கன்று செத்த பசு, கன்று போட்டுப் பத்துநாட்குதக முடைய பசு, மிடாரிக்கன்றாகிய பசு, சினைப்பசு, மலட்டுப்பசு, மலத்தைத் தின்னும் பசு என்னும் எண்வகைப் பசுக்க ளல்லாத மற்றைப் பசுக்களாம். பால் கறக்குமிடத்துப் பாத்திரத்தையுங் கைகளையுங் கன்றூட்டிய முலையையுஞ் சலத்தினாற் கழுவிக்கொண்டே கறத்தல் வேண்டும். கறந்தபின் பாலைப் பரிவட்டத்தினால் வடித்துக் கொள்ளல் வேண்டும்.

312. சந்தனக்குழம்போடு சேரற்பாலனவாகிய திரவியங்கள் எவை?

குங்குமப்பூ, கோரோசனை, பச்சைக்கர்ப்பூரம், புனுகு, சவ்வாது, கஸ்தூரி என்பவைகளாம்.

313. நைவேத்தியங்கள் எவை?

சுத்தான்னம், சித்திரான்ன வகைகள், நெய், காய்ச்சியபால், தயிர், கூப்பழம், தேங்காய்க்கீறு, சர்க்கரை, கறியமுதுகள், அபூப வகைகள், பானகம், பானீயம், வெற்றிலைபாக்கு, முகவாசம் என்பவைகளாம்

[ அபூபம் = பணிகாரம் ]

314. சித்திரான்ன வகைகள் எவை?

பருப்புப்பொங்கல், சர்க்கரைப்பொங்கல், மிளகோதனம், புளியோதனம், தத்தியோதனம், கடுகோதனம், எள்ளோதனம், உழுந்தோதனம், பாயசம் என்பவைகளாம்.

315. பணிகார வகைகள் எவை?

மோதகம், பிட்டு, அப்பம், வடை, தேன்குழல் அதிரசம், தோசை, இட்டலி என்பவைகளாம்.

316. பானீயம் என்பது என்னை?

ஏலம், சந்தனம், பச்சைக்கர்ப்பூரம், பாதிரிப்பூ, செங்கழுநீர்ப்பூ என்பவைகள் இடம்பெற்ற சலம்.

317. முகவாசம் என்பது என்னை?

ஏலம், இலவங்கம், பச்சைக்கர்ப்பூரம், சாதிக்காய், தக்கோலம் என்பவற்றின் பொடியைப் பனிநீரோடு கூட்டிச் செய்த குளிகை.

318. மேலே சொல்லப்பட்டவைகளன்றிச் சிவாலயப் பணிகள் இன்னும் உள்ளனவா?

உள்ளன; அவை, திருவீதியில் உள்ள புல்லைச் செதுக்குதல், திருக்கோபுரத்திலுந் திருமதில்களிலும் உண்டாகும் ஆல் அரசு முதலியவற்றை வேரோடு களைதல், திருக்கோயிலையுந் திருக்குளத்தையுந் திருவீதியையும் எச்சில் மலசலம் முதலியவைகளினால் அசுசி யடையா வண்ணம் பாதுகாத்தல், திருக்கோயிலினுள்ளே புகத் தகாத இழிந்த சாதியாரும், புறச்சமயிகளும், ஆசாரம் இல்லாதவரும், வாயிலே வெற்றிலை பாக்கு உடையவரும், சட்டை யிட்டுக் கொண்டவரும், போர்த்துக் கொண்டவரும், தலையில் வேட்டி கட்டிக்கொண்டவரும் உட்புகாவண்ணந் தடுத்தல், திருவிழாக் காலத்திலே திருவீதி யெங்குந் திருவலகிட்டுச் சலந்தெளித்தல், வாகனந் தாங்கல், சாமரம் வீசுதல், குடை கொடி ஆலவட்டம் பிடித்தல் முதலியவைகளாம்.

திருச்சிற்றம்பலம்

## 12. சிவாலய தரிசன வியல்

**319. திருக்கோயிலுக்கு எப்படிப் போதல் வேண்டும்?**

ஸ்நானஞ் செய்து, தோய்த்துலர்ந்த வஸ்திரந் தரித்துச், சந்தியாவந்தன முதலியன முடித்துக்கொண்டு தேங்காய், பழம், பாக்கு, வெற்றிலை, கர்ப்பூரம் முதலியன வைக்கப்பட்ட பாத்திரத்தைத் தாமே எடுத்துக் கொண்டேனும், பிறரால் எடுப்பித்துக் கொண்டேனும், வாகனாதிக மின்றி நடந்து போதல் வேண்டும்.

**320. திருக்கோயிலுக்குச் சமீபித்தவுடனே யாது செய்தல் வேண்டும்?**

கால்களைக் கழுவி ஆசமனஞ் செய்து, தூலலிங்கமாகிய திருக்கோபுரத்தைத் தரிசித்து, இரண்டு கைகளையுஞ் சிரசிலே குவித்துச், சிவநாமங்களை உச்சரித்துக்கொண்டு உள்ளே போதல் வேண்டும்.

**321. திருக்கோயிலுள்ளே போனவுடன் யாது செய்தல் வேண்டும்?**

பலிபீடத்தையுந் துவசத்தம்பத்தையும் இடபதேவரையுங் கும்பிட்டுப், பலிபீடத்துக்கு இப்பால், வடக்கு நோக்கிய சந்நிதியாயினும் மேற்கு நோக்கிய சந்நிதியாயினும் இடப்பக்கத்திலும், கிழக்கு நோக்கிய சந்நிதியாயினும் தெற்கு நோக்கிய சந்நிதியாயினும் வலப்பக்கத்திலும் நின்று, அபிஷேக சமயம் நிவேதன சமயமல்லாத சமயத்திலே, ஆடவர் அட்டாங்க நமஸ்காரமும், பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரமும், மூன்றுதரமாயினும், ஐந்துதர மாயினும், ஏழுதர மாயினும், ஒன்பதுதர மாயினும், பன்னிரண்டுதர மாயினும் பண்ணல் வேண்டும்: நமஸ்காரம் ஒருதரம் இருதரம் பண்ணல் குற்றம்;

322. அட்டாங்க நமஸ்காரமாவது யாது?

தலை, கை யிரண்டு, செவி யிரண்டு, மோவாய் புயங்களிரண்டு என்னும் எட்டவயவமும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

323. இந்த நமஸ்காரம் எப்படிப் பண்ணல் வேண்டும்?

பூமியிலே சிரசை வைத்து, மார்பு பூமியிலே படும்படி வலக்கையை முன்னும் இடக்கையைப் பின்னும் நேரே நீட்டிப், பின் அம்முறையே மடக்கி, வலப்புயமும், இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்க நீட்டி, வலக்காதை முன்னும் இடக்காதைப் பின்னும் மண்ணிலே பொருந்தச் செய்தல் வேண்டும்.

324. பஞ்சாங்க நமஸ்காரமாவது யாது?

தலை, கை யிரண்டு, முழந்தா ளிரண்டு என்னும் ஐந்தவயவமும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதல்.

325. நமஸ்காரம் பண்ணியபின் யாது செய்தல் வேண்டும்?

எழுந்து, இரண்டு கைகளையுங் குவித்து, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு, கால்களை மெல்ல வைத்து மூன்றுதர மாயினும் ஐந்துதர மாயினும் ஏழுதர மாயினும் ஒன்பதுதர மாயினும் பதினைந்துதர மாயினும் இருபத்தொருதர மாயினும் பிரதக்ஷிணம் பண்ணி, மீட்டுஞ் சந்நிதானத்திலே நமஸ்காரஞ் பண்ணல் வேண்டும்.

326. சுவாமி சந்நிதானங்களை எந்த முறையாகத் தரிசனஞ் செய்தல் வேண்டும்?

முன்பு துவாரபாலகரை வணங்கி, பின்பு கணநாயக ராகிய திருநந்திதேவரை வணங்கித் துதித்து. "பகவானே உம்முடைய திருவடிகளை அடைந்து அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசித்துப் பயன் பெறும் பொருட்டு அநுமதி செய்தருளும்" என்று பிரார்த்தித்துக்கொண்டு, உள்ளே போய், முன் விக்கினேசுரரைத் தரிசனஞ் செய்து, பின் சிவலிங்கப் பெருமான் சந்நிதியையும் உமாதேவியார் சந்நிதியையும் அடைந்து, ஆதிசைவரைக் கொண்டு அருச்சனை செய்வித்துப் பழம் பாக்கு வெற்றிலை முதலியனவற்றை நிவேதிப்பித்துக் கர்ப்பூராராத்திரிகம் பணிமாறப் பண்ணித் தரிசனஞ் செய்து விபூதிவாங்கித் தரித்துக் கொண்டு, அதன் பின் சபாபதி தக்ஷிணா மூர்த்தி சோமாஸ்கந்தர் சந்திரசேகரர் சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையுஞ் சமயகுரவர் நால்வரையுந் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

327. விக்கினேசுரரை தரிசிக்கும்பொழுது யாது செய்தல் வேண்டும் ?

முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டி, வலக்காதை இடக் கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு மூன்று முறை தாழ்ந்தெழுந்து கும்பிடல் வேண்டும்.

328. தரிசனம் முடிந்தவுடன் யாது செய்தல் வேண்டும் ?

பிரதக்ஷிணஞ் செய்து சண்டேசுரர் சந்நிதியை அடைந்து கும்பிட்டுத் தோத்திரஞ் செய்து மூன்று முறை கைகொட்டிச் சிவதரிசன பலத்தைத் தரும் பொருட்டுப் பிரார்த்தித்து வலமாக வந்து இடபதேவருடைய இரண்டு கொம்பி னடுவே சிவலிங்கப்பெரு

மானைத் தரிசித்துப் பலிபீடத்தக்கு இப்பால் மும்முறை நமஸ்கரித்து எழுந்து இருந்து ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை நூறுதரமும் அகோர மந்திரத்தை நூறுதரமுஞ் செபித்துக் கொண்டு எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

329. அம்மையார் திருக்கோயில் வேறாயிருக்கின், யாது செய்தல் வேண்டும்?

அம்மையார் திருக்கோயிலினுள்ளே போய், முன் சொல்லியமுறை பிறழாமற் பலிபீடத்துக்கு இப்பாலே நான்குதரம் நமஸ்காரம் பண்ணி எழுந்து. இரண்டு கைகளையுங் குவித்துக்கொண்டு நாலுதர முதலாக இரட்டுறு மூறையிற் பிரதக்ஷிணஞ் செய்து, மீண்டுஞ் சந்நிதியை யடைந்து, நமஸ்காரம் பண்ணி எழுந்து. துவாரபாலகிகளைக் கும்பிட்டு அநுமதி பெற்று, உள்ளே புகுந்து, விக்கினேசுரரைத் தரிசித்துத், தேவியார் சந்நிதியை அடைந்து, அருச்சனை முதலியன செய்வித்துத் தரிசனஞ் செய்து, விபூதி குங்கும முதலியன வாங்கித் தரித்துக்கொண்டு, மகேசுவரியையும் வாமை முதலிய சத்திகளையும் விக்கினேசுரர் சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளையுந் தரிசித்துச் சண்டேசுவரி சந்நிதியை அடைந்து கும்பிட்டு, மூன்று முறை கைகொட்டித், தேவி தரிசன பலத்தைத் தரும் பொருட்டுப் பிரார்த்தித்து, வலமாக வந்து சந்நிதியை அடைந்து. நான்குதரம் நமஸ்கரித்து எழுந்து இருந்து, தேவியாருடைய மூலமந்திரத்தை இயன்ற மட்டுஞ் செபித்துக் கொண்டு எழுந்து வீட்டுக்குப் போதல் வேண்டும்.

330. நித்தியமும் நியமமாக ஆலய தரிசனஞ் செய்ய இயலாதவர் யாதுசெய்தல் வேண்டும்?

சோமவாரம், மங்களவாரம், சுக்கிரவாரம், பிரதோஷம், பௌர்ணிமை, அமாவாசை, திருவாதிரை, கார்

திகை, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திரகிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகசதுர்த்தி, விநாயக சட்டி, கந்தசட்டி முதலிய புண்ணிய காலங்களிலாயி னும் தரிசனஞ் செய்தல் வேண்டும்.

331. பிரதோஷ காலத்திலே சிவலிங்கப் பெரு மானை எப்படித் தரிசித்தல் வேண்டும்?

இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமா கச் சென்று சண்டேசுரரைத் தரிசித்துச், சென்ற வழி யே திரும்பி வந்து மீண்டும் இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் வலமாகச் சென்று வடதிசையைச சேர்ந்து, கோமுகையைக் கடவாது, முன் சென்ற வழியே திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து, அங்கு நின்றும் இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்து, அங்கு நின்றுந் திரும்பி, இடபதேவரைத் தரிசியாது வலமாகச் சென்று வடதிசையைச் சேர்ந்து, அங்கு நின்றுந் திரும்பி வந்து இடபதேவரைத் தரிசி யாது இடமாகச் சென்று சண்டேசுரரைத் தரிசித்துத், திரும்பி வந்து இடபதேவரைத் தரிசித்து, அவருடைய இரண்டு கொம்பினடுவே பிரணவத்தோடு கூட ஹர ஹர என்று சொல்லிச் சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து வணங்கல் வேண்டும்.

332. பிரதோஷ காலத்திலே விதிப்படி மெய்யன் போடு சிவதரிசனஞ்செய்யிற் பயன் என்னை?

கடன், வறுமை, நோய், பயம், கிலேசம், அப ம்ருத்து, மரண வேதனை, பாவம் என்னும் இவை களெல்லாம் நீங்கும்; முத்தி சித்திக்கும்.

333. திருக்கோயிலிலே செய்யத் தகாத குற்

றங்கள் யாவை?

ஆசாரமில்லாது போதல், கால் கழுவாது போதல், எச்சிலுமிழ்தல், மலசலங் கழித்தல், மூக்குநீர் சிந்துதல், பாக்கு வெற்றிலையுண்டல், போசன பானம் பண்ணுதல், ஆசனத்திருத்தல், சயனித்தல் காலை நீட்டிக் கொண்டிருத்தல், மயிர் கோதி முடித்தல், சூதாடல், சிரசிலே வஸ்திரந் தரித்துக்கொள்ளுதல், தோளிலே உத்தரீயம் இட்டுக்கொள்ளுதல், போர்த்துக்கொள்ளுதல், சட்டை யிட்டுக்கொள்ளுதல், பாதரக்ஷை யிட்டுக் கொள்ளுதல், விக்கிரகத்தைத் தொடுதல், நிருமாலியத்தைக் கடத்தல், நிருமாலியத்தை மிதித்தல்; சுவாமி துவசத்தம்பம் பலிபீடம் இடபம் விக்கிரகம் என்னும் இவைகளின் நிழலை மிதித்தல், வீண்வார்த்தை பேசுதல், சிரித்தல், சண்டையிடுதல், விளையாடுதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்குங் குறுக்கே போதல், ஒருதரம் இருதரம் நமஸ்கரித்தல், ஒருதரம் இருதரம் வலம் வருதல், ஓடி வலம் வருதல், சுவாமிக்கும் பலிபீடத்துக்கும் இடையே நமஸ்கரித்தல், அகாலத்திலே தரிசிக்கப் போதல், திரைவிட்டபின் வணங்குதல், அபிஷேக காலத்திலும் நிவேதன காலத்திலும் வணங்குதல், முற்பக்கத்தும் பிற்பக்கத்தும் வணங்குதல், திருவிளக்கவியக்கண்டுந் தூண்டாதொழிதல், திருவிளக்கில்லாதபொழுது வணங்குதல் உத்சவங் கொண்டருளும்பொழுது அங்கே யன்றி உள்ளே போய் வணங்குதல் முதலியவைகளாம். இக் குற்றங்களுள் ஒன்றை யறியாது செய்தவர் அகோர மந்திரத்தில் ஆயிரம் உருச் செபிக்கின் அக் குற்றம நீங்கும். இக் குற்றங்களை அறிந்து செய்தவர் நரகத்தில் வீழ்ந்து வருந்துவர்.

திருச்சிற்றம்பலம்

## 13. குருசங்கம சேவை யியல்

### 334. குரு என்றது யாரை?

தீக்ஷாகுரு, வித்தியாகுரு, போதககுரு முதலனையி னாரை, குரு, ஆசாரியன், தேசிகன், பட்டாரகன் என்பன ஒரு பொருட் சொற்கள்.

### 335. சங்கமம் என்றது என்னை?

நிருவாண தீக்ஷிதர், விசேஷ தீக்ஷிதர், சமய தீக்ஷிதர் என்னும் மூத்திறத்துச் சிவபத்தர்களை.

### 336. குருவையுஞ் சிவபத்தரையும் யாது செய்தல் வேண்டும்?

மனிதர் எனக் கருதாது சிவபெருமா னெனவே கருதி, மனம், வாக்குக் காயம் என்னும் மூன்றினா லுஞ் சிரத்தையோடு வழிபடல் வேண்டும். பிரதிட்டை செய்து பூசிக்கப்படும் சிவலிங்கத்தைச் சிலையென்று நினைந்து அவமதிப்பவரும், சிவதீக்ஷைபெற்று இயன்ற மட்டும் விதிப்படி அநுட்டிக்குஞ் சிவ பத்தரை மனிதர் என்று நினைந்தேனும் அவருடைய பூருவ சாதியை நினைந்தேனும் அவமதிப்பவருந் தப்பாது நரகத்தில் வீழ்வர்,

### 337. சிவபத்தர்கள் சிவபெருமான் எனக் கருதப் படுதற்குக் காரணம் என்னை?

சிவபெருமான் வேறற அதிட்டித்து நிற்கப்பெறு வனவாய்க் கண்டவுடனே சிவபெருமானை நினைப் பிப்பனவாய் உள்ள திருவேடங்களை யுடைமையும், நாடோறும் ஸ்ரீகண்டநியாசம் பிஞ்சப்பிரமஷடங்க நியாசம் அஷ்டத்திரிம்சத்கலாநியாசங்கள் வாயிலாகச் செய்யுஞ் சிவோகம்பாவனையும், பிராசாதயோகஞ் செய்தலும் தம்மின் இரண்டற இயைந்த சிவத்தோடு

கலந்து நிற்குந் தன்மையுமாம்; சிவபத்தரைச் சிவமெனக் கண்டு வழிபடுதற்கு, வேடம், பாவனை, செயல், தன்மை என்னும் இந்நான்கனுள் ஒன்ற்றயமையும்.

338. சிவனடியாரை வழிபடாது சிவலிங்கத்தை மாத்திரம் வழிபடலாகாதா?

ஒருவன் ஒரு பெண்ணினிடத்து அன்புடைமை அவளுடைய சுற்றத்தாரைக் கண்டபொழுது அவனுக்கு உண்டாகும் அன்பி னளவுபற்றியே தெளியப்படும். அது போல, ஒருவன் சிவபெருமானிடத்து அன்புடைமை அவருடைய அடியாரைக் கண்டபொழுது அவனுக்கு உண்டாகும் அன்பி னளவுபற்றியே தெளியப்படும். ஆதலினாலே, சிவனடியாரிடத்து அன்பு செய்யாது அவமானஞ் செய்துவிட்டுச் சிவலிங்கப் பெருமானிடத்தே அன்புடையவர் போல் ஒழுகுதல், வயிறு வளர்ப்பின் பொருட்டும் இடம்பத்தின் பொருட்டும் நடித்துக் காட்டும் நாடகமாத்திரையேயன்றி வேறில்லை;

339. சிவபத்தர்களோடு இணங்குதலாற் பயன் என்னை?

காமப்பற் றுடையவருக்கு, அச்சம்பந்த முடையவருடைய இணக்கம் அக்காமத்தை வளர்த்தலால் அவ்விணக்கத்தில் விருப்பு மிகுதியும், அவரல்லாத பிறருடைய இணக்கம் அக்காமத்தைக் கெடுத்தலால் அவ்விணக்கத்தில் வெறுப்பு மிகுதியும் உண்டாகும்; அது போலச் சிவபத்தி யுடையவருக்கு அச்சம்பந்த முடையவருடைய இணக்கம் அச்சிவபத்தியை வளர்த்தலால் அவ்விணக்கத்தில் விருப்பு மிகுதியும், அவரல்லாத பிறருடைய இணக்கம் அச்சிவபத்தியைக் கெடுத்தலால் அவ்விணக்கத்தில் வெறுப்பு மிகுதியும் உண்டாகும்;

340. சமயதீக்ஷிதர் யாரை வணங்குதற்கு உரியர்?

ஆசாரியரையும், நிருவாணதீக்ஷிதரையும், விசேஷ தீக்ஷிதரையும், சமயதீக்ஷிதர்களுள்ளே தம்மின் மூத்தோரையும் வணங்குதற்கு உரியர்.

341. விசேஷதீக்ஷிதர் யாரை வணங்குதற்கு உரியர்?

ஆசாரியரையும், நிருவாணதீக்ஷிதரையும், விசேஷதீக்ஷிதர்களுள்ளே தம்மின் மூதத்தோரையும் வணங்குதற்கு உரியர்.

342. நிருவாண தீக்ஷிதர் யாரை வணங்குதற்கு உரியர்?

ஆசாரியரையும், நிருவாணதீக்ஷிதருள்ளே தம்மின் மூத்தோரையும் வணங்குதற்கு உரியர்.

343. ஆசாரியார் யாரை வணங்குதற்கு உரியர்?

ஆசாரியர்களுள்ளே தம்மின் மூத்தோரை வணங்குதற்கு உரியர்.

344. வருணத்தாலாவது ஆச்சிரமத்தாலாவது வருணம் ஆச்சிரமம் என்னும் இரண்டினாலுமாவது தம்மிற்றாழ்ந்தவர் தீக்ஷை முதலியவற்றினாலே தம்மின் உயர்ந்தவராயின், அவரை யாது செய்தல் வேண்டும்?

அவமதித்தலுஞ் செய்யாது, புறத்து வணங்குதலுஞ் செய்யாது, மனத்தால் வணங்கள் வேண்டும். அப்படிச் செய்யாது அவமதித்தவர் தப்பாது நரகத்தில் வீழ்வர். சிவஞானிகளேயாயின், அவரை, வருணம் ஆச்சிரமம் முதலியவை சற்றுங் குறியாது, எல்லாரும் வணங்கள் வேண்டும். எல்லை கடந்து முறுகி வளரும் மெய்யன்

யினால் விழுங்கப்பட்ட மனத்தை யுடையவர், திருவேட மாத்திர முடையவரைக் காணினும், வருணம் ஆச்சிரமம் முதலியன குறித்துக் கூசித் தடைப்படாது, உடனே அத்திருவேடத்தால் வசீகரிக்கப்பட்டு, அடியற்ற மரம்போல் வீழ்ந்து வணங்குவர்; அவ்வுண்மை திருத்தொண்டர் பெரியபுராணத்தினாலே தெளியப்படும்.

345. குருவையும் சிவனடியாரையும் எப்படிப் போய்த் தரிசித்தல் வேண்டும்?

வெறுங்கையுடனே போகாது, தம்மால் இயன்ற பதார்த்தத்தைக் கொண்டுபோய், அவர் சந்நிதியில் வைத்து, அவரை நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு, மீட்டும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, அவர் "இரு" என்றபின் இருத்தல் வேண்டும்.

346. குருவாயினுஞ் சிவனடியாராயினுந் தம் வீட்டுக்குவரின், யாது செய்தல் வேண்டும்?

விரைந்து எழுந்து குவித்த கையோடு எதிர்கொண்டு இன்சொற்களைச் சொல்லி, அழைத்துக்கொண்டு வந்து, ஆசனத் திருத்தி, அவர் திருமுன்னே இயன்றது யாதாயினும் வைத்து, அவர் திருவடிகளைப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்து, நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, விபூதி வாங்கித் தரித்துக் கொண்டு, மீட்டும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, அவர் "இரு" என்றபின் இருத்தல் வேண்டும். அவர் போம் பொழுது அவருக்குப் பின் பதினான்கடி போய் வழிவிடல் வேண்டும். இராக் காலத்திலும், பயமுள்ள இடத்திலும், அவருக்கு முன் போதல் வேண்டும்.

347. ஒருவர் தாம் பிறரை வணங்கும் வணக்கத்

தை எப்படிப் புத்தி பண்ணல் வேண்டும்?

"இவ்வணக்கம் இவருக் கன்று; இவரிடத்து வேறற நிற்குஞ் சிவபெருமானுக்கேயாம்" என்று புத்தி பண்ணல் வேண்டும்; அப்படிச் செய்யாதவர் அவ்வணக் கத்தா லாகிய பயனை இழப்பர்.

348. ஒருவர் தம்மைப் பிறர் வணங்கும் வணக் கத்தை எப்படிப் புத்தி பண்ணல் வேண்டும்?

"இவ்வணக்கம் நமக்கன்று நம்மிடத்து வேறற நிற்குஞ் சிவபெருமானுக்கேயாம்" என்று புத்தி பண்ணல் வேண்டும்; அப்படிச் செய்யாதவர் சிவத்திரவியத்தைக் கவர்ந்தவராவர்.

349. குருவுக்குஞ் சிவனடியாருக்குஞ் செய்யத் தகாத குற்றங்கள் யாவை?

கண்டவுடன் இருக்கைவிட் டெழாமை, அவர் எழும் பொழுது உடனெழாமை, அவர் திருமுன்னே உயர்ந்த ஆசனத் திருத்தல், காலை நீட்டிக்கொண்டிருத்தல் சயனித்துக் கொள்ளுதல், வெற்றிலை பாக்குப் புசித் தல், போர்த்துக் கொள்ளுதல், பாதுகையோடு செல் லல், சிரித்தல், வாகன மேற் செல்லல், அவராலே தரப்படுவதை ஒரு கையால் வாங்குதல், அவருக்குக் கொடுக்கப்படுவதை ஒரு கையாற் கொடுத்தல், அவ ருக்குப் புறங்காட்டல், அவர் பேசும்போது பராமுகஞ் செய்தல், அவர் கோபிக்கும்போது தாமுங் கோபித் தல், அவருடைய ஆசனம், சயனம், வஸ்திரம், குடை, பாதுகை முதலியவைகளைத் தாம் உபயோகித்தல், அவைகளைத் தங்காலினாலே தீண்டுதல், அவர் திரு நாமத்தை மகிமைப் பொருள்படும் அடைமொழியின்றி வாளாசொல்லல், அவரை யாராயினும் நிந்திக்கும் பொழுது காதுகளைப் பொத்திக்கொண்டு அவ்விடத்தி

வின்று நீங்கிவிடாது கேட்டுக்கொண்டிருத்தல் முதலிய வைகளாம்.

350. குரு முன்னுஞ் சிவனடியார் முன்னும் எப்படி விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்?

வஸ்திரத்தை ஒதுக்கிச், சரீரத்தைச் சற்றே வளைத்து, வாய்புதைத்து நின்று, அவரை "சுவாமீ" என்பது முதலிய சொற்களினாலே உயர்த்தியும், தன்னை "அடியேன்" என்பது முதலிய சொற்களினாலே தாழ்த்தியும், மெல்ல விண்ணப்பஞ் செய்தல் வேண்டும்.

351. கடவுளையும் குருவையுஞ் சிவனடியாரையுந் தாய் தந்தை முதலாயினாரையும் நமஸ்கரிக்கும் போது கால் நீட்டத் தக்க திக்குக்கள் எவை?

மேற்குந் தெற்குமாம். கிழக்கினும் வடக்கினுங் கால் நீட்டி நமஸ்கரிக்க லாகாது.

352. குருவையுஞ் சிவனடியார் முதலாயினாரையும் நமஸ்கரிக்க லாகாத காலங்களும் உண்டா?

உண்டு; அவர் கிடக்கும் போதும், வழி நடக்கும் போதும், பத்திரபுஷ்பம் எடுக்கும் போதும் வெற்றிலை பாக்கு உண்ணும் போது, ஸ்நானம் சந்தியாவந்தனம் பூசை ஓமம் சிராத்தம் போசன முதலியன பண்ணும் போதும், இராச சபையிலே போய் இருக்கும் போதும் அவரை நமஸ்கரிக்க லாகாது.

353. தீக்ஷாகுரு வித்தியாகுரு முதலாயினார் திருமுகம் விடுத்தருளின், அதை யாது செய்தல்

வேண்டும்?

பீடத்தின் மீது எழுந்தருளப் பண்ணிப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்து, நமஸ்கரித்து, இரண்டு கைகளாலும் எடுத்து, இரண்டு கண்களிலும் ஒற்றிச், சிரசின் மேல் வைத்துப், பின்பு திருக்காப்பு நீக்கி வாசித்தல் வேண்டும்.

354. தான் வழிபட்டு வந்த ஆசாரியன் பெரும் பாவங்களைச் செய்வானாயின் அவனை யாது செய்தல் வேண்டும்?

தானே பூசித்து வந்த சிவலிங்கம் அக்கினியினாலே பழுது படின், அதனை இகழாது மனநொந்து கைவிட்டு வேறொரு சிவலிங்கத்தைக் கைக்கொள்வது போலத், தான் வழிபட்டு வந்த ஆசாரியன் சிவநிந்தை சிவத்திரவியாபகாரம் முதலிய பெருங்கொடும் பாதகங்கள் செய்து கெடுவானாயின், அவனை இகழாது மனநொந்து கைவிட்டு வேறோராசாரியனை அடைந்து வழிபடல் வேண்டும்.

355. குருவினிடத்தே சிவசாத்திரம் எப்படிப் படித்தல் வேண்டும்?

நாடோறும் ஸ்நான முதலிய நியதிகளை முடித்துக் கொண்டு, கோமயத்தினாலே சுத்தி செய்யப்பட்ட தானத்திலே பீடத்தை வைத்து, அதன் மீது பட்டுப் பரிவட்டத்தை விரித்து, அதன் மீது சிவசாத்திரத் திருமுறையை எழுந்தருளப் பண்ணிப், பத்திர புஷ்பங்களால் அருச்சித்து நமஸ்கரித்துப், பின்பு ஆசாரியருடைய திருவடிகளையும் அருச்சித்து நமஸ்கரித்து, அவர் கிழக்கு முகமாகவேனும் வடக்கு முகமாகவேனும் இருக்க, அவருக்கு எதிர்முகமாக இருந்து படித்தல்

வேண்டும். படித்து முடிக்கும் பொழுதும் அப்படியே நமஸ்கரித்தல் வேண்டும். இப்படிச் செய்யாது படித்தவர் படித்ததனால் ஆகிய பயனை இழப்பர், அம்மட்டோ; நரகத்திலும் விழுந்துவருந்துவர். [ திருமுறை = புத்தகம் ]

356. சிவசாத்திரம் படிக்கலாகாத காலங்கள் எவை?

பிரதமை, அட்டமி, சதுர்த்தசி, அமாவாசை, பௌர்ணிமை, உத்தராயணம், தக்ஷிணாயனம், சித்திரை விஷு, ஐப்பசிவிஷு, சந்நியாகாலம், ஆசௌசகாலம், மகோற்சவ காலம் என்பவைகளாம்.

357. எடுத்துக்கொண்ட சிவசாத்திரம் படித்து முடித்த பின், யாது செய்தல் வேண்டும்?

சிவலிங்கப் பெருமானுக்கும் சிவசாத்திரத் திருமுறைக்கும் வித்தியாகுருவுக்கும் விசேஷ பூசை செய்து அவர் திருமுன் இயன்ற தக்ஷிணை முதலியன வைத்து நமஸ்கரித்து அவரையுந் தீக்ஷாகுருவையும் மாகேசுரர்களையும் குருடர் முடவர் முதலானவர்களையும் பூசித்து அமுது செய்வித்தல் வேண்டும்.

358. சிவசாத்திரத்தைக் கைம்மாறு கருதிப் படிப்பிக்கலாமா?

அச்சம், நண்பு, பொருளாசை என்பவை காரணமாகச் சிவசாத்திரத்தை ஒருவருக்கும் படிப்பிக்கலாகாது; நல்லொழுக்கமுங் குருலிங்க சங்கமபத்தியும் உடைய நன்மாணாக்கர்களுக்கு அவர்கள் உய்வது கருதக் கருணையினாலே படிப்பித்தல் வேண்டும். அவர்கள் விரும்பித் தருந் தக்ஷிணையைத் தாஞ் செய்த உதவிக்குக் கைம்மாறெனக் கருதி ஆசையால் வாங்

காது, அவர்கள் உய்யுந் திறங் கருதிக் கருணையால் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.

359. மாணாக்கர்கள் தாங்கள் குருவுக்குக் கொடுக்குந் தக்ஷிணையை அவர் செய்த உதவிக்குக் கைம்மாறெனக் கருதலாமா?

தாங்கள் குருவுக்கு எத்துணைப் பொருள் கொடுப்பினும், தங்களை அவருக்கு அடிமையாக ஒப்பித்து விடுதல் ஒன்றையேயன்றி, அப்பொருளைக் கைம்மாறெனக் கருதிவிடலாகாது.

360. தீக்ஷாகுரு வித்தியாகுரு முதலாயினார் சிவபதமடைந்து விடின், யாது செய்தல் வேண்டும்?

வருஷந்தோறும் அவர் சிவபத மடைந்த மாச நக்ஷத்திரத்திலாயினும் திதியிலாயினும் அவரைக் குறித்துக் குருபூசை செய்துகொண்டு வரல் வேண்டும்.

361. இன்னும் எவ்வெவருக்குக் குருபூசை செய்வது ஆவசியகம்?

பல அற்புதங்களைச் செய்து தமிழ்வேதத்தைத் திருவாய் மலர்ந்தருளியருந் சைவசமயத்தைத் தாபித்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய சமயகுரவர் நால்வருக்கும், அறுபத்துமூன்று நாயன்மாருடைய மொய்மையையும் அவ்வன்புக்கு எளிவந்தருளிய சிவபெருமானுடைய பேரருளையும் அறிவித்து அவரிடத்தே அன்புதிக்கச் செய்யும் பெரியபுராணத்தைத் திருவாய் மலர்ந்தருளிய சேக்கிழார் நாயனாருக்கும் பதி பசு பாசம் என்னுந் திரிபதார்த்தங்களின் இலக்கணங்களை அறிவிக்குஞ் சைவசித்தாந்த நூலுணர்ச்சியை வளர்த்தருளிய மெய்கண்டதேவர் முதலிய

சந்தான குரவர் நால்வருக்கும், தமிழ் வழங்கு நிலமெங்கும் நல்லறிவுச்சுடர் கொளுத்தி யருளிய தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனாருக்கும் இயன்றமட்டுங் குருபூசை செய்துகொண்டே வருவது ஆவசியகம்.

## 362. இந்நாயன்மார்களுடைய குருபூசைத் தினங்கள் எவை?

1. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்...வைகாசி மூலம்.
2. திருநாவுக்கரசு நாயனார் ... சித்திரை சதயம்.
3. சுந்தரமூர்த்தி நாயனார் ... ஆடி சுவாதி.
4. மாணிக்கவாசக சுவாமிகள் ... ஆனி மகம்.
5. சேக்கிழார் நாயனார் ... வைகாசி பூசம்.
6. மெய்கண்டதேவர் ... ஐப்பசி சுவாதி.
7. அருணந்திசிவாசாரியர் ... புரட்டாதி பூரம்.
8. மறைஞானசம்பந்த சிவாசாரியர்... ஆவணி உத்தரம்.
9. உமாபதி சிவாசாரியார் ... சித்திரை அத்தம்.
10. திருவள்ளுவ நாயனார் ... மாசி உத்தரம்.

## 363. குருபூசைக்குத் தக்க பொருளில்லாதவர்கள் யாது செய்தல் வேண்டும்?

குருபூசை செய்யப்படுந் தானத்திலே தங்கள் தங்களால் இயன்ற பதார்த்தங்கள் கொண்டுபோய்க் கொடுத்துத் தரிசனஞ் செய்தல் வேண்டும். அதுவும் இயலாதவர்கள் கறி திருத்துதல் முதலிய திருத்தொண்டுகளேனுஞ் செய்தல் வேண்டும்.

## 364. குருபூசை எப்படிச் செய்தல் வேண்டும்?

திருக்கோயிலிலே சிவலிங்கப் பெருமானுக்கும், அந் நக்ஷத்திரத்திலே சிவபதம் அடைந்த நாயனார் திருவுருவம் உள்ளதாயின் அதற்கும் விசேஷ பூசை செய்வித்துத் தரிசனஞ் செய்துகொண்டு, தம்மடத்துக்கு

அழைக்கப்பட்டும் அழைக்கப்படாததும் எழுந்தருளி வந்த சிவபத்தர்களை அந்நாயனாராகப் பாவித்துப் பூசித்துத் திருவமுது செய்வித்துச் சேஷம் புசித்தல் வேண்டும்.

365. சேஷம் எத்தனை வகைப்படும்?

பாத்திரசேஷம், பரிகலசேஷம் என இரண்டு வகைப் படும்.

திருச்சிற்றம்பலம்.

## 14. மாகேசுரபூசை யியல்

366. மாகேசுரபூசை யாவது யாது?

ஆசாரியர், நிருவாணதீக்ஷிதர், விசேஷதீக்ஷிதர், சமய தீக்ஷிதர் என்னும் நால்வகை மாகேசுரர்களையும் விதிப் படி பூசித்துத் திருவமுது செய்வித்தலாம். [ மாகே சுரர் = மகேசுரனை வழிபடுவோர் ]

367. மாகேசுரபூசையால் விளையும் பலம் ஏற்பவ ருடைய உயர்வு தாழ்வுகளினால் வேறுபடு மா?

ஆம்; வைதிகப்பிராமணர் ஆயிரம் பேருக்கு அன்ன தானஞ் செய்த பலமுஞ் சமயதீக்ஷிதர் ஒருவருக்கு அன்ன தானஞ் செய்த பலமும் ஒக்கும். வைதிகப் பிராமணர் பதினாயிரம் பேருக்கு அன்ன தானஞ் செய்த பலமும் விசேஷதீக்ஷிதர் ஒருவருக்கு அன்ன தானஞ் செய்த பலமும் ஒக்கும். வைதிகப்பிராமணர் லக்ஷம் பேருக்கு அன்ன தானஞ் செய்த பலமும் நிரு வாண தீக்ஷிதர் ஒருவருக்கு அன்ன தானஞ் செய்த

பலமும் ஒக்கும். வைதிகப்பிராமணர் கோடிபேருக்கு அன்னதானஞ் செய்த பலமும் சைவாசாரியார் ஒருவருக்கு அன்னதானஞ் செய்த பலமும் ஒக்கும்.

368. மாகேசுரபூசைக்குப் பாகஞ் செய்பவர்கள் எப்படிப் பட்டவர்களாய் இருத்தல் வேண்டும்?

சமசாதியார்களாய்ச், சிவதீக்ஷை பெற்றவர்களாய், நித்திய கருமந் தவறாது முடிப்பவர்களாய், சுசியுடையவர்களாய், மாகேசுரபூசைக்கு உபயோகப்படு மவைகளை மாகேசுரபூசை நிறைவேறு முன் புசிக்க நினைத்தலுஞ் செய்யாதவர்களாய் இருத்தல் வேண்டும்; இவ்வியல் பில்லாதவர்களாலே சமைக்கப்பட்டவை தேவப்பிரீதி யாகாது. இராக்ஷதப் பிரீதி யாகும்.

369. மாகேசுரபூசைக்கு விலக்கப்பட்ட பதார்த்தங்கள் யாவை?

உள்ளி, வெள்ளுள்ளி, உருண்டைச்சுரைக்காய், கொம்மடிக்காய், செப்புமுருங்கைக்காய், தேற்றாங்காய், அத்திக்காய், வெண்கத்தரிக்காய், பசளை, வள்ளி, கொவ்வை என்பவைகளாம்.

370. மாகேசுரபூசை எப்படிச் செய்தல் வேண்டும்?

மாகேசுரர்களைத் தூரத்தே கண்டவுடனே, சிரசின் மீது அஞ்சலி செய்து, விரைந் தெதிர்கொண்டு அழைத்துவந்து, அவர்களுடைய திருவடிகளைத் தீர்த்தத்தினால் விளக்கி, அத்தீர்த்தத்தைச் சிரமேற் றெளித்து, அவர்களைப் பந்தியாக இருத்தி, ஓதுவார்கள் தேவாரம் பண்ணுடன் ஓத, அன்னங் கறி முதலியவற்றைப் படைத்து, பத்திரபுஷ்பங்களால் அருச்சனை

செய்து, தூபதீபங் கொடுத்து, அவர்களெதிரே பூக்களைத் தூவி, நமஸ்காரம் பண்ணி, எழுந்து நின்று, ஆசீர்வாதம் முற்றியபின் திருவமுது செய்வித்தல் வேண்டும். அவர்கள் திருவமுது செய்து சாகத்தி செய்துகொண்ட பின், அவர்களெதிரே இயன்ற தக்ஷிணை வைத்து நமஸ்காரஞ் செய்து, விபூதி வாங்கித் தரித்துக்கொண்டு, மீட்டும் நமஸ்காரஞ் செய்து, சேஷம் புசித்தல் வேண்டும்.

371. மாகேசுரபூசைப் பந்திக்கு யோக்கியரல்லாதவர் யாவர்?

சிவநிந்தகர், குருநிந்தகர், சங்கமநிந்தகர், சிவசாத்திர நிந்தகர், சிவத்திரவியாபகாரிகள், அதீக்ஷிதர், நித்திய கருமம் விடுத்தவர் முதலாயினோர்.

372. மாகேசுரபூசையிலே மாகேசுரரை யாராகப் பாவித்துப் பூசித்தல் வேண்டும்?

மாகேசுரபூசை எந்தத் தேவரைக் குறித்துச் செய்யப்படுகின்றதோ, அந்தத் தேவராகப் பாவித்துப் பூசித்தல் வேண்டும்.

373. பூசை செய்யப்படும் போது மாகேசுரர்கள் யாது செய்தல் வேண்டும்?

பூசிப்பவன் எத்தேவரைக் குறித்துப் பூசிக்கின்றானோ அத்தேவரைத் தாம் இடையறாது மெய்யன்போடு தியானித்துக்கொண் டிருந்து அப்பூசையை அவருக்கு ஒப்பித்தல் வேண்டும்.

374. பந்தி வஞ்சனை செய்து புசித்தவரும் படைத்தவரும் படைப்பித்தவரும் யாது பெறுவர்?

கண்டமாலையால் வருந்துவர்; ஊர்ப்பன்றிகளாய்ப் பிறந்து மலத்தைத் தின்பர்; நரகங்களில் வீழ்ந்து நெடுங்காலம் வருந்துவர். ஆதலினால், வஞ்சனை ஒரு சிறிதும் இன்றி எல்லாருக்குஞ் சமமாகவே படைத்தல் படைப்பித்தல் வேண்டும். பந்தி வஞ்சனை செய்து படைக்கப்பட்டவைகள் பிசாசுகளுக்கும் இராக்ஷதர்களுக்கும் அசுரர்களுக்குமே பிரீதியாகும்; தேவப் பிரீதியாகா.

375. மாகேசுரபூசா காலத்திலே மாகேசுரரல்லாதவர் வரின், யாது செய்தல் வேண்டும்?

குருடர், முடவர், குழந்தைகள், வயோதிகர், வியாதியாளர், வறியவர் என்பவர்கள் வரின், அவர்களை விலக்காது, இன்சொற்களினாலே மிக மகிழ்வித்து, அவர்களுக்கும் அன்னங் கொடுத்தல் வேண்டும். வறியவருக்குக் கொடுத்தலே கொடை; செல்வருக்குக் கொடுத்தல் திரும்ப வாங்குதற் பொருட்டுக் கடன் கொடுத்தல் போலும்.

376. மாகேசுரபூசை ஆவசியமாக எவ்வெக் காலங்களிலே செய்தல் வேண்டும்?

தீக்ஷை பெற்றுக்கொண்ட பொழுதும், சிவலிங்கப் பிரதிட்டை செய்வித்துக்கொண்ட பொழுதும், விரதம் அநுட்டிக்கும் பொழுதும், உபவாசஞ் செய்து பாரணம் பண்ணும் பொழுதும், சிவசாத்திர சிவபுராணங்கள் படிக்கத் தொடங்கிய பொழுதும், படித்து முடித்த பொழுதும், புண்ணியஸ்தல யாத்திரைக்குப் புறப்படும் பொழுதும், புண்ணியஸ்தலத்தை அடைந்த பொழுதும், யாத்திரை செய்து திரும்பி வீடு சேர்ந்த பொழுதும், திருக்கோயிலிலே பிரதிட்டை சம்புரோக்ஷணம் மகோற்சவம் முதலியவை நடக்கும் பொழுதும்

வியாதியினாலே பீடிக்கப்பட்டு மருந்து உட்கொள்ளத் தொடங்கும் பொழுதும், வியாதி நீங்கிய பொழுதும் மாகேசுரபூசை ஆவசியமாகச் செய்தல் வேண்டும்.

377. அவ்விசேஷ தினங்களின் மாகேசுரபூசை செய்பவர்களும் மாகேசுர பூசையிலே அருச்சனை யேற்று அமுது செய்யப் புகும் மாகேசுரர்களும் அத்தினத்திலே எப்படிப்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும்?

மாகேசுரபூசைக்கு முன்னே யாதொன்றும் புசிக்கலாகாது. அன்றிரவிலே பசித்ததாயின், அன்னம் புசியாது பால் பழ முதலியவற்றுள் இயன்றது உட்கொண்டு சுத்தர்களாகிச் சிவபெருமானையே சிந்தித்துக்கொண்டு, நித்திரை செய்தல் வேண்டும். முதனாளிராத்திரியும் அப்படியே செய்தல் வேண்டும்.

378. முன் செய்த பாவங்களினால் வந்த மகாரோகங்களினாலே பீடிக்கப்படுவோர் மாகேசுரபூசை எப்படிச் செய்தல் வேண்டும்?

ஒரு மண்டலமாயினும், பாதி மண்டலமாயினும், விதிப்படி சிரத்தையோடு புண்ணிய ஸ்தலத்திலே புண்ணிய தீர்த்தத்திலே ஸ்நானஞ் செய்து, சிவலிங்கப் பெருமானுக்கு விசேஷபூசை செய்வித்து, மாகேசுர பூசை பண்ணிச் சேஷம் புசித்துக்கொண்டு வரல் வேண்டும். அதன் பின்னரே மருந்து உட்கொள்ளல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

## 15. விரத வியல்

**379. விரதமாவது யாது?**

மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனுஞ் சுருக்கியேனும் மனம் வாக்குக் காயம் என்னும் மூன்றினாலுங் கடவுளை விதிப்படி மெய்யன்போடு விசேஷமாக வழிபடுதல்.

### சிவ விரதம்

**380. சிவ விரதம் எத்தனை?**

சோமவார விரதம், திருவாதிரை விரதம், உமாமகேசுர விரதம், சிவராத்திரி விரதம், கேதார விரதம் கலியாணசுந்தர விரதம், சூல விரதம், இடப விரதம் என எட்டாம். பிரதோஷ விரதமுஞ் சிவ விரதம்.

**381. சோமவார விரதமாவது யாது?**

கார்த்திகை மாச முதற் சோமவாரந் தொடங்கிச் சோமவாரந்தோறுஞ் சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் உபவாசம் உத்தமம்; அது கூடாதவர் ஒருபொழுது இரவிலே போசனஞ் செய்யக் கடவர்; அதுவுங் கூடாதவர் ஒருபொழுது பகலிலே பதினைந்து நாழிகையின் பின் போசனஞ் செய்யக் கடவர். இவ்விரதம் வாழ்நாளளவாயினும், பன்னிரண்டு வருஷ காலமாயினும், மூன்று வருஷ காலமாயினும், ஒரு வருஷ காலமாயினும், அநுட்டித்தல் வேண்டும். பன்னிரண்டு மாசத்திலும் அநுட்டிக்க இயலாதவர் கார்த்திகை மாசத்தின் மாத்திரமேனும் அநுட்டிக்கக் கடவர். [உபவாசம் = உணவின்றி யிருத்தல்.]

382. திருவாதிரை விரதமாவது யாது?

மார்கழி மாசத்துத் திருவாதிரை நக்ஷத்திரத்திலே சபாநாயகரைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் உபவாசஞ் செய்தல் வேண்டும். இவ்விரதஞ் சிதம்பரத்தில் இருந்து அநுட்டிப்பது உத்தமோத்தமம்.

383. உமாமகேசுர விரதமாவது யாது?

கார்த்திகை மாசத்துப் பௌர்ணிமையிலே உமாமகேசுர மூர்த்தியைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது பகலிலே போசனஞ் செய்யக் கடவர்; இரவிலே பணிகாரமும் பழமும் உட்கொள்ளலாம்.

384. சிவராத்திரி விரதமாவது யாது?

மாசி மாசத்துக் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி திதியிலே சிவபெருமானைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில், உபவாசஞ் செய்து, நான்கு யாமமும் நித்திரையின்றிச் சிவபூசை செய்தல் வேண்டும். நான்கு யாம பூசையும் அவ்வக் காலத்திற் செய்வது உத்தமம்; ஒரு காலத்திற் சேர்த்துச் செய்வது மத்திமம். பரார்த்தம் ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் சிவராத்திரி நான்கு யாம பூசையிலே சூரியதேவர் முதலிய பரிவாரங்களுக்குஞ் சோமாஸ்கந்தமூர்த்தி முதலிய மூர்த்திகளுக்கும் பூசை செய்ய வேண்டுவதில்லை. பரார்த்தத்திலே மகாலிங்கமாகிய மூலமூர்த்திகளுக்கும் ஆன்மார்த்தத்திலே மகாலிங்கத்துக்கும் மாத்திரம் பூசை செய்யக் கடவர். பரார்த்தம் ஆன்மார்த்தம் என்னும் இரண்டினும் விநாயகக் கடவுளுக்கு மாத்திரம் நான்கு யாமமும் பூசை செய்யலாம்; சண்டேசுர பூசை நான்கு யாமமுஞ் செய்தல் வேண்டும். சிவபூசை யில்லாதவர் நித்திரையின்றி, ஸ்ரீபஞ்சாக்ஷர செபமுஞ் சிவபுராண சிரவணமுஞ் செய்து, நான்கு யாமமுஞ் சிவாலயதரிசனம் பண்ணல் வேண்டும். இதில் உபவாசம் உத்தமம்;

நீரேனும் பாலேனும் உண்பது மத்திமம்; பழம் உண்பது அதமம்; தோசை முதலிய பணிகாரம் உண்பது அதமாதமம். சிவராத்திரி தினத்திலே இராத்திரியிற் பதினான்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் லிங்கோற்பவ காலம். நான்கு யாமமும் நித்திரை யொழிக்க இயலாதவர், லிங்கோற்பவ காலம் நீங்கும் வரையுமாயினும், நித்திரை யொழித்தல் வேண்டும். இக்காலத்திலே சிவதரிசனஞ் செய்வது உத்தமோத்தம புண்ணியம். இச்சிவராத்திரி விரதஞ் சைவசமயிகள் யாவராலும் அவசியம் அநுட்டிக்கத் தக்கது.

## 385. கேதார விரதமாவது யாது?

புரட்டாதி மாசத்திலே சுக்கிலபக்ஷ அட்டமி முதற் கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி யீறாகிய இருபத்தொரு நாளாயினும், கிருஷ்ணபக்ஷப் பிரதமை முதற் சதுர்த்தசி யீறாகிய பதினான்கு நாளாயினும், கிருஷ்ணபக்ஷ அட்டமி முதற் சதுர்த்தசி யீறாகிய ஏழு நாளாயினும், கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியாகிய ஒரு நாளாயினுங் கேதாரநாதரைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில், இருபத்தோரிழையாலாகிய காப்பை ஆடவர்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலுங் கட்டிக்கொண்டு, முதலிருபது நாளும் ஒவ்வொரு பொழுது போசனஞ் செய்து, இறுதிநாளாகிய சதுர்த்தசியிலே கும்பஸ்தாபனம் பண்ணிப் பூசை செய்து, உபவசித்தல் வேண்டும்; உபவசிக்க இயலாதவர் கேதாரநாதருக்கு நிவேதிக்கப்பட்ட உப்பில்லாப் பணிகாரம் உட்கொள்ளக் கடவர்.

## 386. கலியாணசுந்தர விரதமாவது யாது?

பங்குனி மாசத்து உத்தர நக்ஷத்திரத்திலே கலியாணசுந்தரமூர்த்தியைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது இரவிலே பரமான்னமும் பழமும் உட்கொள்ளல் வேண்டும்.

387. சூல விரதமாவது யாது?

தையமாவாசையிலே இச்சாஞானக்கிரியா சத்தி வடிவாகிய சூலாயுதத்தைத் தரித்த சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாம். இதில் ஒரு பொழுது பகலிலே போசனஞ் செய்தல் வேண்டும்; இராத்திரியில் ஒன்றும் உட்கொள்ள லாகாது.

388. இடப விரதமாவது யாது!

வைகாசி மாசத்துச் சுக்கிலபக்ஷ அட்டமியிலே இடபவாகனாரூடராகிய சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாம். இதில் ஒரு பொழுது பகலிலே போசனஞ் செய்தல் வேண்டும்.

389 பிரதோஷ விரதமாவது யாது?

சுக்கிலபக்ஷங் கிருஷ்ணபக்ஷம் என்னும் இரண்டு பக்ஷத்தும் வருகின்ற திரயோதசி திதியிலே, சூரியாஸ்தமயனத்துக்கு முன் மூன்றேமுக்கால் நாழிகையும் பின் மூன்றேமுக்கால் நாழிகையுமாய் உள்ள காலமாகிய பிரதோஷ காலத்திலே, சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாம். இவ்விரதம் ஐப்பசி கார்த்திகை சித்திரை வைகாசி என்னும் நான்கு மாசங்களுள் ஒன்றிலே சனிப்பிரதோஷ முதலாகத் தொடங்கி, அனுட்டித்தல் வேண்டும். பகலிலே போசனஞ் செய்யாது சூரியன் அஸ்தமிக்க நான்கு நாழிகை உண்டு என்னும் அளவிலே ஸ்நானஞ் செய்து, சிவபூசை பண்ணித், திருக்கோயிலிற் சென்று சிவதரிசனஞ் செய்துகொண்டு, பிரதோஷ காலங் கழிந்தபின் சிவனடியாரோடு போசனம் பண்ணல் வேண்டும். பிரதோஷ காலத்திலே போசனம், சயனம், ஸ்நானம் விஷ்ணு தரிசனம், எண்ணெய் தேய்த்தல், 'வாகன மேறல் மந்திர செபம், நூல் படித்தல் என்னும் இவ்வெட்டுஞ் செய்யலாகாது. பிரதோஷ காலத்திலே நியமமாக

மெய்யன்போடு சிவதரிசனஞ் செய்துகொண்டு வரின், கடன், வறுமை, நோய், பயம், க்லேசம், அவமிருத்து, மரணவேதனை, பாவம் என்னும் இவையெல்லாம் நீங்கும். அஸ்தமயனத்துக்கு முன் மூன்றே முக்கால் நாழிகையே சிவதரிசனத்துக்கு உத்தமகாலம்.

## தேவி விரதம்

390. தேவி விரதம் எத்தனை?

சுக்கிரவார விரதம், ஐப்பசி யுத்தர விரதம், நவராத்திரி விரதம் என மூன்றாம்.

391. சுக்கிரவார விரதமாவது யாது?

சித்திரை மாசத்துச் சுக்கிலபக்ஷத்து முதற் சுக்கிர வாரந் தொடங்கிச் சுக்கிரவாரந்தோறும் பார்வதி தேவியாரைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது பகலிலே போசனஞ் செய்தல் வேண்டும்.

392. ஐப்பசி யுத்தர விரதமாவது யாது?

ஐப்பசி மாசத்து உத்தர நக்ஷத்திரத்திலே பார்வதி தேவியாரைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது பகலிலே போசனஞ் செய்தல் வேண்டும்.

393. நவராத்திரி விரதமாவது யாது?

புரட்டாசி மாசத்துச் சுக்கிலபக்ஷப் பிரதமை முதல் நவமி யீறாகிய ஒன்பது நாளும் பார்வதிதேவியாரைக் கும்பத்திலே பூசை செய்து அநுட்டிக்கும் விரதமாம். இதிலே முதலெட்டு நாளும் பணிகாரம், பழ முதலி யவை உட்கொண்டு, மகா நவமியில் உபவாசஞ் செய்தல் வேண்டும்.

## விநாயக விரதம்

394. விநாயக விரதம் எத்தனை?

சுக்கிரவார விரதம், விநாயக சதுர்த்தி விரதம் விநாயக சட்டி விரதம் என மூன்றும்.

395. சுக்கிரவார விரதமாவது யாது?

வைகாசி மாசத்துச் சுக்கிலபக்ஷத்து முதற் சுக்கிரவாரந் தொடங்கிச் சுக்கிர வாரந்தோறும் விநாயகக்கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம் இதிலே பழ முதலியன இரவில் உட்கொள்ளல் வேண்டும்.

396. விநாயக சதுர்த்தி விரதமாவது யாது?

ஆவணிமாசத்துச் சுக்கிலபக்ஷ சதுர்த்தியிலே விநாயகக்கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம் இதில் ஒரு பொழுது பகலிலே போசனஞ் செய்து இரவிலே பழமேனும் பணிகாரமேனும் உட்கொள்ளல் வேண்டும். இத்தினத்திலே சந்திரனைப் பார்க்கலாகாது

397. விநாயகசட்டி விரதமாவது யாது?

கார்த்திகைமாசத்துக் கிருஷ்ணபக்ஷப் பிரதமை முதல் மார்கழி மாசத்துச் சுக்கிலபக்ஷ சட்டியீறாகிய இருபத்தொரு நாளும் விநாயகக்கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் இருபத்தோரிழையாலாகிய காப்பை ஆடவர்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலுங் கட்டிக்கொண்டு முதலிருபது நாளும் ஒவ்வொருபொழுது போசனஞ் செய்து, இறுதி நாளாகிய சட்டியில் உபவாசஞ் செய்தல் வேண்டும்.

## சுப்பிரமணிய விரதம்

398. சுப்பிரமணிய விரதம் எத்தனை?

சுக்கிரவார விரதம், கார்த்திகை விரதம், கந்தசட்டி விரதம் என மூன்றாம்.

399. சுக்கிரவார விரதமாவது யாது?

ஐப்பசிமாசத்து முதற் சுக்கிரவாரந் தொடங்கிச் சுக்கிர வாரந்தோறுஞ் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும்விரதமாம். இதில் உபவாசம் உத்தமம்; அது கூடாதவர் இரவிலேபழ முதலியன உட்கொள்ளக் கடவர்: அதுவுங் கூடாதவர் ஒரு பொழுது பகலிலே போசனம் பண்ணக் கடவர் இவ் விரதம் மூன்று வருஷகாலம் அநுட்டித்தல் வேண்டும்.

400. கார்த்திகை விரதமாவது யாது?

கார்த்திகை மாசத்துக் கார்த்திகை நக்ஷத்திர முதலாகத் தொடங்கி கார்த்திகை நக்ஷத்திரந் தோறும் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் உபவாசம் உத்தமம்; அது கூடாதவர் பழ முதலியன இரவில் உட்கொள்ளக் கடவர். இவ்விரதம், பன்னிரண்டு வருஷ காலம் அநுட்டித்தல் வேண்டும்.

401. கந்தசட்டி விரதமாவது யாது?

ஐப்பசி மாசத்துச் சுக்கிலபக்ஷப் பிரதமை முதற் சட்டியீறாகிய ஆறு நாளுஞ் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம், இதில் ஆறு நாளும் உபவாசஞ் செய்வது உத்தமம் அது கூடாதவர் முதலைந்து நாளும் ஒவ்வொரு பொழுது உண்டு, சட்டியில் உபவாசஞ் செய்யக் கடவர்: இவ்விரதம் ஆறு வருஷ காலம் அநுட்டித்தல் வேண்டும்.

மாசந் தோறுஞ் சுக்கிலபக்ஷ சட்டியிலே சுப்பிரமணி யக் கடவுளை வழிபட்டு, மா, பழம், பால், பானகம், மிளகு என்பவைகளுள் இயன்றது ஒன்று உட்கொண்டு வருவது உத்தமம்.

## வைரவ விரதம்

40 . வைரவ விரதம் எத்தனை?

மங்கலவார விரதம், சித்திரைப் பரணி விரதம், ஐப் பசிப் பரணி விரதம் என மூன்றாம்.

403. மங்கலவார விரதமாவது யாது?

தைமாசத்து முதற் செவ்வாய்க்கிழமை தொடங்கிச் செவ்வாய்க்கிழமைதோறும் வைரவக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஒரு பொழுது பகலிலே பழமேனும் பலகாரமேனும் அன்னமேனும் உட்கொள்ளல் வேண்டும்.

404. சித்திரைப் பரணி விரதமாவது யாது?

சித்திரை மாசத்துப் பரணி நக்ஷத்திரத்திலே வைர வக்கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதி லும் ஒருபொழுது பகலிலே பழமேனும் பணிகார மேனும் அன்னமேனும் உட்கொள்ளல் வேண்டும்.

405. ஐப்பசிப் பரணி விரதமாவது யாது?

ஐப்பசி மாசத்துப் பரணி நக்ஷத்திரத்திலே வைரவக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதி லும் ஒருபொழுது பகலிலே பழமேனும் பணிகார மேனும் அன்னமேனும் உட்கொள்ளல் வேண்டும்.

## வீரபத்திர விரதம்

406. வீரபத்திர விரதம் எத்தனை?

மங்கலவார விரதம் என ஒன்றேயாம்.

407. மங்கலவார விரதமாவது யாது?

செவ்வாய்க்கிழமை தோறும் வீரபத்திரக் கடவுளைக் குறித்து அநுட்டிக்கும் விரதமாம். இதில் ஒருபொழுது பகலிலே போசனஞ் செய்தல் வேண்டும்.

408. விரதம் அநுட்டிப்பவர் அவ்விரத தினத்தில் எவ்வெவைகளை நீக்கி எவ்வெவைகளைச் செய்தல் வேண்டும்?

காமங் கோப முதலிய குற்றங்களெல்லாவற்றையும் பற்றறக் களைதல் வேண்டும்; தவறாது வைகறையிலே நித்திரைவிட் டெழுந்துவிடல் வேண்டும்; புண்ணியதீர்த்தத்தை அடைந்து, விபூதி, வில்வத்தடி. மண், தருப்பை, கோமயம், திலம் எனபவைகளைச் சிரசிலே, வைத்துக், கையிலே பவித்திரஞ் சேர்த்துச், சங்கற்பஞ் சொல்லி, ஸ்நானஞ் செய்தல் வேண்டும். தியானஞ், செபம், பூசை, ஆலயதரிசனம், பிரதக்ஷிணம், புராண சிரவணம் முதலியன விசேஷமாகச் செய்தல் வேண்டும்; திருக்கோயிலிலே இயன்றமட்டும் நெய்விளக் கேற்றல் வேண்டும்; அபிஷேகத் திரவிய நைவேத்தியத் திரவியங்கள் கொடுத்தல் வேண்டும்; போசனம் பண்ணுமிடத்துச் சிவனடியாரி ஒருவரோடாயினும் போசனம் பண்ணல் வேண்டும்; நித்திரை செய்யுமிடத்து, இரவிலே, கோமயத்தினாலே மெழுகப்பட்ட தரையிலே, தருப்பையின் மேலே கடவுளைச் சிந்தித்துக்கொண்டு, அதிசுத்தராய் நித்திரை செய்து, வைகறையில் எழுந்துவிடல் வேண்டும்; உபவாச விரத தினத்துக்கு முதற் தினத்திலே ஒருபொழுது அபராணத்திலே போசனஞ்

செய்தல் வேண்டும். உபவாச விரத தினத்துக்கு மற்றை நாட் காலையிலே நித்தியகருமம் இரண்டும் முடித்துக் கொண்டு, மாகேசுர பூசை செய்து, ஆறு நாழிகையுள்ளே சுற்றத்தாரோடு பாரணம் பண்ணல் வேண்டும்; பாரணம் பண்ணிய பின், பகலிலே நித்திரை செய்யாது, சிவபுராணங்களைக் கேட்டுக்கொண் டிருத்தல் வேண்டும்; நித்திரை செய்தவர் சற்பிராமணர் நூற்றுவரைக் காரண மின்றிக் கொன்ற மகாபாதகத்தை அடைவர். [ பாரணம் = உபவாசத்துக்குப் பின் செய்யும் போசனம். ]

409. எவ்விதமாயினுஞ் சங்கற்பித்த கால வெல்லைவரையும் அநுட்டித்து முடித்த பின் யாது செய்தல் வேண்டும்?

விதிப்படி உத்தியாபனஞ் செய்தல் வேண்டும்; தொடங்கிய விரதத்தை இடையே விடுவோரும், உத்தியாபனஞ் செய்யாதோரும் விரத பலத்தை அடையார்.

திருச்சிற்றம்பலம்

## 16. அன்பியல்

410. அன்பாவது யாது?

ஒருவருக்குத் தம்மோடு தொடர்புடையவராய்த் தமக்கு இனியவராய் உள்ளவரிடத்தே நிகழும் உள்ள நெகிழ்ச்சியாம்.

411. உள்ளபடி ஆராயுமிடத்து நம்மோடு தொடர்புடையவராய் நமக்கு இனியவராய் உள்ளவர் யாவர்?

அநாதியே மலத்தினாலே மறைக்கப்பட்டுள்ள அறிவுந் தொழிலும் உடையவர்களாய்த் தம்வயத்த ரல்லாதவர்களாய் உள்ள பசுக்களாகிய நம்மோடு அநாதியே இரண்டறக் கலந்து நின்று, நமக் கெல்லாம் நித்தியானந்தப் பெருஞ் செல்வத்தைத் தந்தருள விரும்பி, தந் தொழில்களெல்லாந் தம் பயன் சிறிதுங் குறியாது நம் பயன் குறித்த தொழில்களாகவே கொண்டு. பெத்தநிலையிலே தாம் நம்முள்ளே மறைந்து நமக்குப் பின்னாகியும், முத்திநிலையிலே தம்மைத் தம்முள்ளே அடக்கித் தாம் நமக்கு முன்னாகியும், இப்படியே என்றும் உபகரிக்கும் இயல்புடைய பெருங்கருணைக் கடலாகிய பசுபதி சிவபெருமான் ஒருவரே; ஆதலினால், அவரொருவரே நம்மோடு என்றுந் தொடர்புடையவராய், நமக்கு நம்மினும் இனியவராய் உள்ளவர்; அவருக்கே நாமெல்லாம் உடைமைப் பொருள்; அவருக்கே நாமெல்லாம் மீளா அடிமை: ஆதலினால், அவரிடத்திற்றானே நாமெல்லாம் அன்பு செய்தல் வேண்டும்.

**412. நாம் சிவபெருமானிடத்து எப்பொழுது அன்பு செய்தல் வேண்டும்?**

இம்மனித சரீரம் பெறுதற்கு அரிய தாதலாலும், இது இக்கணம் இருக்கும் இக்கணம் நீங்கும் என்று அறிதற்கு அரிதாகிய நிலையாமையுடைய தாதலாலும் நாம் இடையறாது எக்காலமும் அன்பு செய்தல் வேண்டும்.

**413. சிவபெருமான் இம்மனித சரீரத்தை எதன் பொருட்டுத் தந்தருளினார்?**

தம்மை மனசினாலே சிந்திக்கவும், நாவினாலே துதிக்கவும், தம்மால் அதிட்டிக்கப்படுங் குருலிங்கசங்கமம் என்னும் மூவகைத் திருமேனியையுங் கண்களி

னாலே தரிசிக்கவும், கைகளினாலே பூசிக்கவுங் கும்பிடவும், தலையினாலே வணங்கவும், கால்களினாலே வலஞ் செய்யவும், தமது பெருமையையுந் தமது திருவடியார் பெருமையையுங் காதுகளினாலே கேட்கவுமே இம்மனித சரீரத்தைத் தந்தருளினார்.

414. சிவபெருமானிடத்து அன்பு எப்படி விளையும்?

பசுக்களாகிய நம்முடைய இலக்கணங்களையும், நம்மைப் பந்தித்த பாசங்களின் இலக்கணங்களையும், பசுபதியாகிய சிவபெருமானுடைய இலக்கணங்களையும், எத்துணையும் பெரிய சிவபெருமான் எத்துணையுஞ் சிறிய நமக்கெல்லாம் இரங்கி எளிவந்து ஒயாது என்றும் உபகரிக்கும் பெருங் கருணையையும் இவ்வியல்பின் அநந்த கோடியில் ஒரு கூறாயினும் உடையவர். பிறர் ஒருவரும் நமக் கில்லாமையையும் இடையறாது சிந்திக்கச் சிந்திக்க, நமக்கு அச் சிவபெருமானிடத்து அன்பு விளையும்.

415. சிவபெருமானிடத்தே அன்புடைமைக்கு அடையாளங்கள் எவை?

அவருடைய உண்மையை நினைக்குந்தோறுங்கேட்குந்தோறுங் காணுந்தோறுந் தன் வசமழிதலும், மயிர்க்கால்தோறுந் திவலை உண்டாகப் புளகங் கொள்ளலும், ஆனந்தவருவி பொழிதலும், விம்மலும், நாத்தழுதழுத்தலும, உரை தடுமாறலும் பிறவுமாம்.

416. இல்வாழ்க்கை முதலியவைகளிற் புகுந்து அவ்வவைகளுக்கு வேண்டுந் தொழில்கள் செய்வோருக்கு இடையறாத வழிபாடு எப்படிக் கூடும்? அவர் யாது செய்வார்?

கழைக்கூத்தன் கூத்தாடும் பொழுதும் அவன் கருத்து உடற்காப்பிலே வைக்கப்பட்டிருத்தல் போல, நாம் லௌகிக கருமம் செய்யும் பொழுதும் நமது கருத்துச்

சிவபெருமானிடத்தே வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்; இப்படிச் செய்யா தொழியின், மரண காலத்திலே சிவத்தியானஞ் சித்திப்பது அரிதரிது.

417. சிவபெருமானை வழிபடுவோர் மரிக்கும் பொழுது யாது செய்தல் வேண்டும்?

சுற்றத்தாரிடத்தும் பொருளினிடத்துஞ் சற்றாயினும் பற்று வையாது, சுற்றத்தாரைத் தூரத்தே இருத்தி விட்டுத், தாம் விபூதி தரித்து, மனங் கசிந்துருகக் கண்ணீர் பொழிய உரோமஞ் சிலிர்ப்பச் சிவபெருமானைத் தியானித்து, வேத சிவாகமங்களையேனுந் தேவார திருவாசகங்களையேனுஞ்சிவபத்தர்கள் ஓதக் கேட்டல் வேண்டும்.

418. அவர் மரிக்கும் பொழுது அவருக்கு யாது செய்தல் வேண்டும்?

அவருடைய புத்திரர் முதலானவர்களுள்ளே சிவ தீக்ஷையுடையவர், மனம் ஒரு சிறிதுங் கலங்காது, அவர் நெற்றியிலே சிதம்பர முதலிய புண்ணிய ஸ்தலத்து விபூதி சாத்தி, அவருடம்பிலே வில்வத் தடிமண் பூசி, அவர் வாயிலே கங்காதீர்த்தம்விட்டு, அவர் தலையைத் தமது மடிமீது கிடத்தி, அவர் செவியிலே அரு மருந்தாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தல் வேண்டும.

தேவாரம்

உற்றா ராருளரோ உயிர் கொண்டு போம் பொழுது
குற்றா லத்துறை கூத்தனல் லானமக்
குற்றா ராருள ரோ.

திருச்சிற்றம்பலம்

சைவ வினாவிடை இரண்டாம் புத்தகம்
முற்றுப் பெற்றது

மெய் கண்ட தேவன் றிருவடி வாழ்க

உ

கணபதி துணை

# தோத்திரத் திரட்டு

## விநாயகக் கடவுள்

### திருப்புராணம்

எடுக்கு மாக்கதை யின்றமிழ்ச் செய்யுளாய்
நடக்கு மேன்மை நமக்கருள் செய்திடத்
தடக்கை யைந்துடைத் தாழ்செவி நீண்முடிக்
கடக்க ளிற்றைக் கருத்து ளிருத்துவாம். 1

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம். 2

உச்சியின் மகுடமின்ன வொளிர்தர நுதலினோடை
வச்சிர மருப்பினொற்றை மணிகொள்கிம் புரிவயங்க
மெய்ச்செவிக் கவரிதூங்க வேழமா முகங்கொண்டுற்ற
கச்சியின் விகடசக்கர கணபதிக் கன்புசெய்வாம். 3

வானுலகு மண்ணுலகும் வாழமறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம். 4

மலரயனுந் திருமாலுங் காணாமை மதிமயங்கப்
புலிமுனியும் பதஞ்சலியுங் கண்டுதொழப் புரிசடையார்
குலவுநடந் தருந்தில்லைக் குடதிசைக்கோ புரவாயில்
நிலவியகற் பகக்கன்றி னிறைமலர்த்தா ளிணை
போற்றி. 5

தன்னோங்கு மலரடியுந் தளிரோங்கு சாகைகளும்
மின்னோங்கு முகக்கொம்பும் விரவியகண் மலர்களுமாய்
மன்னோங்க நடமாடு மன்றோங்கு மதிற்சூடபாற்
பொன்னோங்கன் முன்னோங்கும் பொற்பமர்கற் பகம்
போற்றி. 6

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகுமா ழத்துப் பிள்ளையைப் பேணுவாம். 7

நல்ல சொற்பொரு ளாளு நடாத்தவும்
எல்லை காணரும் பேரின்ப மெய்தவும்
வெல்லும் யானை முகத்தினை மேவிவாழ்
வல்லபைக்குரி யானை வழுத்துவாம். 8

மாற்றரிய தொல்பிறவி மறிகடலி னிடைப்பட்டுப்
போற்றுமுதன் குரைகழற்றட் புணைபற்றிக் கிடந்
தோரைச்
சாற்றரிய தனிமுத்தித் தடங்கரையின் மிசையுய்ப்பக்
காற்றெறியுந் தழைசெவிய கடாக்களிற்றை வணங்
குவாம். 9

குழவி வெண்பிறை மிலைச்சியோற் குணித்த மாத
வத்தின்
இழைத டம்புன லருவிதா ழிமைய மீன்றளித்த
மழைம தர்த்தகண் மரகதப் பசும்பி டியயந்த
தழைம டற்செவித் தந்திபொற்சரண மேசரணம். 10

திங்களங் குழவி யென்னத் திகழொரு மருப்பிற் சோதி
தங்குகிம் புரிவ யங்கத் தடாமணி மகுடந் தாங்கித்
துங்கநல் வரங்க ளல்குந் தூயசீ ராம சேதுப்
புங்கவர் வணங்கும் யானை முகத்தனைப் போற்றல்
செய்வாம். 11

தொடர்கின்ற விடுக்கண்வெற்புத் தூகள்படத் துளைக்கு
அடர்கின்ற வதற்கு நாத னாகிய வைங்கை முக்கட் [மேலோன்]
படர்வென்றிப் பகவன் முன்னைப் பவமுதற் படியினெல்லா
விடர்நின்றும் புரக்க வெம்மை யெங்கணு மெந்த ஞான்றும். 12

நெடியவெழு பவக்கடலை யுழக்கிவினைக்
கிரிநூறி நீங்கா தோங்குங்
கொடியகுணம் புலன்கரண முதலான
பகைப்படையைக் குலைய மோதி
அடியவர்தங் கருத்தளிசூழ்ந் தாவிக்கக்
கருணைமத வாறு பாயும்
படிபுகழுந் தில்லைவனக் கற்பகக்குஞ்
சரத்திருநாள் பணிதல் செய்வாம். 13

நிலம்போற்றுங் பனிக்கிரண நிலாவணிந்த
நாயகனார் திருந்தர் வாழுஞ்
சலம்போற்று மதில்பொடித்த ஞான்றினிய
பூசனைகள் சால வாற்றிப்
புலம்போற்று மெய்யடியார் விநாயகனென்
றியம்புபதப் பொருளை நாட்டி
வலம்போற்று மணியிரத மூர்த்தமழ
விளங்களிற்றை வணக்கஞ் செய்வாம். 14

மாவேலை யாலமதை யடக்கித் தன்னுண்
மண்டிலக மண்டமெலாம் வளர்ந்து தானோர்
காவேயின் மூன்னுதித்த வரசிற் றோன்றிக்
கடம்புபுனை குருந்தினுக்குத் துணைய தாகித்
தூவேதந் தலைகாண்டற் கரிய தாகித்
துன்பமுறு பிறவியெனுந் துகள்சேர் வெய்யி
லாவேனைத் தன்னடியா திழலிற் சேர்த்த
அத்திதனைப் பத்திசெய்து முத்தி சேர்வாம். 15

## சிவபெருமான்

### தேவாரம்

( திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் )

பண் - பழந்தக்க ராகம்

மெய்யாகிப் பொய்மைநீக்கி வேதனை யைத்துறந்து
செய்யரானார் சிந்தையானே தேவா குலக்கொழுந்தே
நைவனாய னுன்றனாம நாளு நவிற்றுகின்றேன்
வையமுன்னே வந்துநல்காய் வலிவல மேயவனே. 16

ஆதியாய நான்முகனு மாலு மறிவரிய
சோதியானே நீதியில்லேன் சொல்லுவ துன்றிறமே
ஓதிநாளு முன்னையேத்து மென்னை வினையவலம்
வாதியாமே வந்துநல்காய் வலிவல மேயவனே. 17

நின்னடியே வழிபடுவா னிமலா நினைக்கருத
என்னடியா னுயிரைவெளவே லென்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய் நெடுங்கள மேயவனே. 18

பண் - கௌசிகம்

குற்றநீ குணங்கணீ கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்தமின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் னுரைப்பதென் முகம்மனே. 19

விரையார் கொன்றையினாய் விடமுண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழா யுமைநங்கையோர் பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திருவான்மி யூருறையும்
அரையா வுன்னையல்லா லடையாதென தாதரவே. 20

பண் - வியாழக்குறிஞ்சி

விண்ணுல காள்கின்ற விச்சா தரர்களும் வேதியரும்
புண்ணிய ரென்றிரு போதுந் தொழப்படும் புண்ணியரே
கண்ணிமை யாதன மூன்றுடை யீருங் கழலடைந்தோம்
திண்ணிய தீவினை தீண்டப் பெறாதிரு நீலகண்டம். 21

பண் - நட்டராகம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமேயிருங்கடல் வையத்து
முன்னை நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும்பாடியும்வழிபடு மதனாலே. 23

திருந்த லார்புரந் தீயெழச் செறுவன விறலின்க ணடியாரைப்
பரிந்து காப்பன பத்தியில்வருவன மத்தமாம் பிணிநோய்க்கு
மருந்து மாவன மந்திர மாவன வலஞ்சுழி யிடமாக
இருந்த நாயக னிமையவ ரேத்திய விணையடித்தலந்தானே.

பண் — சாதாரி

மருந்தவை மந்திர மறுமை நன் னெறியவை மற்றுமெல்லாம்
அருந்துயர் கெடுமவர் நாமமே சிந்தை செய்நன் னெஞ்சமே
பொருந்துதண் புறவினிற் கொன்றைபொன் சொரிதரத் துன்று பைம்பூஞ்
செருந்திசெம் பொன்மலர் திருநெல் வேலியுறை செல்வர்தாமே.

திருநாவுக்கரசு நாயனார்

திருத்தாண்டகம்

அப்பனீ யம்மைநீ யையனு நீ
அன்புடைய மாமனு மாமியு நீ
ஒப்புடைய மாதரு மொண்பொருளு நீ
ஒருகுலமுஞ் சுற்றமு மோரூரு நீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையா யென்னெஞ்சந் துறப்பிப்பாய் நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்து நீ
இறைவனீ யேறூர்ந்த செல்வனீயே. 25

எல்லா வுலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ. 26

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேயென் னுறவேயென் னூனே யூனின்
உள்ளமே யுள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோ யடையாவண்ணம்
ஆவடுதண் டுறையுறையு மமர ரேறே. 27

குலம்பொல்லேன் குணம்பொல்லேன் குறியும்பொல்லேன்
குற்றமே பெரிதுடையேன் கோல மாய
நலம்பொல்லே னான்பொல்லேன் ஞானி யல்லேன்
நல்லாரோ டிசைந்திலே னடுவே நின்ற
விலங்கல்லேன் விலங்கலா தொழிந்தே னல்லேன்
வெறுப்பனவு மிகப்பெரிதும் பேச வல்லேன்
இலம்பொல்லே னிரப்பதல்லா வீய மாட்டேன்
என்செய்வான் றோன்றினே னேழை யேனே. 28

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி

அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 29

திருநேரிசை

பழியுடை யாக்கை தன்னிற் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழ மாட்டேன் மாயமுந் தெளியகில்லேன்
அழிவுடைத் தாய வாழ்க்கை யைவரா லலைக்கப்பட்டுக்
கழியிடைந் தோணி போன்றேன் கடலூர் வீரட்டனாரே. 30

நீதியால் வாழ மாட்டேன் நித்தலுந் தூயேனல்லேன்
ஓதியு முணர மாட்டே னுன்னையுள் வைக்க மாட்டேன்
சோதியே சுடரே யுன்றன் றூமலர்ப் பாதங் காண்பான்
ஆதியே யலந்து போனே னதிகை வீரட்டனாரே. 31

அங்கத்தை மண்ணுக் காக்கி யார்வத்தை யுனக்கே தந்து
பங்கத்தைப் போக மாற்றிப்பாவித்தேன் பரமா நின்னைச்
சங்கொத்த மேனிச் செல்வா சாதனா ணாயே னுன்னை
எங்குற்றா யென்ற போதா விங்குற்றே னென்
கண்டாயே. 32

திருவிருத்தம்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியாவுன்னடி யென்மனத்தே
வழுவா திருக்க வரந்தர வேண்டுமிவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த
தீவண்ணனே. 33

படைக்கல மாகவுன் நாமத் தெழுத்தஞ்சென் நாவிற்
கொண்டேன்
இடைக்கல மல்லேன் எழுபிறப் புமுனக் காட்செய்
கின்றேன்
துடைக்கினும் போகேன் தொழுது வணங்கித் தூ
நீறணிந்துன்
அடைக்கலங் கண்டாய் அணிதில்லைச் சிற்றம் பலத்
தரனே. 34

சுந்தரமூர்த்தி நாயனார்

பண் - தக்கேசி

கங்கை வார்சடை யாய்கண நாதா
காலகாலனே காமனுக் கனலே
பொங்கு மாகடல் விடமிடற் றானே
பூத நாதனே புண்ணியா புனிதா
செங்கண் மால்விடை யாய்தெளி தேனே
தீர்த்த னேதிரு வாவடு துறையுள்
அங்க ணாவெனை யஞ்சலென் றருளாய்
ஆரெ னக்குற வமரர்க ளேறே. 35

குறைவி லாநிறை வேகுணக் குன்றே
கூத்த னேகுழைக் காதுடை யானே
உறவி லேனுனை யன்றிமற் றடியேன்
ஒருபி ழைபொறுத் தாலிழி வுண்டோ
சிறைவண் டார்பொழில் சூழ்திரு வாரூர்ச்
செம்பொ னேதிரு வாவடு துறையுள்
அறவ னேயெனை யஞ்சலென் றருளாய்
ஆரெ னக்குற வமரர்க ளேறே. 36

இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்க மில்புலி வானர நாகம்
வசுக்கள் வானவர் தானவ ரெல்லாம்

அயர்ப்பொன் றின்றிநின் றிருவடி யதனை
அர்ச்சித் தார்பெறு மாரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் றிருவடி யடைந்தேன்
செழும்பொழிற் றிருப்புன் கூரு ளானே; 37

பண் - பழம்பஞ்சுரம்

முத்தா முத்தி தரவல்ல முகிழ்மென் முலையா ளுமை பங்கா
சித்தா சித்தித் திறங்காட்டுஞ் சிவனே தேவர் சிங்கமே
பத்தா பத்தர் பலர்போற்றும் பரமா பழைய னூர்மேய
அத்தா வாலங் காடாவுன் னடியார்க் கடியே னாவேனே.

பண் - நட்டராகம்

எங்கே னுமிருந்துன் னடியே னுனைநினைந்தால்
அங்கே வந்தென்னொடு முடனாகி நின்றருளி
இங்கே யென்வினையை யறுத்திட் டெனையாளுங்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயானே. 39

பொன்னார் மேனியனே புலித்தோலை யரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேன் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுண் மாணிக்கமே
அன்னே யுன்னையல்லா லினியாரை நினைக்கேனே. 40

மறிசேர் கையினனே மதமாவுரி போர்த்தவனே
குறியே யென்னுடைய குருவேயுன் குற்றேவல்செய்வேன்
நெறியே நின்றடியார் நினைக்குந்திருக் காளத்தியுள்
அறிவே யுன்னையல்லா லறிந்தேத்த மாட்டேனே. 41

மண்ணீர் தீவெளிகால் வருபூதங்க ளாகிமற்றும்
பெண்ணோ டாணலியாய்ப் பிறவாவுரு வானவனே
கண்ணா ருண்மணியே கடவூர்தனுள் வீரட்டத்தெம்
அண்ணா வெண்ணமுதே யெனக்கார் துணை நீயலதே. 24

## திருவாசகம்

மெய்தா னரும்பி விதிர்விதிர்த் துன்விரை யார்க ழற்கென்
கைதான் றலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி
யுள்ளம்
பொய்தான் றவிர்த்துன்னைப் போற்றி சயசய போற்றி
யென்றுங்
கைதா னெகிழவி டேனுடை யாயென்னைக் கண்டு
கொள்ளே 43

கடையவ னேனைக் கருணையி னாற்கலந் தாண்டு
கொண்ட
விடையவனே விட்டிடுதி கண்டாய் விறல் வேங்கை
யின்றோல்
உடையவனே மன்னுமுத் தரகோச மங்கைக்கரசே
சடையவனே தளர்ந்தே னெம்பிரா னென்னைத் தாங்கிக்
கொள்ளே. 44

என்னையப் பாவஞ்ச வென்பவ ரின்றிநின் றெய்த்
தலைந்தேன்
மின்னையொப் பாய்விட் டிடுதிகண் டாயுவ மிக்கின்
மெய்யே
உன்னையொப் பாய்மன்னு முத்தர கோசமங் கைக்கரசே
அன்னையொப் பாயெனக் கத்தனொப் பாயென் னரும்
பொருளே 45

முழுமுத லேயைம் புலனுக்கு மூவர்க் குமென் றனக்கும்
வழிமுத லேநின் பழவடியார் திரள்வான் குழுமிக்
கெழுமுத லேயரு டந்திருக் கவிரங் குங்கொல் லோவென்
றழுமது வேயன்றி மற்றென்செய் கேன்பொன் னம்பலத்
தரசே. 46

மாவடு வரகின்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடு வாய்க்கும்பிக் கேயிடு வாய்நின் குறிப்பறியேன்

பாவிடை யாடு குழல்போற் கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடு வேனுடை யாயடி யேனுன் னடைக்கலமே. 47

கையாற் றொழுதுன் கழற்சே வடிகள் கழுமத் தழுவிக்கொண்
டெய்யா தென்றன் றலைமேல் வைத்தெம் பெருமான் பெருமானென்
றையா வென்றன் வாயா லரற்றி யழல்சேர் மெழுகொப்ப
ஐயாற் றரசே யாசைப் பட்டேன் கண்டா யம்மானே. 48

சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில் சூழ் பெருந்துறையா யடியேனான்
உடையானே யுனையல்லா துறுதுணைமற் றறியேனே. 49

உணர்ந்தமா முனிவ ரும்பரோ டொழிந்தார்
உணர்வுக்குந் தெரிவரும் பொருளே
இணங்கிலி யெல்லா வுயிர்கட் குமுயிரே
ஏனைப்பிறப் பறுக்குமெம் மருந்தே
திணிந்தோ ரிருளித் றெளிந்தது வெளியே
திருப்பெருந் துறையுறை சிவனே
குணங்கடா மில்லா வின்பமே யுன்னைக்
குறுகினேற் கினியென்ன குறையே. 50

சோதியே சுடரே சூழொளி விளக்கே
சுரிகுழற் பணைமுலை மடந்தை
பாதியே பரனே பால்கொள்வெண் ணீற்றாய்
பங்கயத் தயனுமா லறியா
நீதியே செல்வத் திருப் பெருந் துறையின்
நிறைமலர்க் குருந்தமே வியசீர்
ஆதியே யடியே னாதரித் தழைத்தால்
அதெந்துவே யென்றரு ளாயே. 51

முத்தனே முதல்வா முக்கணா முனிவா
  மொட்டறா மலர்பறித் திறைஞ்சிப்
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்
  பரகதி கொடுத்தருள் செய்யுஞ்
சித்தனே செல்வத் திருப்பெருந் துறையிற்
  செழுமலர்க் குருந்தமே வியசீர்
அத்தனே யடியே னாதரித் தழைத்தால்
  அதெந்துவே யென்றரு ளாயே. 52

திருவிசைப்பா

பண் - பஞ்சமம்

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
  உணர்வுசூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண்மணிக் குன்றே
  சித்தத்துட் டித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
  அம்பல மாடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
  தொண்டனேன் விளம்புமா விளம்பே. 53

இடர்கெடுத்தென்னை யாண்டுகொண்டென்னுள்
  இருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி விளங்குந்
  தூயதற் சோதியுட் சோதீ
அடல்விடைப் பாகா வம்பலக் கூத்தா
  அயனொடு மாலறி யாமைப்
படரொளி பரப்பிப் பரந்துநின் றாயைத்
  தொண்டனேன் பணியுமா பணியே. 54

நீறணி பவளக் குன்றமே நின்ற
  நெற்றிக்கண் ணுடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
  வெள்ளமே மேருவில் வீரா

ஆறணி சடையெம் மற்புதக் கூத்தா
அம்பொன்செ யம்பலத் தரசே
ஏறணி கொடியெம் மீசனே யுன்னைத்
தொண்டனே னிசையுமா றிசையே. 55

கற்றவர் விழுங்கு கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவ ரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளங்
குளிரவென் கண்குளிர்ந் தனவே. 56

புவனநா யகனே யகவுயிர்க் கமுதே
பூரணா வாரணம் பொழியும்
பவளவாய் மணியே பணிசெய்வார்க் கிரங்கும்
பசுபதி பன்னகா பரணா
அவனிஞா யிறுபோன் றருள்புரிந் தடியே
னகத்திலு முகத்தலை மூதூர்த்
தளமா மணிப்பூங் கோயிலு மமர்ந்தாய்
தனியனேன் றனிமைநீங் குதற்கே. 57

## திருப்பல்லாண்டு

பண் – பஞ்சமம்

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடி
யார்கள்விரைந் துவம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்
காட்செய்மின் குழாம்புகுந்
தண்டங் கடந்த பொருளள வில்லதோ
ரானந்தவெள் ளப்பொருள்
பண்டு மின்றுமென் றுமுள்ள பொருளென்றே
பல்லாண்டு கூறுதுமே. 58

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டென் னும்பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 59

பாலுக்குப் பாலகனவேண் டியழுதிடப்
பாற்கடலீந் தபிரான்
மாலுக்குச் சக்கரமன் றருள்செய்தவன்
மன்னியதில் லைதன்னுள்
ஆலிக்கு மந்தணர்வாழ் கின்றசிற்
றம்பலமே யிடமாகப்
பாலித்துநட் டம்பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே. 60

## திருப்புராணம்

சொல்லுவ தறியேன் வாழிதோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந் தருளி யென்னை வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையி லின்ப வெள்ள மெனக்கருள் செய்தாய் போற்றி
தில்லையம் பலத்து ளாடுஞ் சேவடி போற்றி யென்ன 61

தன்மைபெரு கருணெறியே வந்தணைந்து நல்லூரின்
மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும் பொழுதில்
உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோ மென்றவர்தஞ்
சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான். 62

அண்ண லேயெமை யாண்டுகொண் டருளிய வமுதே
விண்ணி லேமறைந் தருள்புரி வேதநா யகனே
கண்ணி னாற்றிருக் கயிலையி லிருந்தநின் கோலம்
நண்ணி நான்றொழ நயந்தருள் புரியெனப் பணிந்தார் 63

ஆலமே யமுத மாகவுண்டு வானவர்க் களித்துக்
காலனை மார்க்கண் டற்காக காய்ந்தனை யடியேற்
கின்று
ஞாலநின் புகழே யாக வேண்டு நான்மறைக ளேத்துஞ்
சீலமே யால வாயிற் சிவபெருமானே யென்றார். 64

தண்ணளிவெண் குடைவேந்தன் செயல்கண்டு தரியாது
மண்ணவர்கண் மழைபொழிந்தார் வானவர்பூ மழை
பொழிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே யணிவீதி மழவிடைமேல்
விண்ணவர்க டொழநின்றான் வீதிவிடங்கப் பெருமான் 65

சடைமருங்கி லிளம்பிறையுந் தனிவிழிக்குந் திருநுதலும்
இடமருங்கி லுமையாளு மெம்மருங்கும் பூதகணம்
புடைநெருங்கும் பெருமையுமுன் கண்டரசன் போற்றி
சைப்ப
விடைமருவும் பெருமானும் விறல்வேந்தற் கருள்
கொடுத்தான். 66

பூவண்ணம் பூவின்மணம் போலமெய்ப் போதவின்ப
மாவண்ண மெய்கொண்ட வன்றன்வலி யானைதாங்கி
மூவண்ண றன்சன்னிதி முத்தொழில் செய்வவாளா
மேவண்ண லன்னான் விளையாட்டின் வினையை
வெல்வாம். 67

பூவி னாயகன் பூமக ணாயகன்
காவ னாயக னாதிக் கடவுளர்க்
காவி னாயக னங்கயற் கண்ணிமா
தேவி நாயகன் சேவடியேத்துவாம்; 68

சீர்பூத்த செழுந்தரங்கத் தீம்புனன்மந் தாகினி கண்
டேனார் கொன்றைக்
தார்பூத்த செஞ்சடையி லணிந்துமதன் மேல்விழைவு தணி
யானாகிக்
கார்பூத்த விருவிசும்பிற் கங்கைநதி சூழ்இடத்த காசி
வாழும்
ஏர்பூத்த தனிமுதலி னிணையடிப்பூங் கமலமல ரேத்து
வாமே. 69

உமாதேவியார்

கரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல்போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்கும்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்புமனங் குழைத்தென்னை யெடுத்தாண்ட
அங்கயற்க ணெம்பி ராட்டி
அருப்புமிள நகைபோற்றி யாரணநூ
புரஞ்சிலம்பு மடிகள் போற்றி. 70

பங்கயற்கண் ணரியபரம் பரனுருவே
தனக்குரிய படிவ மாகி
இங்கயற்க ணுலகமெண் ணிறந்த
சராசரங்க ளீன்றுந் தாழாக்
கொங்கையற்கண் மலர்க்கூந்தற் குமரிபாண்
டியன்மகள்போற் கோலங் கொண்ட
அங்கயற்க ணம்மையிரு பாதப்போ
தெப்போது மகத்துள் வைப்பாம். 71

அலகிலாக் கருணை யென்னு மந்தளி ரீன்று தொல்லை
உலகெலாம் பூத்துக் கங்கை யுவட்டெடுத் தொழுகுஞ்
சென்னி
மலையினிற் படர்ந்த பச்சை மரகதக் கொடியை ஞானக்
கலையமு தொழுகு தீஞ்சொற் கனியினைக் கருத்துள்
வைப்பாம். 72

சபாபதி

ஆதியாய் நடுவு மாகி யளவிலா வளவு மாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா வேக மாகிப் பெண்ணுமா யாணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி
யோற்றி. 73

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற் றம்பலத் துணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி
போற்றி. 74

பூங்கமலத் தயனுமலர் புண்டரீகக் கண்ணானுந்
தாங்குபல புவனமுமேற் சகலமுமா யகலாக
ஓங்குமொளி வெளியேநின் றுலகுதொழ நடமாடும்
தேங்கமழும் பொழிற்றில்லைத் திருச்சிற்றம் பலம்
போற்றி. 75

ஆரணங்கண் முடிந்தபதத் தானந்த வொளியுலகிற்
காரணங்கற் பனைகடந்த கருணை கிரு வருவாகிப்
பேரணங்கி னுடனாடும் பெரும்பற்றப் புலியூர்சேர்
சீரணங்கு மணிமாடத் திருச்சிற்றம் பலம்போற்றி. 76

தற்பரமாய்ப் பரபதமாய்த் தானிலது பூதியதாய்
அற்புதமா யாரமுதா யானந்த நிலயவொளிப்
பொற்பினதாய்ப் பிறிவிலதாய்ப் பொருளாகி யருளாகுஞ்
சிற்பரமா மம்பரமாந் திருச்சிற்றம் பலம்போற்றி. 77

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
ஏராரு மணிமன்று ளெடுத்ததிரு வடிபோற்றி. 78

நீர் தாங்கு பார் தாங்கு நெடுமாலு மலரயனு நிரந்து
போற்ற
வார் தாங்கு புளகமிகு களபமுலை மலைவளிதை மகிழ்ந்து
காணத்
தார் தாங்கு சடாமவுலி நிலவெறிப்பப் பொதுவினடந்
தயங்கா நிற்குஞ்
சீர் தாங்கு வேதாந்த நாதாந்தப் பரஞ்சுடரைச் சிந்தை
செய்வாம். 79

உருவமொரு நான்காகி யுருவருவத் திருவுருவ மொன்றே
யாகி
அருவமொரு நான்காகி யப்பாலா யெப்பாலு மளவிடாத
பொருவகந்த வுயிர்களெல்லாம் புணராது புணர்ந்தருளே
[ பொழிந் தெல்லோருங்
கருதரிய திருச்சிற்றம் பலத்திலகும் பேரொளியைக்
[ கருத்துள் வைப்பாம். 80

உண்மையறி வானந்த வுருவாகி யெவ்வுயிர்க்கு முயிராய்
[ நின்ற
றண்மையனல் வெம்மையெனத் தனையகலா திருந்துசரா
[ சரங்க ளீன்ற
வெண்மையுரு வாகியதன் னானந்தக் கொடிமகிழ்ச்சி
[ பெருக யார்க்கும
அண்மையதா யம்பலத்து ளாடியருள் பேரொளியை
[ யகத்துள் வைப்பாம். 81

சிவகாமியம்மையார்

பரந்தெழுந்த சமண்முதலாம் பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
அரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்
பால்
கரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. 82

இருபதமுந் துடையிடையுந் திகழுடையுந்
 தனதடமு மியல்பொற் பூணுங்
கருவிழியுஞ் செவ்வாயும் வெண்ணகையும்
 பசுந்தோளுங் கழுநீர்க் கையும்
பொருவருமங் கலநாணுங் கந்தரமும்
 புரிகுழலும் புனிதன் கண்ணும்
திருவருளு முலாவுமெழிற் சிவகாம
 சுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம். 83

## தக்ஷணாமூர்த்தி

மும்மலம் வேறுபட் டொழிய மொய்த்துயிர்
அம்மலர்த் தாணிழ லடங்கு முண்மையைக்
கைமமலர்க் காட்சியிற் கதுவ நல்கிய
செம்மலை யலதுளஞ் சிந்தி யாதரோ: 84

## சுப்பிரமணியக்கடவுள்

## திருப்புராணம்

பன்னிரு கரத்தாய் போற்றி பசும்பொன்மா மயிலாய்
 போற்றி
முன்னிய கருணை யாறு முகப்பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீக்காக் கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு ளிருக்குமா மணியே போற்றி:

சறங்குதிரைக் கருங்கடலுங் காரவுணப்
 பெருங்கடலுங் கலங்கக் கார்வந்
துறங்குகிரிப் பொருப்புஞ்சூ ருரப்பொருப்பும்
 பிளப்பமறை யுணர்ந்தோ ராற்றும்
அறங்குலவு மகத்தழலு மவுணமட
 வார்வயிற்றி னழலு மூள
மறங்குலவு வேலெடுத்த குமரவேள்
 சேவடிகள் வணக்கஞ் செய்வாம்: 86

விடலரிய பெருந்தெய்வச் சிறைமீள
மறைமுனிவர் விண்ணோர் வாழ
மடலவிழ்கற் பகநிழலு மரசிருப்பு
மமருலகு மகவா னெய்தக்
கடலுததி யோலமிடக் கிரிவிழச்
சூரனுரங் கலங்கச் செங்கை
அடலயில்வேல் பணிகொண்ட வொருகுமர
னிருசரண மகத்துள் வைப்பாம். 67

## திருப்புகழ்

முத்தைத்தரு பத்தித் திருநகை
யத்திக்கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர எனவோது

முக்கட்பர மற்குச் சுருதியின்
முற்பட்டது கற்பித் திருவரு
முப்பத்துமு வர்க்கத் தமரரு மடிபேணப்

பத்துத்தலை தத்தக் கணைதொடு
மொற்றைக்கிரி மத்தைப் பொருதொரு
பட்டப்பகல் வட்டத் திகிரியி லிரவாகப்

பத்தற்கிர தத்தைக் கடவிய
பச்சைப்புயல் மெச்சித் தருபொருள்
பட்சத்துடன் ரட்சித் தருளுவ தொருநாளே

தித்தித்தெய வொத்தப் பரிபுர
நிர்த்தப்பதம் வைத்துப் பயிரவி
திக்கொட்க நடிக்கக் கழுகொடு கழுதாடத்

திக்குப்பரி யட்டப் பயிரவர்
சித்ரப்பவு ரிக்குத் திரிகடக
தொக்குத்தொகு தொக்குத் திரிகடக எனவோதும்

கொத்துப்பறை கொட்டக் களமிசை
குக்குக்குகு குக்குக் குகுகுகு
குத்திப்புதை புக்குப் பிடியென முதுகூகை

கொட்புற்றெழு நட்புற் றவுணரை
வெட்டிப்பலி யிட்டுக் குலகிரி
குத்துப்பட வொத்துப் பொரவல பெருமாளே 88

கருவடைந்து பத்துற்ற திங்கள்
வயிறிருந்து முற்றிப் பயின்று
கடையில் வந்துதித்துக் குழந்தை வடிவாகிக்

கழுவியங்கெ டுத்துச் சுரந்த
முலையருந்தி விக்கிக் கிடந்து
கதறியங்கைக் கொட்டித் தவழ்ந்து நடமாடி

அரைவடங்கள் கட்டிச் சதங்கை
யிடுகுதம்பை பொற்சுட்டி தண்டை
யவையணிந்து முற்றிக் கிளர்ந்து வயதேறி

அரியபெண்க ணட்பைப்பு ணர்ந்து
பிணியுழன்று சுற்றித் திரிந்த
தமையுமுன்கிரு பைச்சித் தமென்று பெறுவேனோ

இரவியிந்த்ரன் வெற்றிக் குரங்கி
னரசரென்று மொப்பற் றவுந்தி
யிறைவனெண் கினுக்குக் கர்த்த னென்று
நெடுநீலன்

எரியதென்று ருத்ரற் சிறந்த
வனுமனென்று மொப்பற்ற வண்ட
ரெவருமிந்த வர்க்கத்தில் வந்து புனமேவ

அரியதன்ப டைக்கர்த்த னென்று
மசுரர்தங் கிளைக்கட்டை வென்ற
வரிமுகுந்தன் மெய்ப்பித்த பண்பின் மருகோனே

அயனையும் படைத்துச் சினந்து
வுலகமும் படைத்துப் பரிந்து
வருள்பரங் கிரிக்குட் சிறந்த பெருமாளே 89

பாதி மதிநதி போது மணிசடை
நாத னருளிய குமரேசா
பாகு கனிமொழி மாது குறமகள்
பாதம் வருடிய மணவாளா
காது மொருவிழி காகமுற வருண
மாய னரிதிரு மருகோனே
கால னெனையணு காம லுனதிரு
காலில் வழிபட வருள்வாயே
ஆதி யயனொடு தேவர் சுரருல
காளும் வகைதரு சிறைமீளா
ஆடு மயிலினி லேறி யமரர்கள்
சூழ வரவரு மிளையோனே
சூத மிகவளர் சோலை மருவு
சுவாமி மலைதனி லுறைவோனே
சூர னுடலற வாரி சுவறிட
வேலை விடவல பெருமாளே. 90

இருவினையின் மதிமயங்கித் திரியாதே
எழுநரகி லுழலு நெஞ்சுற் றலையாதே
பரமகுரு வருணி னைந்திட் டுணர்வாலே
பரவுதரி சனையை யென்றற் கருளவாயே
தெரிதமிழை யுதவு சங்கப் புலவோனே
சிவனருளு முருக செம்பொற் கழலோனே
கருணைநெறி புரியு மன்பர்க் கெளியோனே
கனகசபை மருவு கந்தப் பெருமாளே; 91

அபசார நிந்தைபட் டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநானி னைந்தருள் பெறுவேனோ
இபமாமு கன்றனுக் கிளையோனே
இமவான்ம டந்தையுத் தமிபாலா
செபமாலை தந்தசற் குருநாதா
திருவாவி னன்குடிப் பெருமானே. 92

கருப்பத் தூறிப் பிறவாதே
கனக்கப் பாடுற் றுழலாதே
திருப்பொற் பாதத் தநுபூதி
சிறக்கப் பாலித் தருள்வாயே
பரப்பற் றாருக் குரியோனே
பரத்தைப் பாலுக் கணியோனே
திருக்கைச் சேவற் கொடியோனே
செகத்திற் சோதிப் பெருமானே; 93

## வைரவக்கடவுள்

உலகமளித்தல் சுதந்திரமன்றுவண முயர்த்தோற்
கெனவவன்சேய்
இலகுமுருவம்பொடித்தவன் பாவெழுந்துபடைப்புஞ்சுதந்
திரமன்
றலர்மென்வனையாற்கெனவவனையரங்கத்திசை
மாமுகவாக்கிப்
பலரும்வெருவப்பொழிநெய்த்தோர்ப்பயிக்கம் புகுந்தோன்
பதம்பணிவாமா; 94

## திருநந்திதேவர்

அங்கணன் கயிலை காக்கு மகம்படித் தொழின்மை பூண்டு
தங்குரு மரபுக் கெல்லா முதற்குரு நாத னாகிப்
பங்கயந் துளவ நாறும் வேத்திரப் படைபொறுத்த
செங்கையம் பெருமா னந்தி சிரடிக் கமலம் போற்றி; 95

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பரசமய கோளரியைப் பாலறா வாயனைப் பூம்பழனஞ் சூழ்ந்த
சிரபுரத்துத் திருஞான சம்பந்தப் பெருமானைத் தேய மெல்லாங்
குரவையிடத் தமிழ்வேதம் வரித்தருளுங் கவுணியர்தங் குலதீபத்தை
விரவியெமை யாளுடைய வென்றிமழ விளங்களிற்றை விரும்பிவாழ்வாம். 96

## திருநாவுக்கரசு நாயனார்

இடையறாப்பேரன்புமழைவாருமிணை விழியுமுழவா ரத்திண்
படையறாத்திருக்கரமுஞ்சிவபெருமான்றிருவடிக் கேபதித்த நெஞ்சம
நடையறாப்பெருந்துறவும்வாகீசப்பெருந்தகைதன் ஞானப் பாடற்
றொடையறாச்செவ்வாயுஞ்சிவவேடப் பொலிவழகுந்துதித் துவாழ்வாம். 97

## சுந்தரமூர்த்தி நாயனார்

ஒருமணத்தைச் சிதைவுசெய்து வல்வழக்கிட்
டாட்கொண்ட வுவனைக் கொண்டே
இருமணத்தைக் கொண்டருளிப் பணிகொண்ட
வல்லான வெல்லா மூய்யப்
பெருமணச்சீர்த் திருத்தொண்டத் தொகைவிரித்த
பேரருளின் பெருமா னென்றுந்
திருமணக்கோலப்பெருமான் மறைப்பெருமா
னெமதுகுல தெய்வ மாமால். 98

## மாணிக்கவாசக சுவாமிகள்

பெருந்துறையிற் சிவபெருமா னருளுதலும்
பெருங்கருணைப் பெற்றி நோக்கிக்
கரைந்துகரைந் திருகண்ணீர் மழைவா ரத்
துரியநிலை கடந்து போந்து
திருந்துபெருஞ் சிவபோகக் கொழுந்தேறல்
வாய்மடுத்துத் தேக்கிச் செம்மாந்
திருந்தருளும் பெருங்கீர்த்தி வாதவூ
ரடிகளடி யிணைகள் போற்றி. 99

## நால்வர்

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்
போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி. 100

## அறுபத்துமூவர்

ஒப்பி லாதுயர் விகந்தவ னுவந்தினி தருள
அப்பு ராதனன் றோழனா மருண்மொழிக் கவிஞன்
செப்புமேன் மையிலொன்பதிற் றெழுவர்செம்மலர்த்தாள்
வைப்பி னாவினும னத்தினுஞ் சிரத்தினு மணப்பாம். 101

## சண்டேசுரர்

பொன்னங் கடுக்கை முடிவேய்ந்த புனிதற் கமைக்கும்
பொருளன்றி
மின்னும் கலனா டைகள் பிறவும் வேறு தனக்கென்
றமையாமே
மன்னுந் தலைவன் பூசனையின் மல்கும் பயனை
யடியார்கள்
துன்னும்படி பூசனை கொள்ளுந் தூயோனடித் தாமரை
தொழுவாம். 102

## சரசுவதி

பழுதகன்ற நால்வகைச் சொன் மலரெடுத்துப்
பத்திபடப் பரப்பித் திக்கு
முழுதகன்று மணந்துசுவை யொழுகியணி
பெறமுக்கண் மூர்த்தி தாளிற்
றொழுதகன்ற வன்பெனுநார் தொடுத்தலங்கல்
சூட்டவரிச் சுரும்புந் தேனுங்
கொழுதகன்ற வெண்டோட்டு முண்டகத்தா
ளடி முடிமேற் கொண்டு வாழ்வாம். 103

## இலக்குமி

செங்கமலப் பொலந்தாதிற் றிகழ்ந்தொளிரு
மெழின்மேனித் திருவே வேலை
யங்கணுல கிருடுரக்கு மலர் கதிராய்
வெண்மதியா யமரர்க் கூட்டும்
பொங்கழலா யுலகளிக்கும் பூங்கொடியே
நெடுங்கானிற் பொருப்பின் மண்ணில்
எங்குளை நீ யவணன்றோ மல்லல்வளஞ்
சிறந்தோங்கி யிருப்ப தம்மா. 104

## சூரிய மூர்த்தி

விளங்குதண்டி முதலோராற் சேவிக்கப் படுவோன்
விமலன்முத லாற்சிங்க பதாசனத்தின் மேலோன்
களங்கமிலாத் தீத்தைதமுதற் சத்திகளை சகிதன்
கருதருண மணியொளியன் கடோற்கான்மமூர்த்தி
துணைக்களிறன் னங்கந்தன் வங்கமெனுங் கிரகந்
தொகுமுடுவா தியசூழச் சுவேதகஞ்சத் திவர்ந்தோன்
வளைகொள்சுவே தாம் புசத்தோட் கரனிருதல் விழியோன்
வருசிவசூ ரியன்காக்க மகிழ்ந்தடியேன் களையே 105

## சேக்கிழார் நாயனார்

அண்டவாணர்தொழு தில்லையம்பலவர்
  அடியெடுத்துலகெ லாமெனத்
தொண்டர்சீர்பரவு சேக்கிழான்வர்சை
  குன்றுகுன்றைநக ராதிபன்
தண்டகாதிபதி திருநெறித்தலைமை
  தங்குசெங்கைமுகில் பைங்கழற்
புண்டரீகமலர் தெண்டனிட்டுவினை
  போக்குவார்பிறவி நீக்குவார். 106

தொகையாநா வலூராளி தொடுத்த திருத்தொண்டப் பெருமை
வகையால்விளங் கவுயர்நம் பியாண்டார் வகுப்பமற் றதனைத்
தகையாவன்பின் விரித்துலகோர் தம்மை யடிமைத்திறப் பாட்டின்
உகையாநின்ற சேக்கிழா னொளிர்பொற் கமலத்தாள் பணிவாம். 107

## மெய்கண்டதேவர்

அல்லாத பரசமய வலகைத்தேர் விண்டகல
  வகல்புனற் பெண்ணை யயல் சூழ்வெண்ணெய்ப்
பொல்லாத விபமுகத்துப் புத்தே டன்பாற்
  புனிதசிவா கமப்பொருண்மை பொருந்தவாய்ந்து
நில்லாத நிலையிதுமற் றென்று மொன்றாய்
  நிற்குநிலை யிதுவெனமெய்ந் நெறிதேர்ந்தியாரும்
வெல்லாத சிவஞான போதஞ் சொன்ன
  மெய்கண்டான் சரணமுடி மீதுகொள்வாம். 108

திருச்சிற்றம்பலம்

தோத்திரத் திரட்டு முற்றுப் பெற்றது

# திருநீற்றுப் பதிகம்

திருச்சிற்றம்பலம்

பண் - காந்தாரகம்

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திருவால வாயான் திருநீறே:

வேதத்தி லுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தருவது நீறு உண்மையி லுள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயான் திருநீறே:

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ வினியது நீறு
சித்தி தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 3

காண வினியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி யணிபவர்க் கெல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணந் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணந் தருவது நீறு திருவால வாயான் திருநீறே. 4

பூச வினியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச வினியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கொடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திருவால வாயான் திருநீறே. 5

அருத்தம தாவது நீறு அவல மறுப்பது நீறு
வருத்தந் தணிப்பது நீறு வான மளிப்பது நீறு
பொருத்தம தாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திருவால வாயான் திருநீறே:

எயிலது வட்டது நீறு இருமைக்கு முள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கிய மாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தம தாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத் தால வாயான் திருநீறே. 7

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவண மாவது நீறு பாவ மறுப்பது நீறு
தராவண மாவது நீறு தத்துவ மாவது நீறு
அராவணங் குந்திரு மேனி யால வாயான் திருநீறே. 8

மாலொ டயனறி யாத வண்ணமு முள்ளது நீறு
மேலுறை தேவர்க டங்கண் மெய்யது வெண்பொடி நீறு
ஏலவு டம்பிடர் தீர்க்கும் இன்பந் தருவது நீறு
ஆலம துண்ட மிடற்றெம் மால வாயான் திருநீறே. 9

குண்டிகைக் கையர்க ளோடு சாக்கியர் கூட்டமுங் கூடக்
கண்டிகைப் பிப்பது நீறு கருத வினியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்துந் தகையது நீறு
அண்டத் தவர்பணிந் தேத்தும் ஆல வாயான் திருநீறே. 10

ஆற்ற லடல்விடை யேறும் ஆலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்னனு டலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே. 11

திருச்சிற்றம்பலம்

இத் திருநீற்றுப் பதிகத்தினாலே நாடோறும் நியமமாக அன்போடு விபூதி அபிமந்திரித்துத் தரித்துக்கொண்டு வந்தால் சுர முதலிய நோய்களும் பேய், பூதங்களால் விளையும் பல துன்பங்களும் கவலைகளும் பாவங்களும் நீங்கும்.

# கோளறு பதிகம்

திருச்சிற்றம்பலம்

பண் — பியந்தைக்காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கைமுடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 1

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 2

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து
உமையோடு வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
திருமகள் கலையதூர்தி சயமாது பூமி
திசைதெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 3

மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து
மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த வதனாற்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய் களான பலவும்
அதிகுண நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 4

நஞ்சணி கண்டனெந்தை மடவாட னோடு
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த வதனால்
வெஞ்சின வவுணரோடு முருமிடியு மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 5

வாள்வரி யதளதாடை வரிகோவ ணத்தர்
மடவா டனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த வதனாற்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 6

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பு முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த வதனால்

வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 7

வேள்பட விழிசெய்தன் றுவிடைமே லிருந்து
மடவா டனோடு முடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த வதனால்
ஏழ்கடல் சூழிலங்கை யரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கட னல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 8

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறு மெங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த வதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடன் மேருநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 9

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேல ணிந்தென்
உளமே புகுந்த வதனாற்
புத்தரோ டமணைவாதி லழிவிக்கு மண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே. 10

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெ றுன்னி
  வளர்செம்பொ னெங்கு நிகழ
நான்முக னாதியாய பிரமா புரத்து
  மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளு மடியாரை வந்து
  நலியாத வண்ண முரைசெய்
ஆனசொன் மாலையோது மடியார்கள் வானில்
  அரசாள்வ ராணை நமதே. 11

திருச்சிற்றம்பலம்

இக் கோளறு பதிகத்தை நாடோறும் நியமமாக அன்புடன் ஓதிக்கொண்டு வந்தால் கிரக பீடை, நோய் இராச பயம், சோர பயம், சத்துரு பயம், மிருக பயம், பூத பிசாச பயம், முதலியன வெல்லாம் நீங்கும். யாத்திரையில் இதனை ஓதினால், சகல விக்கினமும் நீங்கிப் பயன்கள் எல்லாம் சித்திக்கும்.

# திருவெம்பாவை

திருச்சிற்றம்பலம்

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
  சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
  மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தியவாழ்த் தொலி
                                                        போய்
வீதிவாய்க் கேட்ட லுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
  போதார மளியின் மேனின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாளென் னேயென்னே
  ஈதே யெந்தோழி பரிசேலோ ரெம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பா யிராப்பகனாம்
  பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
  சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
  கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் றில்லைச்சிற் றம்பலத்துள்
  ஈசனார்க் கன்பார்யா மாரேலோ ரெம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
  அத்த னானந்த னமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
  பத்துடையீ ரீசன் பழவடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
  எத்தோநின் னன்புடைமை யெல்லோ மறியோமோ
சித்த மழகியார் பாடாரோ நஞ்சிவனை
  இத்தனையும் வேண்டு மெமக்கேலோ ரெம்பாவாய்.

ஒண்ணித் திலநகையா யின்னம் புலர்ந்தின்றோ
  வண்ணக் கிளிமொழியா ரெல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோ மவ்வளவும்
  கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
  கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோ நீயேவந்
  தெண்ணிக் குறையிற் றுயிலேலோ ரெம்பாவாய். 4

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
  போலறிவோ மென்றுள்ள பொக்கங்களே பேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
  ஞாலமே விண்ணே பிறவே யறிவரியான்

கோலமு நம்மையாட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்
றோல மிடினு முணரா யுணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே யெழுப்புவ னென்றலு நாணாமே
போன திசைபகரா யின்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே யறிவரியான்
றானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே யுருகா யுனக்கே யுறுமெமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோரெம்பாவாய்.

அன்னே யிவையுஞ் சிலவோ பலவமரர்
உன்னற் கரியா னொருவ னிருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாவென் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை யென்னரைய னின்னமுதென் றெல்லோமுஞ்
சொன்னோங்கேள் வெவ்வேறா யின்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச சிலம்புங் குருகெங்கும்
ஏழி லியம்ப வியம்புவெண் சங்கெங்கும்
கேழல் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ
வாழியீ தென்ன வுறக்கமோ வாய்திறவாய்
ஆழியா னன்புடைமை யாமாறு மிவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற வொருவனை
ஏழைபங் காளனையே பாடேலோ ரெம்பாவாய். 8

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றவுன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோ மாங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே யெங்கணவ ராவா ரவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே யெமக்கெங்கோ னல்குதியேல்
என்ன குறையு மிலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாள மேழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே
பேதை யொருபாற் றிருமேனி யொன்றல்லன்
வேதமுதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலும்
ஓத வுலவா வொருதோழன் றொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனு ரேதவன்பே ராருற்றா ராரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்கா ணாரழல்போற்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குன்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ யாட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்க ளுய்யும் வகையெல்லா முய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பா யெமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநா மார்த்தாடுந்
தீர்த்தனற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தனிவ் வானுங் குவலயமு மெல்லோமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி

வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய வணிகுழன்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி யிருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய், 12

பைங்குவளைக் கார்மலராற் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தாற் பின்னு மரவத்தாற்
றங்கண் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியு மெங்கோனும் போன்றிசைத்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநஞ்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி யப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி யந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி யாடேலோ ரெம்பாவாய். 14

ஓரொருகா லெம்பெருமா னென்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகா லோவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவ ராமாறும்
ஆரொருவ ரிவ்வண்ண மாட்கொள்ளும் வித்தகர்தான்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்; 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை யாளுடையா ளிட்டி
டையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தெம்மை யாளுடையாள்
தன்னிற் பிரிவிலா வெங்கோமா னன்பர்க்கும்
முன்னி யவணமக்கு முன்சுரக்கு மின்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16

செங்க ணவன்பாற் றிசைமுகன்பாற் றேவர்கள்பால்
எங்கு மிலாததோ ரின்பநம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் மில்லங்க டோறு மெழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்க ணரசை யடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

அண்ணா மலையா னடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்
போற்
கண்ணா ரிரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ரொளிமழுங்கித் தாரகைக டாமகலப்
பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்
பாவாய். 18

உங்கையிற் பிள்ளை யுனக்கே யடைக்கலமென்
றங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் மச்சத்தால்
எங்கள் பெருமா னுனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க

எங்கை யுனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகலெங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே யெமக்கெங்கோ னல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோ ரெம்பாவாய்;

போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்
போற்றி யருளுகநின் னந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கு மீறா மிணையடிகள்
போற்றிமா னான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியா முய்யவாட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியா மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய்; 20

திருச்சிற்றம்பலம்

மார்கழித் திருவாதிரைக்கு முதலொன்பது நாளும் ஆன்மார்த்தம் பரார்த்தம் என்னும் இரண்டினும் இத் திருவெம்பாவை ஓதல் வேண்டும். திருவாதிரையிலே திருவெம்பாவை ஓதிப் பின்பு வழக்கப்படியே தேவாரம் முதலியனவும் ஓதல் வேண்டும்.

## மாகேசுர பூசையில் ஓதத் தக்க
# பெரியபுராணச் செய்யுள்

கொண்டுவந்து மனைப்புகுந்து குலாவு பாதம் விளக்கியே
மண்டு காதலி னாதனத்திடை வைத்த ருச்சனை செய்தபின்
உண்டி நாலு விதத்தி லாறு சுவைத்தி றத்தினி லொப்பிலா
அண்டர்நாயகர்தொண்டரிச்சையிலமுது செய்யவளித்துளார்

மண்ணினிற் பிறந்தார் பெறு பயன் மதிசூடும்
அண்ணலா ரடியார்த மையமுது செய்வித்தல்
உண்ணினா லவர்நல்விழாப் பொலிவு கண்டார்தல்
கண்மையா மெனிலுலகர் முன்வரு கெனவுரைப்பார்; 2

அல்லார் கண்டத் தண்டர்பிரா னருளாற் பெற்ற படிக்காசு
பல்லா றியன்ற வளம்பெருகப் பரம னடியா ரானார்கள்
எல்லா மெய்தி யுண்கவென விரண்டுபொழுதும் பறை
நிகழ்த்திச்
சொல்லாற் சாற்றிச் சோறிட்டார் துயர்கூர் வறுமை
தொலைத்திட்டார். 3

தனிவெள் விடைமேல் நெடுவிசும்பிற் றலைவர் பூத கண
நாதர்
முனிவ ரமரர் விஞ்சையர்கண் முதலா யுள்ளோர் போற்
றிசைப்ப
இனிய கறியுந் திருவமுது மமைத்தார் காண வெழுந்தருளிப்
பனிவெண் டிங்கள் முடி துலங்கப் பரந்த கருணை
நோக்களித்தார். 4

தேடிய மாடு நீடு செல்வமுந் தில்லை மன்றுள்
ஆடிய பெருமா னன்பர்க் காவன வாகு மென்று
நாடிய மனத்தி னோடு நாயன்மா ரணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக் குறைவறக் கொடுத்து வந்தார். 5

மருவு மன்பொடு வணங்கினர் மணிகண்டர் நல்லூர்த்
திருவி ழாவணி சேவித்துத் திருமடத் தடியார்
பெருகு மின்பமோ டமுதுசெய் திடவருள் பேணி
உருகு சிந்தையின் மகிழ்ந்துறை நாளிடை யொருநாள். 6

பண்பின் மிக்கார் பலரா யணையினும்
உண்ப வேண்டி யொருவ ரணையினும்
எண்பெ ருக்கிய வன்பா லெதிர்கொண்டு
தண்பு கூர்ந்தமு தூட்டு நலத்தினார். 7

தொண்டர் பலரும் வந்தீண்டி யுண்ணத் தொலையா
வமுதூட்டிக்
கொண்டு செல்ல விருநிதிய முவந்து கொடுத்துக் குறைநிரந்
தடைவார்

வண்டு மருவுங் குழலுமையாள் கேள்வன் செய்ய
தாளென்னும்
புண்டரீக மகமலரில் வைத்துப் போற்றும் பொற்பினார் -

தம்பரடி யாரணைந்தா லல்லதிரு வமுதளித்துஞ்
செம்பொன்னு நவமணியுஞ் செழுந்துகிலு முதலான
தம்பரிவி னாலவர்க்குத் தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் றிருவடிக்கீ ழுணர்வுமிக வொழுகுநாள். 9

காதலொடுந் தொழுதெடுத்துக் கொண்டு நின்று
கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்து பொங்க
நாதர் விரும் படியார்க ளானு நாளு
நல்விருந்தா யுண்பதற்கு வருக வென்று
நீதிப்பறை நிகழ்வித்துச் சென்ற தொண்டர்
திருவமுது கறிநெய்பா றயிரென் றின்ன
ஏதமுறா தினிதுண்ண வூட்டி யங்க
ணிருதிறத்துப் பெருந்தவரு மிருந்த நாளில்: 10

தூயதிரு வமுதுகனி கன்னலறு சுவைக்கறிநெய்
பாயதயிர் பாலினிய பண்ணியமுண் ணீரமுத
மேயபடி யாலமுது செய்விக்க மைசந்தடியார்
மாயிருஞா லம்போற்ற வருமிவர் பான் மனமகிழ்ந்தார்

ஆரணிந்த சடைமுடியார்க் காதிரைநா ளொறுமென்றும்
மேவருநறை வழிபாடு விளங்கியபூ சனைமேவி
நீறணியுந் தொண்டரணைந் தார்க்கெல்லா நிகழ்பசும்
பொன்
தாறுகுறை யாமலளித் தின்னமுது நுகர்விப்பார்: 12

ஆன வன்பர் தாமென்று மரனா ரன்பர்க் கமுதுசெய
மேன்மை விளங்கு போனகமும் விரும்பு கறிநெய் தயிர்
தீம்பால்
தேனி னினிய கனிகட்டி திருந்த வமுது செய்வித்தே
ஏனை நிதியம் வேண்டுவன வெல்லா மின்ப முறவளித்தார்

இன்ன வகையாற் பெரு நிதி யெல்லா மீச னடியார்கள்
சொன்ன சொன்ன படி நிரம்பக் கொடுத்துத் தூய போன கமுங்
கன்ன லறுநெய் கறிதயிர்பால் கனியுள் ளுறுத்தக் கலந் தளித்து
மன்னு மன்பி னெறிபிறழா வழித்தொண் டாற்றி வைகினார். 14

திருச்சிற்றம்பலம்



ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்

சைவப்பிரகாச அச்சகம், வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 60-00